www.padippakam.com

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# புதிய பூமி

පුදිය පූමි

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

PUTHIYA POOMI

சுற்று 10 | மே 2003 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 56

# சமாதான முன்னெடுப்புகளைத் தொடர புலிகளின் அதிருப்தி கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.



சமாதான பேச்சுவார்த்தைகளிலிருந்து தற்காலிகமாக விலகியிருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்ததை அடுத்து சமாதானத்தை நேசிப்பவர்கள் அதிர்ந்தனர்: சமாதானத்தின் எதிரிகள் மகிழ்ச்சியடைந்தனர். இந்த அறிவிப்பை அடுத்து பாதுகாப்பு சபையை கூட்டிய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க 1995ல் அமுல் செய்யப்பட்ட அவசரகால நிலைமை உள்ளிட்ட பலவிதமான பாதுகாப்பு நடவடிக்கைககளையும் மேற்கொள்ளும் படி முப்படைகளின் தளபதிகளிடம் கேட்டுக் கொண்டுள்ளார். ஐ.தே.மு. அரசாங்கம் பதவி ஏற்ற பிறகு யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு அரச-புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பிறகு மேற்படி பாதுகாப்பு கெடுபிடிகள் தளர்த்தப்பட்டன. சமாதானத்திற்கு எதிரான பேரினவாத சக்திகள் சமாதான பேச்சுவார்த்தைகளை எதிர்த்தது மட்டுமன்றி புலிகள் இயக்கத்தின் மேற்படி அறிவிப்பையும் கூட இனவாத பிரசாரத்திற்காக பயன்படுத்துகின்றனர். புலிகளுக்கு எதிரான சக்திகளும் அவைகளின் புலி எதிர்ப்பு பிரசாரத்தை மேலும் விரிவுபடுத்தியுள்ளன.

வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவது தொடக்கம் அரசாங்கம் ஒத்துக்கொண்ட எதனையும் நிறைவேற்றவில்லை என்ற அதிருப்தியை வெளிப்படுத்தியே புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைகளிலிருந்து தற்காலிகமாக விலகியிருக்கப் போவதாக அதன் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் பிரதமருக்கு அறிவித்திருந்தார். அந்த அறிவிப்பில் இருக்கும் நியாயப்பாட்டை விளங்கிக் கொண்டால் புலி எதிர்ப்பு பிரசாரத்தை செய்ய வேண்டிய தேவை ஏற்படாது. புலிகள் இயக்கம் சமாதான நடவடிக்கைகளை முற்றாக நிராகரிக்கவில்லையென்றும் மீண்டும் போர் தொடுக்கப் போவதில்லையென்றும் அறிவித்துள்ளமையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும். பின்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளிலும் இணக்கிக் கொண்ட விடயங்களை ஐ.தே.மு. அரசாங்கம் நிறைவேற்றவில்லை. அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி மக்களை மீளக்குடியேற அனுமதிக்காதது மட்டுமன்றி. பல புதிய இராணுவ முகாம்களை அமைப்பதில் பாதகாப்பு படையினர் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் அரசாங்க நிர்வாகத்தில் நிறுவனப்படுத்தப்பட்டிருக்கும் பேரினவாத நிலைப்பாடுகள் நிறுவனப்படுத்தப்பட்டிருக்கும் பேரினவாத நிலைப்பாடுகள் மாற்றமடையவில்லை. அவை சமாதான சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றியமைக்கப்படவில்லை. அரசும் புலிகளும் இணங்கிக் கொண்டதற்கு வாஷிங்டனில்

11ம் பக்கம் பார்க்க..

# சமாதானத்தின் எதிரி



இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் இயகத்திற்குமிடையிலான பேச்சுவார்த்தைகளில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் கலந்துகொண்டு வரும் அமைச்சர் மிலிந்த மொரகொடவின் நம்பகத்தன்மை குறித்து பலவிதமான கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. மிஸ்டர் கிளீன் என்றும் ஜெண்டில்மன் என்றும் ஐ.தே.கட்சியின் தமிழ் பிரமுகர்களால் அழைக்கப்படும் அவர் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பவ ராகவே செயற்பட்டு வருகிறார். இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அக்கறைகளை பாதுகாத்துக் கொள்ளவும். நிறை வேற்றவும் மிகவும் நுட்பமாக செயற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழைக்கக் கூடாது என்பதில் அமைச்சர் மிலிந்த மொரகொட பிடிவாதமாக இருந்ததாக கூறப்படுகிறது. அக்கூட்டத்தை வாஷிங்டனில் நடத்துவதற்கு ஒழுங்குகளை செய்தது இந்திய பிரதிநிதி ஒருவரை கலந்துகொள்ளச் செய்வதிலும் அவர் முக்கிய பங்காற்றியதாகத் தெரிகிறது.

அக்கூட்டத்திற்கு வாஷிங்டன் சென்ற அவர் இலங்கையின் பாதுகாப்பு இராணுவ விடயங்கள் தொடர்பாக அமெரிக்க பாதுகாப்புத் துறையினருடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக தெரிகிறது. அவர் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சராக இருந்த போதும் பாதுகாப்பு உட்பட பல விடயங்கள் தொடர்பாகவும் அமெரிக்காவுடன் தொடர்பு கொள்ளும் இலங்கை தலைவராக மாறி யுள்ளார் என்பது கவனிக்கப் பட வேண்டியதாகும்.

கரையோர பாதுகாப்பிற்கென அதி நவீன வசதிகளைக் கொண்ட போர்க் கப்பலொன்றை அமெரிக்கா இலங்கைக்கு அன்பளிப்பு செய்துள்ளது.

## கப்பல் வாங்க போன மிலிந்த

இலங்கையின் பொருளா தார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்பத் துறை அமைச்சர் மிலிந்த மொரகொட அமெரிக்க மேரிலாண்ட் மாநில போல்ரிமோ பிரதேசத்தின் கரையோரப் பாதுகாப்பு முகாமிற்கு விஜயம் செய்து அப்போர்க்கப்பலை பார்வையிட்டு இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அதனை பெற்றுக் கொண்டார். அத்துடன் அக்கப்பலை இயக்கும் பயிற்சியை இலங்கை கடற்படையினருக்கு வழங்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கையின் கடற்பரப்பில் மோதல்கள் நடைபெற்று சிக்கலான நிலைமைகளை தோற்றுவித்துள்ள நிலைமையிலேயே மேற்படி கப்பல் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இலங்கையின் கடற்பரப்பிற்கு வெளியில் தமிழீழ விடுதலை புலிகள் இயகத்தின் கப்பலொன்று தாக்கப்பட்டமை. அதற்குப் பிறகு சீன மீன்பிடி கப்பலொன்று

தொடர்ச்சி 9ம் பக்கம்

# பிரபாகரனை கொல்லுவதுதான் சமாதானமா?

மே மாத பேச்சுவார்த்தைகளிலும். யூன்மாத உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திலும் கலந்து கொள்ளப் போவதில்லை என விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்திருந்தது. புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் யுத்த நிறுத்த நடவடிக்கைகளும் இயல்புவாழ்க்கையை ஏற்படுத்தும் நடவடிக்கைகளும் அரசாங்க தரப்பில் எடுக்கப்படவில்லை என்பதாலும் அமெரிக்காவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடி கூட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டதனாலும் இம்முடிவு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதைவிட இலங்கையின் பாதுகாப்பு படையினர் விடுதலைப் புலிகளின் பிரதேசங்களுக்குள் ஊடுருவி அவ்வியக்க தலைவர் வே. பிரபாகரனைக் கொலை செய்ய முயற்சித்தனர் என்று அன்டன் பாலசிங்கம் குற்றம் சாட்டியிருந்தார். இக்குற்றச்சாட்டு மிகவும் பாரதூரமாக இருந்த போதும் அரசாங்க தரப்பில் எவ்வித பதிலுமளிக்கப்படவில்லை. சமாதான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட அரச தரப்பு தலைவர்களையும் போராட்டக் குழுக்களின் தலைவர்களையும் சமாதானத்தின் எதிரிகள் கொலை செய்த சம்பவங்கள் உலக அரசியல் வரலாறாகியுள்ளன. பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டு போராட்டக் குழுத் தலைவர்களை அரசாங்கங்கள் கொலை செய்த சம்பவங்களும் நடைபெறாமல் இல்லை. ஹெயிட்டி தேசிய விடுதலை இயக்கத் தலைவர் சமாதான நடவடிக்கைகளுக்கு தயாராகிக் கொண்டிருக்கும் போது அமெரிக்க ஏகாதிபத்திய சதியால் கொலை செய்யப்பட்டார் தென்னாபிரிக்க சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர் தென்னாபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் கிறிஸ் ஹானி ஏகாதிபத்தியவாதிகளால் கொலை செய்யப்பட்டார்.

ஆகவே சமாதான முன்னெடுப்புகளின் போது போராட்டத் தலைவர்களை சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அரசாங்கங்களும். ஏகாதிபத்திய சக்திகளும் கொலை செய்யாது என்று நம்புவது அறிவீனம். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை சமாதான முன்னெடுப்புகளின் போது கொலை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப் படலாம். ஆனால் சமாதான முன்னெடுப்புகளின் போது போராட்டத் தலைவர்களை இழப்பது என்பது ஈடு செய்ய முடியாத விலையாகிவிடும். இது குறித்து கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். போராட்டக் காலத்தினின்று சமாதான காலத்திலேயே போராட்டங்கள் பலவீனப்படுத்தப்படுவது சுலபம். அந்நடவடிக்கைகளில் ஒன்றாகவே போராட்டத் தலைவர்கள் சமாதான காலத்தில் கொல்லப்படுகின்றனர்.



சமாதான காலத்திலும் போராட்டத் தின் பலம். உயிர்ப்பு. நிதானம் எவ்வாறிருக்கிறது என்பதைப் பொறுத்தே சமாதான காலத்து இழப்புகளை தவிர்க்கவும். சவால்களுக்கு முகம் கொடுக்கவும் முடியும். முழுக்க முழுக்க மக்களிலும். சமாதானத்திற்கு ஆதரவான சக்திகளுடனும் கூட்டிணைந்து பலமாக இருப்பதன் மூலமே அச்சவால்களுக்கு முகம் கொடுக்க முடியும். சர்வதேச சமூகத்தின் ஆதரவை தேடுவது தந்திரோபாயமேயன்றி மூலோபாயம் அல்ல. சர்வதேச சமூகத்தின் ஆதரவை தேடுவதாக கூறிக் கொண்டு ஏகாதிபத்திய சக்திகளுக்கு இரையாவதும். அவற்றின் வளைகளில் மாட்டிக் கொள்வதும் விவேகமற்றது.

போராட்டங்களை ஏகாதிபத்தியங்கள் அங்கீகரிப்பது என்பது அவற்றின் தேவைக்காகவன்றி போராட்டங்களின் நியாயப்பாட்டிற்காகவல்ல என்பது சர்வதேச அரசியலின் அரிச்சுவடி ஆகும். ஏகாதிபத்தியத்தின் அங்கீகாரம் என்ற போதையில் போராட்டங்கள் தடம் புரண்டு விடக்கூடாது.

படிப்பகம்

www.padippakam.com



# தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் திறக்கப்பட மாட்டாது?

மலையகத் தமிழ் மக்களுக்கென வெளிநாட்டு உதவியுடன் அட்டன் நகரில் நிறுவப்பட்டு இயங்கி வந்த தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையம் கடந்த சில மாதங்களாக மூடப்பட்டிருக்கின்றது. அதனை மீண்டும் திறப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இந்நிலை தொடருமாகவிருந்தால் மலையகத் தமிழ் மக்களுக்குரியதான அப்பயிற்சி நிலையம் அவர்களுக்குரியதற்ற தாகலாம்.

அரசியற் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் மலையகத்தை அபிவிருத்தி செய்வதாக அமைச்சர்கள் ஆறுமுகம் தொண்டமானும் பெ. சந்திரசேகரமும் கூறினாலும் அவர்களினதும் அவர்களது ஆதரவாளர்களினதும் அதிகாரப் போட்டியினால் பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற் கொள்ளப்படாமலே கைவிடப்படுகின்றன. குறிப்பாக கல்வி நிறுவனங்களிலும் அவர்களது அரசியல் அதிகாரத்தை நிலைநாட்டும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதால் அந் நிறுவனங்கள் சுமூகமாக இயங்க முடிவதில்லை. அவ்வாறான போட்டியினாலேயே அட்டனில் இருக்கும் தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையம் மூடப்பட்டுள்ளது.

பொதுவாக தொழிற் பயிற்சி நிலையங்கள் தொழில். தொழிற் பயிற்சி அமைச்சின் கீழேயே இயங்கும். அவ்வாறு இயங்கும் நிலையங்கள் தனிச்சிங்கள நிறுவனங்களாகவே இயங்குகின்றன. நுவரெலியாவில் ஒரு தொழில்நுட்பக் கல்லூரி இயங்கினால் நடைமுறையில் தமிழ் மாணவர்கள் அங்கு பயிற்சி பெற முடிவதில்லை. மலையகத் தமிழ் மாணவர்களின் பின்தங்கிய நிலைமையை கருத்திற் கொண்டு வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியில் அட்டனில் அமைக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிறுவனம் அம்மாணவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதாக இருக்க வேண்டும் என்பதால் சிறிது காலத்திற்கு தோட்ட உள்ளகக் கட்டமைப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் அமைச்சரான ஆறுமுகம் தொண்டமான் பொறுப்பேற்று தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையம் எனப் பெயர் சூட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

பின்னர் சந்திரசேகரத்தின் பொறுப்பிலான சமூக அபிவிருத்தி அமைச்சிடம் கையளிக்கப்பட்டது. அதன் பிறகு சந்திரசேகரத்தின் ஆதரவாளர்களின் நடவடிக்கைகள் அங்கு அதிகரித்தன. அந்நிலையத்தில் திறந்த பல்கலைக் கழகத்தின் ஒரு மாவட்ட பிரிவு திறந்து வைக்கப்பட்டது.

இதனால் ஆத்திரமடைந்த ஆறுமுகம் தொண்டமானின் ஆட்கள் அந்நிலையத்தின் அதிபராக இருந்த மெய்யநாதன் என்பவரை பலாத்காரமாக வெளியேற்றி வேறு ஒருவரை அதிபர் ஆசனத்தில் இருத்திவிட்டு முழு நிலையத்தையும் இ.தொ.கா. ஆதரவாளர்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர்.

இந்த அடாவடித்தனத்தை எதிர்த்து உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட அதிபர் எந்தவொரு சட்ட நடவடிக்கைகளையும் எடுக்காமல் வெற்றிகரமாக பின்வாங்கி விட்டார். அவர் ஏற்கனவே கடமையாற்றியவாறு உதவி கல்வியதிகாரி பொறுப்பை ஏற்றுக் கொண்டு அமைதியாகி விட்டார். இ.தொ.கா. குண்டர்களால் அதிபரின் இருக்கையில் இருத்தப்பட்டவரும் அவரது பழைய கற்பித்தல் தொழிலுக்கு சென்றுவிட்டார்.

தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையத்தில் புரியப்பட்ட அடாவடித்தனத்திற்கு எதிராக நடத்தப்பட்ட கலந்துரையாடல்கள் இ.தொ.கா.வைச் சேர்ந்த பிரமுகர்களாலும் குண்டர்களாலும் குழப்பப்பட்டது. அதற்கு எதிராகவும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

# லஞ்சம் பறிக்கும் வலி வடக்கு கிராம அலுவலர்கள்

வலிகாமம் வடக்கு அதி பாதுகாப்பு பிரதேசத்திற்குள் சென்று தாம் வசித்த இடங்களை பார்வையிட சில கிராம அலுவலர்களை விஷேடமாக 'கவனிக்க' வேண்டுமென புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

வலிகாமம் வடக்கு பகுதியிலுள்ள பாதுகாப்பு வலயத்திற்குள் சென்று தாம் வசித்த வீடுகளை பார்வையிடவும். சேதவிபரங்களைத் திரட்டவும். சேதங்களைச் சான்றுப்படுத்தவும் மக்களுக்கு அவ்வப்பகுதி கிராம அலுவலர்களின் உதவி தேவைப்படுகிறது. அப்பகுதிக்குச் சென்று பார்வையிட சில கிராம அலுவலர்களுடன் செல்லும் போதே பாதுகாப்பு படையினர் அனுமதி வழங்குகின்றனர். அவ்வலுவலர்களுடன் சென்று சேதவிபரங்களை அவதானித்தாலேயே அவர்கள் சேதம் பற்றிய சான்றுதல் களை வழங்க முடியும். அவர்களின் சான்றுப்படுத்தலுடனேயே பிரதேச செயலகத்தில் நட்ட ஈட்டுக்கான விண்ணப்பங்களை பாரப்படுத்த முடியும். எனவே பல வழிகளிலும்

கிராம அலுவலர்களின்றி வலிகாமம் வடக்குப் பகுதி சேதங்களுக்கான நட்ட ஈட்டுக் கோரிக்கையை விடுக்க முடியாததால் அவர்களுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

அந்த குறிப்பிட்ட சேவைகளை ஆற்றுவதற்காக சில கிராம அலுவலர்களை. பொதுமக்கள் 'பிரத்தியேகமாக கவனிக்க' வேண்டுமாம். இல்லாவிட்டால் சேதங்களைப் பார்வையிட செல்லவும் முடியாது. நட்ட ஈட்டுக்கான விண்ணப்பங்களை பாரப்படுத்தவும் முடியாது.

அண்மையில் வவுனியாவிலிருந்து சென்ற சிலரை அப்பகுதிக்கு அழைத்தச் செல்ல குறிப்பிட்ட கிராம அலுவலர் மறுத்து விட்டதால் அவர்கள் வவுனியாவிற்கு திரும்பி வந்து விட்டனர். இதே போன்று கொழும்பிலிருந்து சென்ற சிலரும் கிராம அலுவலர்கள் ஒத்துழைக்காதபடியால் சேதவிபரங் களை பார்வையிட முடியாது கொழும்புக்கு திரும்பியிருக்கின்றனர். இவை பற்றி புதியபூமிக்கு முறைப் பாடுகள் கிடைந்துள்ளன.

வலிகாமம் வடக்கு அதி பாதுகாப்பு பகுதிக்கு மக்களை அழைத்துச் செல்லவும். சேதவிபரங்களை பார்வையிடவும். சேதங்கள் பற்றி சான்றுப்படுத்தவும் சில கிராம அலுவலர்கள் பெருந்தொகைப் பணத்தை லஞ்சமாகப் பெறுகின்றனர் என்று முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவை பற்றி பாராளுமன்ற உறுப்பினர்கள் பாதுகாப்பு படை அதிகாரிகள் போன்றோரிடம் முறைப்பாடுகள் செய்தும் அந்த குறிப்பிட்ட கிராம அலுவலர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர்களின் முறையற்ற. சட்டவிரோதமான பணம் பறிக்கும் கைங்கரியங்கள் தொடர்கின்றன.

# வவுனியா சுகாதார அதிகாரிக்கு நீதி வேண்டும்

ஒரே மாதத்தில் பிறப்பிக்கப்பட்ட மூன்று இடங்களுக்கான கட்டளைகளை ஆட்சேபித்து. அரசாங்க அலுவலர் ஒருவர் கடந்த இரண்டு வருடங்களாக சம்பளமெதுவுமின்றி நீதிக்காகப் போராடி வருகிறார்.

வவுனியாவிலுள்ள மாகாண சுகாதார சேவை பணிமனையில் நிகழ்ச்சி திட்டமிடல் அதிகாரியாக கடமையாற்றிய ரீ.சண்முகநாதன் என்பவரே மேற்படி பாரபட்சமான இடமாற்றங்களுக்குள்ளாகி பாதிக்கப்பட்டுள்ளார். தமிழ் ஆயுத குழுவொன்றின் உறுப்பினராக இருந்தவர் என்றும் தற்போது தமிழ் பாராளுமன்ற உறுப்பினரொருவரின் கையாளாக இருப்பவரென்றும் கூறப்படும் அக்குறிப்பிட்ட சுகாதார அலுவலகத்தில் லிகிதராக கடமையாற்றுபவரின் ஒருவருடன் ஏற்பட்ட தொழில் ரீதியான முரண்பாடு காரணமாக அரசியல் செல்வாக்குடன் வடக்கு கிழக்கு மாகாண சுகாதார. சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளரினால் 2000ஆம் ஆண்டு யூலை மாதம் 11ஆம் திகதி திருகோணமலை சுகாதார அலுவலகத்திற்கு இடமாற்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. யூலை மாதம் 14ஆம் திகதி கிளிநொச்சி சுகாதார அலுவலகத்திற்கு இடமாற்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. யூலை மாதம் 31ஆம் திகதி மன்னார் சுகாதார அலுவலகத்திற்கு இடமாற்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்ற கட்டளைகளை ஆட்சேபித்து வடக்கு கிழக்கு சுகாதார அமைச்சு. வடக்கு கிழக்கு மாகாண பொது சேவைகள் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு முறைப்பாடு செய்தும் பாதிக்கப்பட்டவருக்கு எவ்வித நீதியும் கிடைக்கவில்லை. மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட்மனு விசாரிக்கப்பட்ட போது அரச தரப்பில் ஒத்துக் கொள்ளப்பட்டபடி பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணம் எதுவும் வழங்கப்படவும் இல்லை.

மனித உரிமைகள் ஆணைக்குழு பாதிக்கப்பட்டவரின் முறைப்பாட்டை விசாரித்து வருகிறது. பாதிக்கப்பட்டவர் அந்த இடமாற்ற கட்டளைகள் சட்டத்திற்கு முரணாக நியாயமற்ற முறையில் பிறப்பிக்கப்பட்டதாகவும். அதனால் அவரின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் முறைப்பாடு செய்துள்ளார். வடக்கு கிழக்கு மாகாண சுகாதார. சுதேச வைத்தியத் துறையின் அமைச்சின் செயலாளர் ஒழுக்காற்று நடவடிக்கையின் அடிப்படையிலேயே மேற்படி இடமாற்ற கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டதாக கூறினாலும். எவ்வித விசாரணைகளும் மேற்கொள்ளப்படவுமில்லை. பாதிக்கப்பட்டவர் குற்றவாளியாக காணப்படவுமில்லை என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இடமாற்ற கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டதை ஆட்சேபித்து நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியதிலிருந்து கடந்த இரண்டு வருடங்களாக சம்பளமெதுவுமின்றி பாதிக்கப்பட்டவர் நீதிக்காகப் போராடி வருகிறார்.

அவருக்கு நீதி கிடைக்க வேண்டும். இதுபோன்ற அடாவடித்தனங்களும். யதேச்சாதிகார நடவடிக்கைகளும் இனிமேல் இடம்பெறாது தடுக்கப்படவும் வேண்டும்.

# நாலு நடக்கும் உலகிலே

நற்குணண்

## அப்பன் குதிருக்குள் இல்லை

இந்தியத் தூதருக்கு நோர்வே மீதும் கண்காணிப்புக் குழு மீதும் ஏகப்பட்ட கோபம்.

விடுதலைப் புலிகளே சீனக் கப்பலைத் தாக்கி அமிழ்த்தியுள்ள போது அதை மழுப்பி மூன்றாம் தரப்பு ஒன்று சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று சொல்வதன் மூலம். இந்தியாவுக்கும் சீனாவுக்கும் தகராறு ஏற்படுத்த அவர்கள் முயல்வதாக அவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

ஐயா துப்பறியும் தூதுவரே. இந்தியாவை இது வரை யாரும் குற்றஞ் சாட்டவில்லையே. மூன்றாம் தரப்பு யாராகவும் இருக்கலாமே. அது ஏன் இந்தியாவாக இருக்க வேண்டும் என்று யாரும் நினைக்க வேண்டும்? விடுதலைப் புலிகள் செய்ததற்கான ஆதாரம் இந்தியத் தூதுவரிடம் இருந்தால் அதை அவர் முன்வைக்க ஒரு தடையும் இல்லையே.

மறுபுறம். சீனாவுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே தகராறு மூட்டும் முயற்சி இது என்று இதுவரை யாரும் சொல்லவில்லை. சீனாகூட விடுதலைப் புலிகளைக் குற்றங் கூறவில்லை. பாதிக்கப்பட்ட தரப்பினர் காட்டுகிற நிதானங் கூட சம்பந்தப்படாததாகச் சொல்லுகிற இந்தியத் தரப்பில் இல்லை என்பதன் பொருள் என்ன?

மடியில் கனமிருந்தால்??

## எசமானர்களின் குரல்

ஆனந்த சங்கரியாருடைய பிரதிநிதி என்பது பற்றிக் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் இப்போது அவர் யாருடைய முகவர் என்பதில் மட்டும் இப்போது கருத்து வேறுபாடு குறைந்து வருகிறது.

விடுதலைப் புலிகளுடன் அவர் மோத முற்படுவதற்கான காரணம் நூலகத்தின் திறப்பு விழாவில் ஏற்பட்ட தடை மட்டுமல்ல. அமிர்தலிங்கத்துக்கு விழா எடுக்க இயலாததுமல்ல.

விடுதலைப் புலிகளுக்கும் இந்திய எசமானர்கட்கும் ஏக காலத்தில் விசுவாசமாக இருப்பது லேசுப்பட்ட காரியமில்லை. சங்கரியாரின் சங்கடம் ஏதென்றால். சந்திரிகாவோடு சல்லாபம் செய்யும் இந்தியாவுடனும் சந்திரிகாவோடு சமர்புரியும் ரணில் விக்கிரமசிங்கவுடனும் தனது எம்.பி.பதவிக்காகக் கடமைப் பாட்டுக் குரித்தான புலிகளுடனும் சமாளிப்பது தான்.

துணை சபாநாயகராவதன் மூலம் அரசியல் பேசுவதிலிருந்து ஒதுங்க இயலும். பதவிக்குப் பதவி. பாதுகாப்புக்குப் பாதுகாப்பு. கிடைத்தாலும். நிலைக்குமா?

இப்போதைக்கு அவரது புலிகளுக்கு எதிரான தன்மான உரைகள் சிங்களப் பேரினவாதிகட்கு அருமையான தீனி. மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்) கெட்டார்கள் போங்கள்!

## ஜெயலலிதாவுடன் ஒரு உரையாடல்

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜெயலலிதாவுடன் தமிழகத்தில் உள்ள அகதிகளைத் திருப்பி அனுப்புவது பற்றியும் தமிழக மீனவர்களை இலங்கை அரசாங்கம் கைது செய்வது பற்றியும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுடன் பேசி இருக்கிறார்.

இரண்டுமே எளிதாகத் தீர்க்கக் கூடியவை தாம். அகதிகள் திரும்பி வந்து வழமையான வாழ்க்கைக்கு மீள்வதற்கு ஏற்ற நிலைமைகளை இங்கு உண்டாக்க வேண்டும். அவர்கள் வாழ்ந்து வந்த பகுதிகளிலிருந்து ராணுவம் வெளியேறினால் அவர்களது மீளல் துரிதப்படும்.

தமிழக மீனவர்கள் இலங்கை மீனவர்களுடைய பிரதேசத்துக்குள் வந்து மீன் பிடியாவிட்டால் அவர்கள் கைது செய்யப்படமாட்டார்கள். இதைக் கண்டு பிடிக்க அவர்களுடைய இரண்டு மணி நேரச் சந்திப்பே அதிகம். ஆனாலும் நிச்சயமாகப் பிரச்சினைகளை மேலுஞ் சிக்கலாக்கும் வழிகளைக் கண்டு பிடிப்பதிற்தான் நேரத்தைச் செலவிட்டிருப்பார்கள் என்றுதான் நினைக்கிறேன்.

ஜெயலலிதாவுக்கு மிகவும் பிடித்தமான கச்சதீவுப் பிரச்சினை பற்றியும் பேசியிருப்பார்களா?

## குமாரதுங்க பாபா

இலங்கையின் சிங்களத் தேசியவாத அரசியல் தலைவர்களுக்கு இல்லாத ஒரு சிறப்பு சந்திரிகாவுக்கு இருந்தது. இது வரை இந்தியாவுக்குப் போய் சாயி பாபாவைத் தரிசிக்காத பெருமை அவருடையது. ஆனால் இந்த முறை அந்த வைராக்கியமும் போய்விட்டது.

இலங்கையின் பேரினவாத அரசியல் வாதிகட்கு மட்டுமில்லாமல் ராணுவப் பிரமுகர்கட்கும் ஆசி வழங்குகிற அரசியல் தரகர் சாய்பாபா இதுவரை இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையை மோசமாக்குகிற காரியங்களைத் தடுக்க ஏதாவது போதித்திருக்கிறாரா? போதித்த எதுவும் இவர்களது தலையில் ஏறவில்லையா? அல்லது சட்டைக் கைக்குள்ளிருந்து சாமான்களை வரவழைக்கும் வித்தையைப் பார்க்கத்தான் எல்லாரும் போகிறார்களா?

## தமிழர் தேசிய குஸ்தியணி

தமிழர் தேசியக் கூட்டணியின் நடவடிக்கைக் குழு ஏன் கூட்டப்படவில்லை என்பது பற்றி அரை மணிநேரமாக நாலு கட்சிகளது பிரதிநிதிகளும் 13-4-2003 மாலை நடந்த 'மின்னல்' தொலைக்காட்சி நிகழ்ச்சியில் காரசாரமாக விவாதித்தார்கள்.

கூட்டணியில் உள்ள குத்து வெட்டுகளை பாராளுமன்றக் குழு விவாதிக்க வேண்டுமா அல்லது நடவடிக்கை குழு செய்வதா என்றது பற்றி விவாதித்தார்கள். இவர்களின் விவாதத்தைப் பொறுத்தவரை. சக்தி தொலைக்காட்சியின் படப்பிடிப்புக் கூடம் தான் பொருத்தமான இடம் என்று தான் தோன்றுகிறது. சக்தி தொலைக்காட்சியின் சண்டைக்காட்சிகள் மிக்க சிறந்த பொழுதுபோக்கு நிகழ்ச்சியாக அது அமையும்.

அந்த நிகழ்ச்சியை மின்னல் என்று அழைக்க முடியாது. இடி என்று அழைக்கலாமா?

www.padippakam.com



# போட்டிப் பரீட்சையின்றி தொண்டராசிரியர்களுக்கு நியமனம் வேண்டும்

நாடெங்கும் தொண்டர் ஆசிரியர்கள் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்கும்படி கேட்டு ஆர்ப்பாட்டங்களையும் சத்தியாக்கிரகப் போராட்டங்களையும் செய்து வருகின்றனர். அவர்களுக்கு எவ்வித தகுதி காண் பரீட்சைகளையும் நடத்தாமல் உடனடியாக நியமனம் வழங்க வேண்டும் என்பது அவர்களின் நியாயமான சாதாரண கோரிக்கை ஆகும்.

தொண்டராசிரியர்களில் அதிகமானோர் கடந்த 5 வருடங்களாக சேவையாற்றி வருகின்றனர். அவர்களில் வெகு சிலருக்கு மட்டும் அந்தந்த பாடசாலை அபிவிருத்திச் சபைகள் சிறு தொகையை மாதாந்த அலவன்சாக வழங்குகின்றன. அவர்களைத் தவிர அதிகமானோர் எவ்வித கொடுப்பனவுமின்றி கடமையாற்றி வருகின்றனர்.

அவர்களுக்கு நியமனம் வழங்கப்படாதது மட்டுமன்றி. நிரந்தர நியமனம் வழங்கும்படி போராட்டங்களை நடத்தியவர்களில் பலர் பல இடங்களில் மூர்க்கமாக பொலிசாரினால் தாக்கப்பட்டுள்ளனர். நிரந்தர நியமனம் வழங்க முடியாவிட்டால் அவர்களை தொண்டராசிரியர்களாக எடுத்திருக்கக் கூடாது. அவர்களை இவ்வளவு காலமும் தொண்டராசிரியர்களாக பணி புரிய அனுமதித்து விட்டு நிரந்தர நியமனமும் வழங்காமல். அவர்களின் கோரிக்கைகளுக்கும் செவிமடுக்காமல். போராட்டத்தில் ஈடுபடும் அவர்களை தாக்குவது மிருகத்தனமாகும்.

கொடுப்பனவுகளும் இல்லாமல். அவர்களது காலத்தையும் வீணாக்கி தொண்டராசிரியர்களாக கடமையாற்றியவர்களை மதிப்பதே தகுந்த கைமாறாகும்.

க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்தவர்களுக்கென ஆசிரியர் நியமனம் வழங்கப்பட இருப்பதாகவும். தொண்டராசிரியர்கள் அதற்கு விண்ணப்பித்து போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தால் அவர்களுக்கு நிரந்தர நியமனமும் வழங்கப்படலாம் என்று கல்வியமைச்சு அறிவித்துள்ளது. க.பொ.த. உயர்தர ஆசிரியர் பதவிகளுக்கு நியமனம் வழங்கும் போது தொண்டர் ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அவர்கள் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்று கூறுவது எந்த வகையிலும் நியாயமானதாகாது.

தொண்டராசிரியர்களுக்கு எவ்வித பரீட்சைகளுமில்லாமல் க.பொ.த. உயர்தர ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும். அதன் மூலமே தொண்டராசிரியர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண முடியும்.

# மாணவர் போசாக்கின்மை

கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பிரபல பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் சம்பந்தமாக ஆய்வொன்றை மேற்கொண்ட டாக்டர் ரேணுகா ஜயதிஸ்ஸ 10% மாணவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

20% மாணவர்கள் காலை உணவு சாப்பிடுவதில்லை. அவர்களில் பெரும்பாலானோர் தூர இடங்களில் இருந்து வருகின்றனர். அவர்கள் ஒரு தேனீருடன் வேறு சிலர் ஒரு கோப்பை பாலுடன் காலை உணவை முடித்துக் கொள்கின்றனர். இடைவேளையின் போது ஏதோ சிற்றுண்டி சாப்பிடுகின்றனர். இரவு உணவை இரவு 8.00 மணியளவில் எடுக்கின்றனர். அதாவது பதினான்கு மணித்தியாலங்கள் பட்டினி கிடக்கின்றனர்.

20% மாணவர்கள் எதுவித உடற்பயிற்சியும் செய்வதில்லை. இந்த வகைப்பட்டவர்கள் பெரியவர்களான பின் பல்வேறு நோய்களுக்கும் உள்ளாவார்கள்.

குறித்த ஆய்வுகளை மேற்கொண்ட மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த டாக்டர் ரேணுகா மேலும் தகவல் தருகையில் 20% தாய்மார்களும் 30% கர்ப்பிணிகளும் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கின்றார்.

சுதந்திரம் பெற்று 55 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் மக்கள் நலனில் எதுவித அக்கறையும் செலுத்தாமல் வசதிபடைத்தவர்களின் நலன்களைக் கவனிப்பதிலும் "அரசியல் தலைமைகள்" தமது உற்றார் உறவினர்களுக்கு வசதி செய்து கொடுப்பதிலும் எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டின் வளங்களைச் சூறையாடியும் ஏனைய வளங்களைப் பல்தேசியக் கம்பனிகளுக்கு விற்பதிலுமே அக்கறையாய் உள்ளனர்.

# யாருக்காக இது யாருக்காக?

இலங்கையும் இந்தியாவும் செய்து கொண்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது இந்தியாவிற்கே சாதகமானது என நாம் பல தடவை "புதிய பூமி"யூடாக கருத்துத் தெரிவித்து வந்துள்ளோம். இப்போது இதை மறைமுகமாக கைத்தொழில் அமைச்சர் றோகித்த போகொல்லாகம ஒத்துக் கொண்டுள்ளார்.

செப்பு உலோகத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் உற்பத்தியாளர்கள் இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை துஷ்பிரயோகம் செய்வதாகவும் இது நாட்டிற்கு பெரும் பிரச்சினையெனவும் தெரிவித்துள்ளார்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் செப்பனிடப்படாத செப்பு இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டு அவற்றை மிக அற்பமான பெறுமதி சேர்க்கையுடன் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இரண்டு நாடுகளுக்குமிடையில் உள்ள உடன்படிக்கை காரணமாக சுங்கப் பகுதியினராலும் எதுவும் செய்ய முடியாதுள்ளது. இந்தக் கைத்தொழில் பாரிய சூழல் பிரச்சினையை ஏற்படுத்துகிறது. முறையான வழிகளில் பெறுமதி சேர்க்கை செய்தால் மேலதிக தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தும். தற்போது ஐந்து (5%) வீத பெறுமதி சேர்க்கையே மேற்கொள்ளப்படுகிறது. இதனைச் சுலபமாக (50%) வீதத்திற்கு உயர்த்தலாம்.

எதிர்விளைவை ஏற்படுத்தும் தொழில் முயற்சிகளுக்கு தான் எதிரானவன் எனத் தெரிவிக்கும் அமைச்சர் குறித்த ஒப்பந்தத்தைப் பாதிக்காத வகையில் இம்மாதிரியான ஏற்றுமதியைக் கட்டுப்படுத்த வழிவகைகள் காணப்போவதாகவும் தெரிவித்தார். கடந்த டிசம்பர் மாதம் ஐந்நூறு (500) தொன் கழிவு செப்பு இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்டதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இந்தச் செய்தியை எழுதிக் கொண்டிருக்கும் போது ஒரு நண்பர் தற்செயலாக என்னுடன் பேச்சுக் கொடுத்தார். அவர் தந்த தகவலின் படி ஐயாயிரம் தொன் செப்பு இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு பச்சைக் கொடி காட்டியுள்ளாராம் மேற்கூறிய அமைச்சர். மக்களைத் திருப்திப்படுத்தவே தான் இந்த ஏற்றுமதிக்கு எதிரானவன் எனப் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவதாகவும் தெரிய வருகிறது.

~ பொருளியல் நிருபர் ~

# குவைத்தில் எமது தூதுவர் என்ன செய்கிறார்?

குவைத் நாட்டில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ்சம் புகுந்திருந்த 62 பேர் புத்தாண்டு தினத்தில் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டனர். இவர்களுக்கான செலவை அரசாங்கமே பொறுப்பேற்றதென பெருமையுடன் தெரிவித்த ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் குறித்த 62 பேரும் தூதரகத்தில் ஒருவருடத்திற்கு மேல் தங்கியிருந்ததாகவும் இன்னமும் 362 பேர் அங்குள்ளதாகவும் தெரிவித்தது. மீதமாகவுள்ளவர்கள் எவ்வளவு காலமாக தூதரகத்தில் தங்கியிருக்கின்றனர் என்ற தகவல் வெளியிடப்படவில்லை.

நாடு திரும்பிய 62 பேரில் அனேகரிடம் கடவுச் சீட்டு இருக்கவில்லையெனவும் அவர்களிடம் கையில் பொருட்களும் இருக்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 62 பேரையும் இங்கு கூட்டி வர ஒரு வருடத்திற்கு மேல் கால அவகாசம் தேவைப்பட்டது ஏன். 62 பேருக்கும் 62 அவசரப் பத்திரம் தயாரிக்க ஒரு வருடம் தேவைப்பட்டதா? 62 நாட்கள் போதாதா? தூதரகத்தில் உள்ளவர்கள் ஒரு சில பேரைத் தவிர வியாபாரம் செய்வதாகவே தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன. ஒரு நபர் வேலை கொள்வோரின் துன்புறுத்தலுக் குள்ளானதாகத் தெரிவித்து தூதரகத்தில் தஞ்சம் புகுந்தால் அவரை அவரை ஒரு வேலை கொள்வோனிடம் ஒப்படைப்பார்கள். அதன் மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு "இலாபம்". ஆனால் சம்பந்தப்பட்ட வேலையாள் அடுப்பிலிருந்து நெருப்பிற்குள் என்ற கதை. இதன் காரணமாகவே மீதமுள்ள 362 பேரும் குவைத்திலுள்ள தூதரகத்தில் உள்ளனர். மாறி மாறி அவர்களுக்கு வெவ்வேறு இடங்கள் தேடுகிறார்கள் தூதரக அதிகாரிகள்.

நாம் எழுப்பும் கேள்வி இதுதான். வெளிநாட்டமைச்சு. தொழில் அமைச்சு. வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் அறவிடும் தொகை என்ன தேவைக்காகப் பயன்படுத்தப்படுகிறது? அரச செலவில் 62 பேரும் இங்கு கூட்டி வரப்பட்டது என்று தம்பட்டம் அடிப்பதேன்? குறித்த 62 பேரையும் மீதமுள்ள 362 பேரையும் வேலைக்கு அனுப்பிய முகவர்கள் யார்? அவர்களின் அனுமதிப் பத்திரம் ரத்துச் செய்யப்படுமா?

அங்குள்ள தூதரக அதிகாரிகளின் பெயர்ப் பட்டியலை வெளிநாட்டமைச்சு வெளியிடுமா? வெளிநாடுகளில் உள்ள தூதுவர்களின் கடமைதான் என்ன?

குவைத்திலுள்ள இலங்கைத் தூதுவரை சிபார்சு செய்த அரசியற் கட்சி எது?

# பேராசிரியர் அல்பேற் ஐன்ஸ்றைன்

## (1879 - 1955)

1921ல் பௌதிக விஞ்ஞானத்திற்கான நோபல் பரிசு பெற்றவரும் உலகப் புகழ் பெற்றவருமான விஞ்ஞானி அல்பேற் ஐன்ஸ்றைன் 1879ல் ஜெர்மெனியில் பிறந்த யூத இனத்தவராவார். ஐன்ஸ்றைனின் சார்பியற் கொள்கை (Theory of Relativity) வரலாற்று முக்கியம் உடையது. ஜெர்மென் விஞ்ஞானச் சங்கத்தின் தலைவராக இருந்த இவர் ஜெர்மென் ∴ பாஸிஸத்தின் எழுச்சி காலத்தில் தமது நாட்டிலிருந்து வெளியேறி அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நியூ ஜெர்மெனி நகரில் நிரந்தரமாகக் குடி பெயர்ந்தார். அமெரிக்க பௌதிக சங்கத்தின் நிரந்தர உறுப்பினராக்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவருடைய 'சார்பியற் கொள்கை' அதுவரை பௌதிகத் துறையில் ஆதிக்கம் செலுத்திய நியூட்டனின் கருத்துக்களையும் முடிவுகளையும் மீறி புதிய புரட்சிகரமான அணுகு முறையைச் சாத்தியப்படுத்தியது. இவருடைய சார்பியற் கொள்கை மூலம் ஏற்கனவே அறியப்பட்ட வெளியின் மூன்று பரிமாணங்களுடன் காலத்தை நான்காவது பரிமாணமாக நிறுவினார். இது விஞ்ஞான உலகில் பெரும் பரபரப்பையும் புரட்சியையும் ஏற்படுத்தியது.

இந்த பிரசித்தி பெற்ற விஞ்ஞானி 18.04.1955ல் காலமானார். இம்மாபெரும் விஞ்ஞானி 1949ம் ஆண்டு வெளிவந்த முற்போக்கு மாதச் சஞ்சிகையான "Monthly Review" யில் "ஏன் சோஷலிசம்" என்ற கட்டுரையில் சோஷலிசத்தின் நோக்கங்களையும் மக்களுக்கு இதன் தேவையையும் வலியுறுத்தியுள்ளார். இக்கட்டுரை பலராலும் எடுத்தாளப்பட்டது. இது வெளிவந்த கால கட்டத்தில்தான் அரசின் ஆதரவுடன் செனற்றர் மக்காதி-கம்யூனிசத்தைப் பூண்டோடு ஒழிக்க பல முறைகளைக் கையாண்டார். இத்தகைய காலத்தில் சோஷலிசத்தைப் போற்றி எழுதுவதற்கு அளப்பரிய துணிவு வேண்டும். இது இந்த விஞ்ஞானியிடம் காணப்பட்டது. இப்பெரியாரின் 48வது நினைவு நாளை நினைவு கூர்வோம்.

# இந்திய ஜே.வி.பி. உறவு

இலங்கையில் சமாதானம் ஏற்படாமல் தடுப்பதற்காக இந்திய உளவுத் தாபனமான றோ ஜே.வி.பி.யினரை நன்றாகவே கைக்குள் போட்டு விட்டதாகவே தெரிய வருகிறது. ஜே.வி.பி.யினரை கைக்குள் வைத்திருப்பதற் கென்றே இந்தியா நிருபம் சென்னை இங்கு அனுப்பியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

சமாதான எதிர்ப்பு நடவடிக்கைக்காக ஜே.வி.பி.யினருக்கு வாரி வழங்கப்படுகிறதாம். நாட்டின் வளங்களை இந்தியாவிற்கு விற்கும் விடயத்தில் ஜே.வி.பி.யினர் அடக்கி வாசிப்பதை அரசியல் ஆய்வாளர்கள் அவதானிக்க முடிகிறது. தமிழ்த் தலைவர்களும் இந்தியத் துதி பாடுவது அவர்கள் எந்தப் பக்கம் என்ற கேள்வி எழும்புகிறது.

# மாடிவீட்டு திட்டத் தயாரிப்புக்கு பல கோடி ரூபா செலவு?

வனராஜ தோட்டமாடி வீடமைப்பு அங்கீகாரத்திற்காக மட்டும் இரண்டு கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. அதாவது அனுமதியும் அங்கீகாரமும் பெறுவதற்கான வீட்டு வரைபடமும் திட்டமும் தயாரித்து கொடுத்த வீடமைப்பு அமைச்சுக்கு வெளியிலுள்ள தொழில்சார் நிபுணர் ஒருவருக்கே மேற்படி பணம் கட்டணமாக கொடுக்கப்பட்டுள்ளதாம்.

ஒரு வீட்டின் வரைபடத்தையும் திட்டத்தையும் தயாரிக்க ஒரு லட்சம் கட்டணமாக அறவிடப்பட்டுள்ளதாக தெரிகிறது. அதன்படி 200 வீட்டிற்கும் இரண்டு கோடி கொடுக்கப்பட்டுள்ளது.

அந்த தொழில்சார்ந்த நிபுணர் இதுவரையில் 4 தோட்ட வீடமைப்பு திட்டங்கள் நான்கிற்கான வரைபடங்களையும் திட்டங்களையும் தயாரித்துக் கொடுத்து வீடமைப்பு அமைச்சிடமிருந்து எட்டு கோடி ரூபாவை கட்டணமாக பெற்றுக் கொண்டதாக தெரிகிறது.

எல்லாம் அந்த "கிருஸ்ணபகவானுக்கு" வெளிச்சம்.

# கட்டளை இட அமெரிக்காவுக்கு அதிகாரமில்லை

வாஷிங்டனில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்ள புலிகள் இயக்கத்திற்கு அழைப்பு விடுக்காத அமெரிக்கா. டோக்கியோ கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி புலிகள் இயக்கதத்தைக் கேட்பதேன்?

சமாதான நடவடிக்கைகளில் தமிழ் மக்களும். புலிகள் இயக்கமும் அமெரிக்காவின் விருப்பப்படி நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. அதனால் சமாதான நடவடிக்கைகளில் புலிகள் இயக்கம் மீதும் தமிழ் மக்கள் மீதும் கட்டளைகளைப் பிறப்பிக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் தயாராகியுள்ளது.

சமாதான பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக புலிகள் இயக்கம் விலகியிருப்பதற்கான அதிருப்திகளைப் போக்க நடவடிக்கை எடுக்காமல் புலிகளின் முடிவை மறுபரிசீலனை செய்ய முடியாது.

அவ்வாறான நிலைமையில் சமாதான பேச்சுக்களில் மீண்டும் கலந்து கொள்ளும்படியும். டோக்கியோவில் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படியும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஆஸ்லி வில்ஸ் கட்டளை பிறப்பித்திருக்கிறார்.

இலங்கை சமாதான நடவடிக்கைகளில் தமிழ் மக்கள் மீதும் புலிகள் இயக்கம் மீதும் கட்டளை இடுவதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எந்த அதிகாரமும் கிடையாது.

படிப்பகம்

www.padippakam.com



# அதிகார வெறியால் அமைதியிழந்த மூதூர்

மூதூரில் இரண்டு முஸ்லீம் இளைஞர்கள் காணாமல் போனதை அடுத்தும் காணாமல் போனவர்களில் ஒருவரின் தாயார் தற்கொலை செய்து கொண்டதையும் அடுத்து அங்கு ஏற்பட்ட பதற்றம். முஸ்லீம்-தமிழ் மக்களுக்கிடையேயான மோதல்கள். உயிரிழப்புகள். சேதங்கள் பாதிப்புகளுக்கு காரணமாக முஸ்லீம் அரசியல்வாதிகளை முஸ்லீம் மக்கள் ஓரம் கட்டும் வரை இவ்வாறான பிரச்சினைகளுக்கு முடிவு கட்ட இயலாது. இவ்வாறு கூறுவதென்பது தமிழ் மக்கள் மத்தியிலுள்ள முஸ்லீம் மக்களுக்கு எதிரான சக்திகளை மன்னிப்பதாகாது.

ஆனால் மூதூர் திருகோணமலை பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கும் நிலவும் பதற்றத்திற்கும் காரணம் ஐ.தே.கட்சியின் முஸ்லீம் எம்.பி.க்களுக்கும் முஸ்லீம் காங்கிரஸ் எம்.பி.க்களுக்குமிடையே நிலவும் அதிகாரப் போட்டியே காரணமாகும்.

மூதூரில் இரு முஸ்லீம் இளைஞர்கள் காணாமல் போன சம்பவத்தைப் பயன்படுத்தி இனத்துவேசத்தை தூண்டும் வகையில் ஐ.தே.கட்சி எம்.பி. மவுறூப்பும். முஸ்லீம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமும் அக்கட்சியின் பிரமுகர்களும் பேசிய பேச்சுக்களும் செய்த பிரசாரங்களும் மூதூரில் முஸ்லீம்-தமிழ் மக்களிடையே மோதல் ஏற்பட காரணமாயின என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஐ.தே.மு. அரசாங்கத்தில் முஸ்லீம் காங்கிரஸ் எம்.பி.க்களுக்கு இருக்கும் அதிகாரம் ஐ.தே.கட்சியின் முஸ்லீம் எம்.பி.க்களும் இல்லை என்பதால் அவ்விருதரப்பினருக்குமிடையில் ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டி மூதூர் சம்பவத்தில் தலைதூக்கி இறுதியில் முஸ்லீம்-தமிழ் கலவரமாக மாற்றப்பட்டுள்ளது. இந்நிலைமைக்கு முஸ்லீம் காங்கிரஸ் பிரமுகர்களும் ஐ.தே.கட்சியின் முஸ்லீம் பிரமுகர்களும் பொறுப்பேற்க வேண்டும்.

சாதாரண முஸ்லீம் மக்களின் அபிலாஷைகளை பிரதிநிதித்துவப் படுத்தாத ஐ.தே.கட்சியின் முஸ்லீம் பிரமுகர்களுக்கும் முஸ்லீம் காங்கிரஸினருக்குமிடையிலான முரண்பாட்டிற்கு அதிகாரப் போட்டியே காரணமாகும். அவர்கள் எவ்வகையிலும் உழைக்கும் முஸ்லீம் மக்களின் அரசியல் தலைவர்களாக இருக்க முடியாது. ஏனெனில் ஐ.தே.கட்சியும் சுதந்திரக் கட்சியும் சாதாரண மக்களையன்றி பெரும் முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளையே பிரதிநிதித்துவம் செய்கின்றன. அக்கட்சிகளுடன் அரசாங்கத்தில் பங்கெடுக்கும் முஸ்லீம் தலைவர்கள் சாதாரண உழைக்கும் முஸ்லீம் மக்களையோ. முஸ்லீம் மக்களின் தேசிய அபிலாஷைகளையோ பிரதிநிதித்துவம் செய்ய முடியாது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்க்க துணிவில்லாத ஏகாதிபத்திய உலகமயமாக்கலை எதிர்க்கத் துணிவில்லாத முஸ்லீம் அரசியல் தலைமைகள் இலங்கை முஸ்லீம் மக்களுக்கு எவ்வாறு வழிகாட்ட முடியும்? அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும். ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கும் சார்பான ஐ.தே.கட்சி. சுதந்திரக் கட்சிக்கு மாறி மாறி குடை பிடிக்கும் முஸ்லீம் தலைவர்கள். அரசியல்வாதிகள் எவ்வாறு முஸ்லீம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்த முடியும்? ஈராக்கிற்கும். ஆப்கானிஸ்தானுக்கும் எதிரான அமெரிக்க யுத்தத்தை நேர்மையாக துணிவில்லாத முஸ்லீம் தலைவர்கள் எவ்வாறு இலங்கை முஸ்லீம் மக்கள் பாதிக்கப்படும்போது நேர்மையாக போராடப் போகிறார்கள்?

மூதூரில் இரு முஸ்லீம் இளைஞர்கள் காணாமல் போனமைக்கு அல்லது கடத்தப்பட்டமைக்கு காரணமானவர்களுக்கு எதிராக போராடாமல் சாதாரண தமிழ் மக்களுக்கு எதிராக வன்முறை புரிந்ததால் பிரச்சினை. மேலும் சிக்கலானதே தவிர அதற்கு தீர்வு கிட்டவில்லை. அதை அதிகார வெறி பிடித்த முஸ்லீம் அரசியல்வாதிகள் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். அதன் விளைவால் பாதிக்கப்பட்டது சாதாரண தமிழ் மக்களும் முஸ்லீம் மக்களும் தான்.

அதேபோன்று தமிழ் மக்களும் முஸ்லீம் மக்களுக்கு எதிரான தீய தமிழ் சக்திகள் நடவடிக்கை எடுக்கும் போது அதனை கண்டிக்கும் தார்மீக கடமையை கொண்டுள்ளனர். அத்தார்மீக கடமையை வெளிப்படுத்தினாலன்றி முஸ்லீம் மக்களிடையே இருக்கும் தமிழ் விரோத மனப்பான்மையை போக்க முடியாது. சிங்கள மக்களிடையே நிலவும் தமிழ் விரோத போக்கை முறியடிப்பது போன்று முஸ்லீம் மக்களிடையே திட்டமிட்டு வளர்க்கப்பட்டுள்ள தமிழ் விரோதப் போக்கையும் முறியடிக்க வேண்டும். அதற்கு முதற்படியாக முஸ்லீம் விரோத தமிழ் தலைமைகள் தோற்கடிக்கப்பட வேண்டும்.



மறுபுறத்தில் தமிழ் விரோத முஸ்லீம் அரசியலையும் முஸ்லீம் மக்கள் தோற்கடிக்க வேண்டும். இல்லாவிட்டால் மூதூர் சம்பவங்கள் போன்று பல பல இடம்பெறும்.

இந்நாட்டின் பேரினவாதிகளுக்கும் முதலாளித்துவ சக்திகளுக்கும் தமிழ்-முஸ்லீம் பிளவு எப்போதுமே கை கொடுத்துக் கொண்டே இருக்கும்.

எனவே தமிழ் மக்கள் எவ்வாறு பழமைவாத. தேசியவாத அரசியலிலிருந்து வெளியேறி விரிந்த உலகத்தை பார்க்க வேண்டுமோ அதேபோன்று முஸ்லீம் மக்களும் ஐ.தே.கட்சி. சுதந்திரக் கட்சி சார்பு அரசியலை நிராகரித்து. முஸ்லீம் அடிப்படை வாதத்தை நிராகரித்து அந்த விரிந்த உலகத்தை பார்க்க வேண்டும்.

# மலையக மக்கள் மீது இந்தியத் தூதுவரின் பாசம்

மலையகத் தமிழ் மக்களுக்கு இந்தியா அதிகமாக உதவிவருகிறது என்று இலங்கையிலுள்ள இந்திய தூதுவர் நிருபம் சென் கூறியுள்ளார். ஆனால் பெருந்தோட்ட தொழிலாளர் நம்பிக்கை நிதியத்திற்கூடாக வசதி குறைந்த உயர்கல்வி கற்கும் பெருந் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைபரிசிலாக பண உதவி செய்வதைத் தவிர மலையகத் தமிழ் மக்களின் அபிவிருத்திக்காக இந்தியத் தூதுவராலயமோ. இந்திய அரசாங்கமோ வேறு எதனையும் செய்ததாகவோ செய்வதாகவோ இல்லை.

மலையகத் தமிழ் மக்களின் பிரஜா உரிமைப் பிரச்சினையை தீர்ப்பதில் காலஞ்சென்ற பிரதமர் சாஸ்திரி முதல் இன்றுவரை உறுப்படியான நடவடிக்கைகளை இந்தியா எடுக்கவில்லை. அவர்களின் பிற்படுத்தப்பட்ட நிலையை உயர்த்துவதற்கு தார்மீகமான கடமை இருந்தபோதும் அதனை செய்யவில்லை.

வரலாற்று ரீதியாகவும் பண்பாட்டு ரீதியாகவும் தமிழகத்திற்கும் மலையகத்திற்கும் நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன. அந்தவகையில் இந்தியா மலையகத் தமிழ் மக்களுக்கு உதவுவது வரவேற்கத்தக்கது. ஆனால் இதுவரையும் குறிப்பிடக் கூடிய பெரிய உதவிகளை இந்தியா செய்துவிடவில்லை.

வடக்கு-கிழக்கு பிரச்சினையை வைத்துக்கொண்டு இலங்கை மீது அதன் மேலாதிக்கப் பிடியை இறுக்கி வந்த இந்தியா. மலையகத் தமிழ் மக்கள் மீது "பாசத்தைப் பொழிந்து" புதுப் பிடியை இறுக்கப் பார்க்கிறது. அந்த மேலாதிக்க நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே மலையகத் தமிழ் மக்கள் பற்றி இந்தியத்தூதரகம் பேசிவருகிறது.

மலையகத் தமிழ் மக்களுக்கு இந்தியா அதிகமாக உதவி வருகிறது என்ற இந்திய தூதுவரின் கூற்றும் சரியாகாது. ஒப்பிட்டு ரீதியாக பார்க்கின்றபோது இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து நொராட். சீடா ஜீ.ரி.இஸட் போன்ற வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் மலையகத்தின் கல்வி வளர்ச்சிக்கும் சமூக அபிவிருத்திக்கும் அதிகம் உதவி யுள்ளன. அந்த உதவிகளினால் ஏற்படும் விளைவுகள் பற்றி திருப்தி கொள்ள முடியாது விட்டாலும் இந்தியாவை விட அந்நிறுவனங்கள் மலையகத் தமிழ் மக்களுக்கு உதவியுள்ளன.

# பிரித்தானியாவில் பத்திரிகைச் சுதந்திரம்

சிலர் பாராளுமன்ற ஜனநாயகம். பத்திரிகைச் சுதந்திரம் பற்றிப் பேசும் போதெல்லாம் பிரிட்டனை உதாரணமாய்க் காட்டிப் பெருமைப்பட்டுக் கொள்வதுண்டு. பிரிட்டனில் மட்டுமல்ல ஜனநாயக நாடுகள் எனப்படும் நாடுகளில் ஆட்சியில் உள்ளவர்களுக்கு பாதிப்பு ஏற்படாதவரையே ஜனநாயக உரிமைகள் வழங்கப்படும். முதலாவது கைத்தொழில் நாடான பிரிட்டன். தான் உற்பத்தி செய்த பொருள்களை விற்பனை செய்வதற்காக ஆரம்பத்தில் சுதந்திர வர்த்தகம் பற்றி பிரச்சாரம் செய்து வந்தது. ஆனால் காலம் செல்லச் செல்ல ஏனைய நாடுகளும் கைத்தொழில்களில் ஈடுபட்டு அவற்றை பிரிட்டனுக்குள் கொண்டு செல்ல முற்பட்டபோது அவற்றைத் தடுப்பதற்கு வரிகள். தீர்வைகள் என்பனவற்றைப் புகுத்தியது.

பத்திரிகைச் சுதந்திரத்தைப் பற்றி வாய்கிழியப் பேசும் பிரிட்டனில் ஈராக்கில் அமெரிக்க பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தொடர்ந்து பத்திரிகைகளுக்கு வாய்ப் பூட்டுப் போடத் தொடங்கியுள்ளது.

சேர் றே ரின்டில் என்பவர் பிரிட்டனில் வாரந்தோறும் வெளியாகும் நூறுக்கும் மேற்பட்ட பத்திரிகைகளின் பிரதம ஆசிரியராவார். அவர் தன் கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு விடுத்த கட்டளை ஒன்றில் அந்தப் பத்திரிகைகள் ஈராக்கிய யுத்தத்திற்கு எதிரான செய்திகள் வெளியிடப்படாதெனத் தெரிவித்துள்ளார். பத்திரிகைத் துறையில் அந்தச் சீமான் ஆற்றிய சேவைகளுக்காகவே அவருக்கு "சேர்" பட்டம் வழங்கப்பட்டது கவனிக்கத்தக்கது. சேர் றே கூறுவது இதுதான் :-

ரின்டில் குடும்பத்தின் பத்திரிகைகள் அரசியல் சார்பற்றவை என்பது சகலருக்கும் தெரியும். எமது பந்திகள் சுதந்திரமானவை. தற்போது பிரிட்டிஷ் துருப்பினர் தாக்குதலுக்குள்ளாவார்கள். அவர்களைப் பாதிக்கும் வகையில் செயதிகளை வெளியிடாதீர்கள்.

நான் பத்திரிகைகளின் சொந்தக்காரன் என்ற வகையில் இதைத் தெரிவிக்கவில்லை. 1944 தொடங்கி 1947 வரை தூர கிழக்கில் பிரித்தானியப்படை வீரனாகச் செயற்பட்டவன் என்ற வகையிலேயே இதைத் தெரிவிக்கிறேன்".

சதாம் குசேனை சர்வாதிகாரியென்பவர்கள் தாங்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றனர் என்பதைப் பாருங்கள்.

பத்திரிகை நிருபர்களின் தேசிய சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜெரிமி டியர் இந்தக் கட்டுப்பாட்டை வன்மையாகக் கண்டித்துள்ளார். முதலாளித்துவ பேச்சுச் சுதந்திரம். எழுத்துச் சுதந்திரம் என்பனவற்றின் உண்மையான பொருள் இது தான்.

## திருத்தொண்டர் வரிசை

தில்லிவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்
திருமதி சோனியா காந்திக்கும் அடியேன்
பொல்லாத போயஸ் தோட்ட அம்மாக்கும் அடியேன்
பொறுத்தே தான் காத்திருக்கும் கலைஞருக்கும் அடியேன்
இல்லையே என்னாத ரணிலாருக் கடியேன்
இருப்பதையும் கெடுக்கின்ற சந்திரிகைக் கடியேன்
நல்லாக நிதிவழங்கும் எல்லார்க்கும் அடியேன்
தலைநகரின் தூதரகப் பெரியார்க்கும் ஆளே.

(கூத்தணி நாயனார் தேவாரம்)

# அமெரிக்காவின் பத்திரிகைச் சுதந்திரம்

ஏப்ரல் 8ம் திகதி "அல் ஜசீரா"வின் நிருபர் அமெரிக்க றொக்கட் தாக்குதலால் கொல்லப்பட்டார். அதன் படப்பிடிப்பாளர் காயப்பட்டார். இச்சம்பவம் நடந்த நான்கு மணி நேரத்தில் றொயிட்டர் நிறுவனத்தின் பக்தாத் தொலைக்காட்சிப் பணியகம் அமெரிக்கப் படையினரால் தாக்கப்பட்டதால் ஒரு படப்பிடிப்பாளர் இறந்தார். ஸ்பெயின் நாட்டின் றெலி 5 அலைவரிசைப் படப்பிடிப்பாளரும் அதில் இறந்தார். றொயிட்டர் செய்தி ஸ்தாபனத்தின் வேறு நான்கு ஊழியரும் காயமடைந்தனர். இவை யாவும் தற்செயலானவையல்ல. உண்மையான தகவல்களை வெளியிடும் நிருபர்களைத் திட்டமிட்டே தீர்த்துக் கட்டுவது அமெரிக்காவிற்கு கைவந்த கலை.

அல் ஜசீரா காரியாலயத்தின் மீது காலை 7.45 மணியளவில் அமெரிக்க ஜெட் விமானம் றொக்கெட் தாக்குதல் நடாத்தியது. விமானம் மிகத் தாழ்வாக இறங்கியே இத் தாக்குதலை நடாத்தியது. காரியாலயத்தின் கூரையில் எழுதப்பட்டிருந்த "அல் ஜசீரா" தெளிவாகவே விமானியின் கண்ணுக்குத் தெரிந்திருந்தும் இத்தாக்குதல் நடாத்தப்பட்டது.

இதற்கு முன்னரும் அல் ஜசீரா அமெரிக்கத் தாக்குதலுக்குள்ளானது. 2001ம் ஆண்டும் காபூலில் அமைந்திருந்த "அல் ஜசீரா"வின் காரியாலயத்தின் மீது ஏவுகணைத் தாக்குதல் ஒன்றை அமெரிக்கா செய்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஆக்கிரமிப்பு செய்திகளை வெளியிட்ட "அல் ஜசீரா"வை திட்டமிட்டு முடங்க வைப்பதே அமெரிக்காவின் தாக்குதல் இதுதான் அமெரிக்கா உலகிற்கு கூறும் பத்திரிகைச் சுதந்திரம்.

படிப்பகம்

www.padippakam.com



புதிய பூமி
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA PUTHIYA POOMI
சுற்று 10 மே 2003 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 57

எஸ்.47. 3ம் மாடி. கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.: 435117. 335844 பாக்ஸ்: 01-473757

## சி.ஐ.ஏ.யின் பிடிக்குள் சீரழியப் போகும் இந்தியா

இலங்கையிலிருக்கும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் நோர்வே தூதரகமும் இந்திய-சீன நட்புறவை பாதிக்கும் முயற்சிகளை முன்னெடுப்பதாக கொழும்பிலுள்ள இந்திய தூதுவர் நிருபம்சென் அதிருப்தியடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சீன மீன்பிடி ட்ரோலர் ஒன்று இலங்கையின் கடற்பரப்பில் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்த கருத்தையடுத்தே இந்தியத்தூதுவர் அதிருப்தியடைந் துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதாவது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அல்லாத வேறொரு குழுவினராலேயே சீன மீன்பிடி ட்லோரர் தாக்கப்பட்டி ருக்க வேண்டும் என்று கண்காணிப்புக் குழு அறிக்கை சமர்ப்பித்திருந்தது தெரிந்ததே. இந்திய சார்பு ஆயுத குழுவொன்றின் வேலையாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றும் வகையில் கண்காணிப்புக் குழுவின் அறிக்கை அமைந்திருந்ததாக உணரப்பட்டுள்ளது அல்லது ஊகிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் அதேவேளையில் இலங்கையின் வான்பரப்பை சுதந்திரமாகப் பாவிக்கும் உரிமையை அமெரிக்காவிற்கு வழங்கும் உடன்படிக்கை செய்து கொடுக்கப்பட்டுள்ளது. நிலப்பரப்பில் பெரும் பகுதியை இந்தியாவிற்கு வழங்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இலங்கையின் கடற்பரப்பில் மீன்பிடிக்கும் உரிமை சீனாவிடம் ஒப்படைக்கப்படும் உடன்படிக்கையும் செய்யப்பட்டது. இந்தியாவிற்கும் சீனாவிற்கும் சுமூகமான உறவில்லை. எல்லை பிரச்சினை யுடன் வரலாற்று காரணங்கள் இரு நாட்டு உறவை சீரழித்துள்ளன. அவ்வுறவை சீர் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் அவை ஒரு நாட்டின் பாதுகாப்பும். நலனையும் அடிப்படையாக கொண்டே முன்னெடுக்கப் பட்டன. இருபக்க நலன்களையும் அக்கறைகளையும் கொண்டதாக இருக்கவில்லை. வெளிவிவகார கொள்கைக்கு பொறுப்பான இந்திய அதிகாரிகளும் சரி. சீன அதிகாரிகளும் சரி இரு நாட்டு மக்களின் சந்தோசத்தையும் போக்கும் விதத்தில் நடவடிக்கைகளை எடுக்கத் தவறி வருகின்றனர்.

ஒப்பீட்டு ரீதியில் ஆசியாவில் சீன மக்களும். இந்திய மக்களும் தேசிய பற்று கூடியவர்களாக. சில வேளைகளில் அதீத தேசிய சிந்தனை கொண்டவர்களாகவும் இருக்கின்றனர். அதனை இரு நாட்டு ஆட்சியாளர்களும் ஆட்சியை நடத்துவதற்கு சாதகமாக பயன்படுத்துவதுண்டு. இந்தியாவினையும் சீனாவையும் சமப்படுத்த முடியாவிட்டாலும் பொதுவாக அவதானிக்க முடிகிறது.

ஆசியாவில் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போராடக் கூடிய வல்லமையுடைய இந்தியாவும் சீனாவும் ஒருமைப்பாட்டுடன் செயற்படுவது அவசியம். ஆனால் அமெரிக்கா உட்பட ஏகாதிபத்திய சதியின் காரணமாக இரண்டு நாடுகளும் பிரிவுபட்டே இருக்கின்றன. இன்று அமெரிக்கா சீனாவிற்கு எதிராக இந்தியாவை பாவிக்கும் சகல வழிகளிலும் ஈடுபட்டு வருகிறது.

பொருளாதார ரீதியாகவும். பாதுகாப்பு ரீதியாகவும் சீனா விரைவாக அபிவிருத்தியடைந்து வருகிறது. (அவை சோஷலிஸ அபிவிருத்திகள் என்று கூற முடியாதுதான்) அதன் வளர்ச்சி உலகளாவிய ரீதியாக ஏகாதிபத்திய சக்திகளுக்கு பெரும் சவாலாகிவிடும் என்பது திண்ணம். அதனால் சினாவிற்கு பல வழிகளிலும் இடையூறுகளை திட்டமிட்டு மேற்கொள்ள அமெரிக்கா திட்டமிட்டு செயற்பட்டு வருகிறது. அதற்காக இந்தியாவை எவ்வாறு பயன் படுத்துவது என்பது பற்றிய ஆய்வுகளை அமெரிக்கா மேற்கொண்டுள்ளதாக தெரிகிறது.

இந்திய ஆளும் வர்க்கமும் எவ்வாறு அமெரிக்காவைப் பயன்படுத்திக் கொள்வது என்பதில் ஆர்வமாக இருக்கிறது. சீனாவுக்கு எதிராக அமெரிக்காவிற்கு உதவ இந்தியாவுக்கு விஷப் பரீட்சையாக இருக்கப் போவது என்பதே உண்மைதான். இந்தியா தயாராகி விட்டது. இந்திய மக்களின் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பிற்கும் மேலாக அமெரிக்காவிற்கு ஆதரவாக செயற்பட இந்திய ஆளும் வர்க்கம் தயாராகியுள்ளது. பாகிஸ்தானுக்கு எதிராக செயற்பட வேண்டும் என்பதற்காகவும் காஷ்மீர் பிரச்சினையில் வெளித் தலையீடுகள் வந்து விடக் கூடாது என்பதற்காகவும் அமெரிக்காவுடன் இசைந்து போக இந்திய ஆளும் வர்க்கம் தயாராகியுள்ளது.

பிரிட்டிஷ் காலணியின் நேரடி ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட பிறகு இந்தியாவிலிருந்த அரசாங்கங்களில் பி.ஜே.பி. தான் அதிகக் கூடிய அமெரிக்க சார்பாகியுள்ளது. அந்த மாற்றத்தினாலேயே சீனாவிற்கு எதிராக இந்தியா அமெரிக்காவுக்கு பயன்படப் போகிறது.

இது 'இந்திய அமெரிக்க இராணுவ உறவில் எதிர்பார்ப்பும் உள்ளார்ந்த கருத்துக்களும்' என்ற 130 பக்கங்களைக் கொண்ட ஆய்வறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ் பீல்டிடம் இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சீனாவிற்கு எதிரான விடயங்களில் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் ஒருமைப்பாடு இருப்பதாக இவ்வாய்வறிக்கை தெரிவிக்கிறது. பாதுகாப்பு விடயங்களில் அமெரிக்காவும் சீனாவும் ஒன்றிணைந்து செயற்படும் சாத்தியங்கள் பற்றி அதில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. ஜப்பான். தென்கொரியா போன்ற நாடுகள் நீண்ட நாட்களில் அமெரிக்காவிற்கு நட்பாக இருக்கப் போவதில்லை. அதனால் இந்தியாவை தன் பக்கம் வைத்துக் கொள்வதில் அமெரிக்கா ஆர்வமாய் இருக்கிறது. தனக்கு பெரிய அச்சுறுத்தலாக இருக்கப் போகிற சீனாவிற்கு எதிராக செயற்படுவதில் இந்தியாவை பயன்படுத்த வியூகம் அமைத்து அமெரிக்கா செயற்படுகிறது. இந்தியாவில் அமெரிக்காவின் உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. தாராளமாக செயற்படுவதாக தெரிகிறது.

இவையெல்லாம் இந்தியாவிற்கும் இந்திய மக்களுக்கும் ஆரோக்கிய மானவையாக இருக்கப் போவதில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தேவை முடிவடைந்தவுடன் இந்தியாவையும் அமெரிக்கா விட்டு வைக்கப் போவதில்லை. ஈரானுக்கும் ஏனைய அரபு நாடுகளுக்கும் எதிராக பயன்படுத்திய சதாமையும். ஈராக்கையும் அமெரிக்க ஏகாதிபத்தியம் விட்டு வைக்கவில்லை.

அதே போன்று அமெரிக்க ஏகாதிபத்தியம் அதன் தேவை முடிவடைந்தவுடன் இந்தியாவையும் விட்டு வைக்கப் போவதில்லை.

- ஆசிரியர் குழு -

# அன்று முதல் இன்றுவரை தமிழர் தலைமைகள்

**வெகுஜனன்**

2003 மார்ச் 20ம் திகதி அமெரிக்காவின் தலைமையில் பிரித்தானிய அவுஸ்திரேலியப் படைகளும் இணைந்து ஈராக் மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்தை ஆரம்பித்தன. இவ் ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கான சகல வகைத் தயாரிப்புகளும் கடந்த ஒரு வருட காலமாக அமெரிக்க பிரித்தானிய ஆளும் தரப்பினரால் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. "முடிந்தால் ஐ.நா.சபையின் கொடியுடன் செல்வோம் இல்லாது விட்டால் நேரடியாக நமது ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவோம்" என்பதே ஏகாதிபத்தியக் கொள்கையாக இருந்து வந்துள்ளது.

அந்த வகையிலேயே அன்றைய கொரிய ஆக்கிரமிப்பு முதல் அண்மைய கொசோவா வரையான யுத்தத்தை அமெரிக்கா கையாண்டு வந்துள்ளது. வியட்னாமில் அமெரிக்கா அடிக்கு மேல் அடி வாங்கி அவமானத்துடன் திரும்பிய பின் இனி மேல் அமெரிக்கா அத்தகைய யுத்தங்களில் ஈடுபட மாட்டாது என எதிர்வு கூறியவர்கள் இருந்தார்கள். அத்தகைய எதிர்பார்ப்பு ஏகாதிபத்திய இயல்பு பற்றிய தெளிவின்மையைக் கொண்டதாகும். யுத்தம் இல்லாதுவிட்டால் ஏகாதிபத்தியத்தால் ஒரு நாளைக்குத் தானும் உயிர் வாழ முடியாது. அதனாலேயே "ஏகாதிபத்தியத்தின் மறுபெயர் யுத்தம்" எனச் சுட்டிக் காட்டப்பட்டது.

இன்று ஈராக்கில் அமெரிக்கா தலைமையில் நடாத்தப்பட்டு வரும் யுத்தம் கொடுமைகள் அனைத் தினதும் உச்சத்தைத் தாண்டி நிற்கிறது. உலகின் முதல்தரப் போர் வெறியர்கள் யார் என்பதை உலக மக்கள் கண்முன்னே கண்டு வருகின்றனர். அதனாலேயே இவ் ஈராக் யுத்தம் தொடங்கப்படுவதற்கு முன்பும் தொடங்கிய பின்பும் உலக மக்கள் கடுமையான கண்டன எதிர்ப்புகளைத் தெரிவித்து வருகின்றனர். அமெரிக்காவின் ஆதிக்க அச்சுறுத் தலுக்கு அடி பணிந்து பல நாடுகளின் அரசாங் கங்கள் ஈராக் ஆக்கிர மிப்பைக் கண்டித்து நிற்கத் திராணி யற்று நிற்கின்றன. மேலும் சில பெரிய நாடுகள் வெறும் வாயளவு எதிர்ப்பு என்பதுடன் தங்களை மட்டுப்படுத்திக் கொண்டுள்ளன. அதேவேளை உலகின் ஏகப் பெரும்பான்மையான மக்கள் கிளர்ந்தெழுந்து தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். இதனால் அமெரிக்க ஏகாதிபத்தியம் என்றுமில்லாதவாறு அம்பலப்பட்டு அவமானம் அடைந்து காணப்படு கின்றது.

இலங்கை மக்களில் பெரும் பகுதியினர் ஈராக் மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்தை எதிர்த்து வருகின்றனர். ஆனால் அரசாங்கமும் அதன் தலைவர்களும் அமெரிக்க ஆக்கிரமிப்புப் பற்றி மௌனம் சாதித்து வருவதுடன் ஆதரவுக் கொள்கை யையும் கடைப்பிடித்து வருகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியிடமும் அவர்களோடு இணைந்து நிற்கும் தமிழ். முஸ்லிம். மலையகத் தலைமை களிடமும் ஏகாதிபத்திய எதிர்ப்பையோ அன்றி அமெரிக்கப் போர் வெறிக்கு எதிரான உணர்வையோ எதிர்பார்க்க முடியாது. இவர்கள் அனைவரும் அன்று முதல் இன்றுவரை அமெரிக்க பிரித்தானிய ஏகாதிபத்திய அரவணைப்பில் தான் ஆளும் வர்க்கமாக இருந்து வருபவர்கள்.

இருப்பினும் இலங்கையில் கடந்த இருபது வருடங்களுக்கு மேலான கொடுமை மிகு யுத்தத்தின் ஊடாகத் தமிழ் மக்கள் பேரினவாதத்தால் ஒடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். அதனை எதிர்த்து ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. அத்தகைய தேசிய இன விடுதலைப் போராட்டத்தை முறியடிப் பதில் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆளும் பேரினவாத இராணுவ ஒடுக்கு முறையின் பக்கம் நின்று வந்துள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கம் எனப் பட்டிய லிட்டு தடையும் செய்து கொண்டது. தான் கூறுமாறு புலிகள் இயக்கம் நடந்து கொள்ள வேண்டும் என ஆணை பிறப்பித்தும் நிற்கின்றது. ஒரு புறத்தால் மிரட்டி வெருட்ட நிற்கிறது அமெரிக்கா. மறுபுறத்தால் பணத்தைக் காட்டி அரவணைத்துக் கொள்ளவும் முயல்கிறது. இவை யாவும் தனது உலக மேலாதிக்கம் என்ற நிலைக்கு வலுச் சேர்ப்பதற்கேயாகும்.

இவ்வாறு அமெரிக்க ஏகாதிபத்தியம் நடந்து வருகின்ற போதும் தமிழர் தரப்பு தலைமைத்துவங்களிடமிருந்து அமெரிக்க எதிரப்பு வார்த்தைகள் எதுவும் வரவில்லை என்பது தான் நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இன்று உலகம் பூராவும் ஈராக் போரை எதிர்த்துக் கண்டனங்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. ஆனால் பாராளுமன்றத்தை மைய மாக் கொண்ட தமிழர் தலைமைத் துவங்களோ அன்றி ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கும் புலிகள் இயக்கமோ அமெரிக்காவின் ஈனச் செயலைப் போர் வெறியை எதிர்த்து ஒரு வார்த்தை தானும் முன்வைக்கவில்லை. ஏன்? என்பது தான் சிந்தனைக்குரியதாகும். இதன் ஊடாகவே தமிழர் தலைமைக்ளையும் அவற்றின் போராட்டங்களையும் எடை போட்டுக் கொள்ள வேண்டி யுள்ளது. உள்நாட்டில் நிலவுடமை முதலாளித் துவ வர்க்க சக்திகளையும் வெளி உலகில் ஏகாதிபத்திய பிராந்திய மேலாதிக்க சக்திகள் பற்றியும் கொண்டிருக்கும் கருத்தும் கண்ணோட்டமுமே ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனத்தின் தலைமைகளைக் கண்டறிவதற்கான அளவு கோலாகிறது.

இலங்கையின் பௌத்த சிங்கள பேரினவாத ஆளும் தரப்பை ஒரு புறத்தில் வைத்து விட்டு தமிழர்கள் மத்தியில் அன்றிலிருந்து இன்றுவரை நீடித்து வரும் தமிழ் அரசியல் தலைமைகளை எடுத்து நோக்குவது இன்றைய சூழலியல் தேவையாகின்றது. ஏனெனில் ஒடுக்குமுறைக்கு உள்ளாகி வந்துள்ள தமிழர்களின் நடுவே இருந்து வரும் அரசியல் தலைமைகள் எப்பொழுதும் ஏகாதிபத்திய சார்பு நிலைப்பாட்டையே எடுத்து வந்துள்ளன. இது தற்செயலான சந்தர்ப்பவசத்தால் ஏற்பட்ட ஒன்றல்ல. அடிப்படையில் வரக்க நிலைப்பாட்டுடன் இறுகப் பிணைந்து கொண்டதொன்றாகவே தொடர்பு பட்டு வந்துள்ளது.

நமது சமூகச் சூழலில் இன்றும் நிலவுடமை வழிவந்த கருத்தியலே சமூக ஆதிக்கம் பெற்றதொன்றாக விளங்கி வருகின்றது. தமிழர் தலைமைகளும் இவ் ஆதிக்க கருத்தியல் மூலம் வர்க்க தேவைகளின் அடிப்படையில் செயல்படுபவைகளாகவே இருந்தும் வருகின்றன. தமக்குக் கீழே தமது ஆதிக்க அரசியலுக்கு சராசரித் தமிழ் மக்கள் கட்டுப்பட்டு அடங்கி இருந்து வர வேண்டும் என்பதையே தமிழர் தலைமைகள் வற்புறுத்தி செயலாற்றி வந்துள்ளன. அதேவேளை தமக்கு மேலே அந்நிய ஏகாதிபத்திய சக்திகள் இருந்து வருவதைப் பய பக்தியுடன் போற்றிப் புகழ்ந்து துதித்தும் வந்துள்ளனர்.

அன்று பொன்னம்பலம் இராமநாதன் போன்றோர் தமிழர் தலைமையாகத் திகழ்ந்த போது பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் நம்பிக்கைக்குரிய விசுவாசிகளாக நடந்து கொண்டனர். அதனாலேயே பிரித்தானிய எசமானர்கள் அவருக்கும் அவரது சகோதரர் அருணாசலத்திற்கும் இவர்கள் போன்ற வேறு சிலருக்கும் "சேர்" பட்டம் வழங்கி கௌரவித்து மகிழ்ந்தனர். அந்த வாய்ப்பைப் பெற பிற்காலத்தில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் முயன்ற போதிலும் அந்தக் கனவு காலத்தால் கரைந்து கொண்டது. இருப்பினும் ஜீ.ஜீ. இறுதிவரை ஒரு பிரித்தானிய ஏகாதிபத்திய அடிவருடியாகவே வாழ்ந்து மறைந்தார்.

அவருக்குப் பின் தமிழர் தேசிய அரசியல் பரப்பிலே தலைமைத்துவத்திற்கு வந்து கொண்ட எஸ்.ஜே.வி. செல்வநாயகம். அமிர்தலிங்கம் போன்ற தமிழர் தலைவர்களும் ஏகாதிபத்திய விசுவாசிகளாகவே இருந்தனர். இலங்கையின் இறமை. சுதந்திரம். சுயாதிபத்தியத்தை நிலை நாட்டும் வகையில் திருகோணமலையிலும் கட்டுநாயக்காவிலும் இருந்த பிரித்தானிய படையணிகளை வெளியேற்றும் முடிவை எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா எடுத்த போது தமிழரசுத் தலைமையானது மாட்சிமை தங்கிய மகாராணிக்கு அவசரத் தந்தியடித்து படையணி களை வாபஸ் பெற வேண்டாம் எனக் கோரித் தமது ஏகாதிபத்திய விசு வாசத்தைத் தெரிவித்துக் கொண் டனர். அவ்வாறே வியட்னாமில் அமெரிக்கா நடாத்திய ஆக்கிரமிப்பு யுத்தம் ஜனநாயகத்தை மீட்பதற்கான நீதியான யுத்தம் எனக் கொண்டாடிக் கொண்டனர்.

இத் தமிழர் தலைமைகள் எப்பொழுதும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தை கொச்சைப்படுத்தியும் எதிர்த்தும் நிராகரித்தும் வந்த வரலாற்றைக் கொண்டவர்கள். அதுமட்டுமன்றி ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது பொதுவுடமை வாதிகளின் அல்லது இடதுசாரிகளின் திட்டமிட்ட பிரசாரம் என்பதாகவே பிரச்சாரம் செய்து கொண்டனர். ஏகாதிபத்தியத்தின் நச்சுத்தனத் திட்டங்களோ. சுரண்டல் கொடூரங்களோ தமிழர் தலைமைகளுக்கு முக்கியமற்ற விடயங்களாகும்.

இவர்கள் தான் இந்திய பிராந்திய மேலாதிக்க இராணுவ படையெடுப்பை வருந்தி அழைத்தவர்கள். அதன் விளைவை தமிழ் மக்களே அனுபவிக்க வேண்டியதாயிற்று. இன்று ஈராக்கில் புகுந்து ஆக்கிரமிப்பு யுத்தம் நடாத்தி வரும் அமெரிக்கா நாளை இலங்கைக்குள் மட்டுமன்றி வடக்கு கிழக்கிற்குள் புகுந்து கொண்டாலும் கூட இதே தலைமை கள் எவ்வாறு எதிர்ப்பைக் காட்டுவார்கள் என்பது கேள்விக்குரிய தாகும். ஏனெனில் அவர்களது அடிப்படை நிலைப்பாடு ஏகாதிபத்திய அரவணைப்பும் விசுவாசமும் ஆகும்.

இன்று வடக்கு கிழக்கில் இருந்தே அமெரிக்காவிற்கு எதிரானவலிமையான எதிர்ப்புக் குரல் பரவலாக எழுந்திருக்க வேண்டும். குறிப்பாகத் தமிழ்த் தேசியவாதத்தை முன்னிறுத்தும் சக்திகள் அவர்கள் பாராளுமன்றத் தலைமையாயினும் ஆயுதப் போராட்டத் தலைமையாயினும் அமெரிக்கா நடத்திவரும் ஈராக் மீதான யுத்தத்தை எதிர்த்து நின்றிருக்க வேண்டும். ஆனால் அவர்களது நிலவுடமை வழிவந்த பாராளுமன்றக் கண்ணோட்டம் நிறைந்த ஆதிக்க அரசியல் நிலைப்பாடு ஏகாதிபத்திய விசுவாசத்தையே எடுத்தியம்பி நிற்கின்றதைக் காண முடிகிறது. இவர்கள் தமது விசுவாசத்தை மறைக்க ஈராக் பிரச்சினை முஸ்லீம்களின் பிரச்சினை என்றே அர்த்தம் காட்டிக் கொள்கிறார்கள்.

அன்றிலிருந்து இன்றுவரை தமிழர் தலைமைகள் ஏகாதிபத்திய விசுவாசத்திலும் அடிமைத்தன நிலையிலுமே இருந்து வருகின்றனர் என்பதைக் கண்டு கொள்ள அதிக விளக்கம் எதுவும் தேவையில்லை. ஆனால் தமிழர்கள் மத்தியில் நிறைந்தளவு அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு இருந்து வருவதை எவரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

படிப்பகம்

# ஜீ.எல்.பீரிசின் இன்னொரு பிதற்றல்

சமாதான நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்க மக்களின் ஆதரவை உறுதி செய்யும் நோக்கில் மக்கள் தீர்ப்பைப் பெறுவதற்கான சர்வஜன வாக்கெடுப்பை அரசாங்கம் நடத்தவிருப்பதாக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார். அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கு, மிடையிலான யுத்த நிறுத்தம் ஒரு வருடத்திற்கு மேலாக அமுலில் இருக்கிறது. பேச்சுவார்த்தைகள் கடந்த ஏழு மாதங்களாக நடைபெறுகின்றன. இவ்வேளையில் முன்னெடுக்கப்படுகின்ற சமாதான நடவடிக்கைகளுக்கு மக்களின் ஆதரவு இருக்கிறதா என்று பரீட்சித்துப் பார்க்க வேண்டிய தேவை திடீரென ஏற்பட்டது ஏன்? அல்லது சமாதான நடவடிக்கைகளுக்குப் பெரும்பான்மையான மக்கள் ஆதரவாக இருக்கிறார்கள் என்று நிரூபிக்கும் தேவை ஏன் ஏற்பட்டுள்ளது?

ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி ஐ.தே.மு. அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற சமாதான நடவடிக்கைகளை விமர்சிக்கிறதேயன்றி முற்றாக நிராகரிக்கவில்லை. ஜே.வி.பி.யும் சிஹல உருமயவுமே சமாதான முன்னெடுப்புகளை எதிர்க்கின்றன. இவற்றை விட பெரும்பாலான மக்கள் வீதிக்கு இறங்கி அவர்களது எதிர்ப்பைக் காட்டவில்லை. அவ்வாறிருக்கும் போது அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பொது மக்களின் கருத்தை அறிவதற்கான மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று எண்ணியதேன்?

ஏற்கனவே சமாதான பேச்சுக்கள் இழுத்தடிக்கப்படுகின்றன என்ற விமர்சனங்கள் மேலோங்கியுள்ளன. வெளிநாடுகளும் உதவி வழங்கும் நிறுவனங்கள் இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் திருப்தி தருவதாக இல்லை என்று விசனம் தெரிவித்துள்ளன. இந்நிலையில் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்காக மக்கள் தீர்ப்பு சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்பது சமாதான முயற்சிகளை மேலும் இழுத்தடிப்பதாகவே இருக்கும்.

கடந்த பொதுத் தேர்தலின் போது புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக ஐ.தே.மு. பகிரங்கமாக அறிவித்து அதன் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தெரிவித்திருந்தது. ஐ.தே.மு. புலிகளுக்கு நாட்டை பிரித்துக் கொடுக்கப் போவதாக பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பி.யும் பிரசாரம் செய்தன. எனினும் ஐ.தே.மு. தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் ஐ.தே.முன்னணிக்கும் அதிகார ரீதியாகவும் அணுகுமுறை ரீதியாகவும் முரண்பாடுகள் நிலவுகின்றன. எனினும் ஜனாதிபதி சமாதான முயற்சிகளைக் கைவிடும்படி குறிப்பிடவில்லை. எனவே சமாதான முயற்சிகளுக்கு ஆதரவான சூழ்நிலையே நிலவுகிறது.

இவை ஒரு புறமிருக்க சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க மக்கள் தீர்ப்பைப் பெறுவதற்கான சர்வஜன வாக்கெடுப்பை நடத்த முடியுமா? இலங்கையின் அரசியலமைப்பில் அதற்கு ஏற்பாடு இருக்கிறதா?

> → சமாதான நடவடிக்கைகளுக்கு மக்கள் தீர்ப்பெனும் சர்வஜன வாக்கெடுப்பு தேவையா?
> → அவ்வாறான சர்வஜன வாக்கெடுப்பை நடத்த முடியுமா?
> → அது சட்டப்படி செல்லுபடியாகுமா?

1978ம் ஆண்டு அரசியலமைப்பின் 85. 86. 87ம் உறுப்புரைகள் மக்கள் தீர்ப்புப் பற்றி கூறுகின்றன. ஏதாவது சட்டமூலத்தைச் சட்டமாக்குவதற்கு மக்கள் தீர்ப்பு அவசியமென அமைச்சரவை அமைச்சர்கள் சான்றுப்படுத்தினால் ஜனாதிபதி அதனை மக்கள் தீர்ப்பிற்கான சர்வஜன வாக்கெடுப்பிற்கு விட வேண்டும். ஏதாவது ஒரு சட்டமூலத்தை சட்டமாக்குவதற்கு மக்கள் தீர்ப்பிற்கு விட வேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் போது ஜனாதிபதி அவ்வாறு செய்ய வேண்டும்.

மேற்படி சந்தர்ப்பங்களைத் தவிர அரசியலமைப்பை மாற்றுவதற்கான தல்லாத அரசியலமைப்பிற்கு முரணில்லாத சட்டமூலங்களை ஜனாதிபதி அவரின் தற்றுணிப்பின்படி தானாகவே மக்கள் தீர்ப்பைப் பெறுவதற்கான சர்வஜன வாக்கெடுப்பிற்கு விடலாம்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை ஜனாதிபதி மக்கள் தீர்ப்பிற்கு விடலாமாயினும் உறுப்புரை 85ற்கு அமைவாக ஏதாவதொரு சட்டமூலத்தையே சர்வஜன வாக்கெடுப்பிற்கு விட முடியும். அந்த வகையில் பார்க்கின்ற போது மக்கள் தீர்ப்பிற்கான சர்வஜன வாக்கெடுப்பு என்பது சட்டமூலங்களுக்குரியனவாகும். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த வேறு விடயங்களையும் சர்வஜன வாக்கெடுப்பிற்கு விடலாம் என்ற வாதம் முன்வைக்கப்படலாம். அதற்கு அமைச்சரவை அமைச்சர்களின் அங்கீகாரம் தேவை. அல்லது உயர்நீதிமன்றம் மக்கள் தீர்ப்புத் தேவையென தீர்ப்பளிக்க வேண்டும். பாராளு மன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு தேவை. இங்கு சமாதான நடவடிக்கைகளை மக்கள் தீர்ப்பிற்கு விடுவதாயின் ஜனாதிபதியின் கருத்துப்படி அவற்றை தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக ஜனாதிபதி கருத வேண்டும். ஜனாதிபதியே மக்கள் தீர்ப்பிற்கான சர்வஜன வாக்கெடுப்பிற்கு விட வேண்டும்.

எமது நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் ஜனாதிபதியின் அரசாங்கம். பிரதமரின் அரசாங்கம் என இரண்டு இருக்கின்றன. இரண்டும் வேறுபட்ட கட்சிகளை பிரதிநித்துவம் செய்வதால் ஒருமைப்பாடுடையனவாக அரசாங்கம் நடத்தப்படுவதில்லை. சமாதான நடவடிக்கைகளில் கூட இரண்டு அரசாங்கங்களும் முரண்பட்டதாகவே இருக்கின்றன.

எனவே ஜீ.எல்.பீரிஸ் நினைத்தால் மட்டும் சமாதான நடவடிக்கைகளுக்கான மக்கள் தீர்ப்பைப் பெறுவதற்கான சர்வஜன வாக்கெடுப்பை நடத்த



முடியாது. ஜனாதிபதியின் இணக்கம் தேவை. அதற்கு சாத்தியமில்லை.

இவ்விடத்தில் சமாதான நடவடிக்கைகளுக்கு மக்கள் தீர்ப்பைப் பெறுவது என்பது வேறு. பேச்சுவார்த்தைகளின் இறுதியில் எய்தப்படும் ஒருமைப்பாட்டின் அடிப்படையில் இயற்றப்படும் புதிய அரசியலமைப்பை அல்லது புதிய அரசியலமைப்பு ஏற்பாடுகளை சர்வஜன வாக்கெடுப்பிற்கு விடுவது என்பது வேறு என்பதைப் புரிந்து கொள்ளல் அவசியம்.

2000ம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி சமர்ப்பித்த அரசியலமைப்பு சட்டமூலத்திற்கு மக்கள் தீர்ப்பைப் பெறுவதற்கான சர்வஜன வாக்கெடுப்பு நடத்த ஜனாதிபதி சந்திரிகா செய்த பிரகடனம் சட்ட முரணானது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமை தெரிந்ததே. மக்கள் தீர்ப்பைப் பெறுவதற்கான சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கு அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க மக்கள் தீர்ப்பைப் பெறுவதற்கான சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கான நிபந்தனைகள் நிறைவேற்றப் பட முடியாது. அதற்கு முட்டுக்கட்டைகள் இருக்கின்றன.

எனவே தேவையற்ற ஒன்றைச் செய்யவும். முடியாத ஒன்றைச் செய்யவும் ஜீ.எல்.பீரிஸ் அக்கறை காட்டுவதேன்? அவர் ஒரு சட்டப் பேராசிரியர் என்பதையும் அரசியல் சட்ட அமைச்சர் என்பதையும் மறந்து அரசியலமைப்பிற்கு இயைபில்லாத விடயங்களை செய்யப் போவதாக கூறுவதேன்?

அவர் ஜனாதிபதி சந்திரிகாவின் அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தவர். ஜனாதிபதியின் குழப்பமான சமாதான நடவடிக்கைகளுக்கு அவர் முக்கிய காரணமாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் புலிகள் இயக்கத்தை தடை செய்வதில் முக்கிய பங்காற்றினார். ஒரு கட்டத்தில் புலிகள் இயக்கம் ஆயுதங்களை கீழே வைத்தால்தான் அவ்வியக்கத்துடன் பேச முடியுமென்றும் குறிப்பிட்டவராவார். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களை விடுதலை செய்வதற்கு தடையாக இறுக்கமான நிலைப்பாட்டை கொண்டிருந்தார். புலிகள் இயக்கத்தின் நிலைப்பாட்டிற்கு மாறான அபிப்பிராயங்களை வெளியிட்டதன் மூலம் அரசிற்கும் புலிகள் இயக்கத்திற்கும் இணக்கப்பாடு ஏற்பட முடியாதவாறு ஜீ.எல்.பீரிசும். லக்ஷ்மன் கதிர்காமரும் கருத்துக்களை வெளியிட்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜீ.எல்.பீரிஸ் ஐ.தே.க. அரசாங்கத்தின் அமைச்சராக பதவியேற்ற பின்னரும் சமாதான நடவடிக்கைகள் பற்றி சில நிதானமற்ற கருத்துக்களை வெளியிட்டிருந்தார். சமாதான நடவடிக்கைகளுக்கு மக்கள் தீர்ப்பைப் பெறுவதற்கான சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று தற்போது கூறுவதும் அவர் முன்பு கூறி வந்த சமாதான நடவடிக்கை களுக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையை சார்ந்ததே ஆகும்.

இது அவரது பேரினவாத நிலைப்பாட்டின் வெளிப்பாடே ஆகும். அத்துடன் முரண்பாடுகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளில் எப்போதும் அரசே கூடிய பயனைப் பெற வேண்டும் என்ற முதலாளித்துவ நிலைப்பாட்டை எப்போதும் உயர்த்திப் பிடிப்பவராகவே இருந்து வருகிறார்.

எனவே ஜீ.எல்.பீரிஸ் போன்றவர்கள் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நிதானமான பேச்சாளராகவோ இணைப்பாளராகவோ இருக்க முடியாது என்பதே நிரூபிக்கப்படுகிறது.

---

# சமாதான முன்னெடுப்புக்களுக்கு நிபந்தனையாகிவிட்ட வெளிநாட்டு உதவிகள்

வாஷிங்டனில் நடைபெற்ற இலங்கை அரசாங்கத்திற்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அழைப்பு விடுக்கப்படாமை குறித்து தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத் தலைமை பெரிதும் விசனம் தெரிவித்துள்ளது. ஏற்கனவே ஒஸ்லோவிலும். யப்பானிலும் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டங்களில் புலிகள் இயக்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்ட சர்வதேச சமூகத்தின் உதவியை பெறுவதில் இலங்கை அரசாங்கமும் விடுதலை புலிகள் இயக்கமும் இணைந்து செயற்படுவது என்று இணங்கிக் கொண்டதன் அடிப்படையிலேயே இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டங்களில் விடுதலைப் புலிகள் இயக்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டதாக கூறப்படுகிறது.

வாஷிங்டன் கூட்டத்திற்கு புலிகள் இயக்கத்திற்கு அழைப்பு விடுக்காமைக்கு அமெரிக்காவின் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் இன்னும் விடுதலைப் புலிகள் இயக்கம் உள்ளடக்கப்பட்டிருப்பதே காரணம் என்று அமெரிக்க அரச தரப்பில் கூறப்பட்டுள்ளது. அக்கூட்டத்தில் கலந்து கொண்ட இந்தியாவின் எதிர்ப்பும் என்பது வெளிப்படுத்தப்படாத காரணமாகும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயல்பு வாழ்க்கை ஏற்படுத்துவது உடனடி அவசர காரியமென்றும் சமாதான பேச்சுவார்த்தைகளில் முடிவு செய்யப்பட்டது. அத்துடன் இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பது அடிப்படை விடயமாகும். இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கு மீளமைப்பு நடவடிக்கைகளை செய்ய வேண்டியது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாகும். தமிழ் மக்கள் மீது யுத்தத்தை திணித்த அரசாங்கங்களே வடக்கு கிழக்கை மீளமைப்பதற்கான நிதியை தேடிக் கொடுக்க வேண்டும். அதற்காக உதவி வழங்கும் நாடுகளிடம் உதவி பெறவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். உதவி வழங்கும் நாடுகள் சமாதான முன்னெடுப்புகளின் முன்னேற்றங்களை முன் நிபந்தனையாக கொள்வதால் அம் முன்னேற்றங்களை காட்ட வேண்டியது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

வடக்கு கிழக்கை மீளமைப்பதற்கான நிர்வாக விடயங்களில் புலிகள் இயக்கமும் அரசாங்கமும் சேர்ந்து செயற்படுவதும். சேர்ந்து நிதியைக் கோருவதும் அவசியமாகியுள்ளது. அதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டங்களில் விடுதலைப் புலிகள் இயக்கம் கலந்து கொள்வது தவிர்க்க முடியாத சமாதான நடவடிக்கையாக வேண்டுமென்பதில்லை.

இலங்கை அரசாங்கத்திற்கு உதவி கிடைக்க வேண்டுமென்பது சமாதான நடவடிக்கைகளுக்கான முன் நிபந்தனை ஆகாது. அது தமிழ் மக்கள் சார்ந்த நிகழ்ச்சி நிரலுமல்ல வடக்கு கிழக்கை மீளக்கட்டியமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு உதவிகளை பெற்றுக் கொள்ள வேண்டுமெனின் அது அதனுடைய பொறுப்பு. அவ்வுதவிகளை பெற்றுக்கொள்ளும் பொறுப்பை விடுதலை புலிகள் இயக்கம் பகிர்ந்துகொள்வது சமாதான நடவடிக்கைகளின் பகுதியாகாது.

பேச்சுவார்த்தைகள் ஆமை வேகத்தில் நகர்வதற்கு வெளிநாட்டு உதவிகளை பெற்றுக்கொள்வதை சமாதான நடவடிக்கைகளின் பகுதியாக்கியமையும் ஒரு காரணமாகும். அதனால் இலங்கை அரசாங்கத்திற்கே நன்மையாகியுள்ளது. வெளிநாட்டு உதவிகள் கிடைத்தால்தான் வடக்கு கிழக்கு மீளமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்ற சாட்டை முன்வைக்க அரசாங்கத்திற்கு வசதியாகியுள்ளது.

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்வதை சர்வதேச அங்கீகாரமாகக் கொள்ளும் விடுதலைப் புலிகள் இயக்கம் அது சமாதான நடவடிக்கைகளின் பகுதியாக்கப்பட்டதால் ஏற்படும் பாதிப்புகளை அலட்சியம் செய்திருக்கிறது. மீளமைப்பிற்கான நிதியை தேடும் பொறுப்பை விடுதலை புலிகள் இயக்கமும் பகிர்ந்து கொண்டு விட்டது. சமாதான நடவடிக்கைகளில் ஆகக்கூடிய நன்மைகளை பெற்றுக் கொண்டு ஆகக்கூடியளவு அரசியல் தீர்வை பெறுவதையே நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். அந்நோக்கத்தை அடைய நடவடிக்கை களை எடுக்காமல் சர்வதேச அந்தஸ்த்து அல்லது அங்கீகாரத்தையே விடுதலை புலிகள் இயக்கம் முதன்மை படுத்துவதாக தெரிகிறது.

சர்வதேச சமூகம் என்பது ஏகாதிபத்தியங்களும். மேலாதிக்க சக்திகளுமாகும். அவை போராட்டங்களை அங்கீகரிப்பது என்பது அவற்றை அடக்குவதற்கும் தோல்வியடைய செய்வதற்குமான அடிப்படையாகும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். யுத்தம். சமாதானம். வெளிநாட்டு உதவி என்பன ஏகாதிபத்திய உலகமயமாதலின் பகுதியாகவே இருக்கின்றன. இலங்கையின் சமாதான் நடவடிக்கைகளை ஏகாதிபத்திய உலகமயமாதலின் பகுதியாக்குவதை தவிர்ப்பதே சரியானது என்ற அடிப்படை தெளிவின்றி தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வை பெறுவது சாத்தியமில்லை. சமாதான நடவடிக்கைகளை உலகமயமாதலின் பகுதியாக்குவதிலேயே இலங்கை அரசாங்கமும். அமெரிக்க ஏகாதிபத்தியமும் கண்ணும் கருத்துமாக இருக்கின்றன. அதற்கு துணைபோவதில் தமிழ்மக்களுக்குரிய உரிமைகள் உறுதிசெய்யப்பட முடியாது. அதற்கு துணைபோகாமல் எவ்வாறு தமிழ்மக்களுக்குரிய தீர்வை பெற்றுக்கொள்வது என்பதிலேயே சமாதான நடவடிக்கைகளின் வெற்றி தங்கியுள்ளது.

வெளிநாட்டு உதவிகளுக்கு சமாதான முன்னெடுப்புகள் நிபந்தனையாக இருந்தால் பரவாயில்லை. சமாதான முன்னெடுப்புகளுக்கு வெளிநாட்டு உதவிகள் நிபந்தனையாக்கப்பட்டு விட்டால் சமாதான முன்னெடுப்புக்களால் தமிழ் மக்களுக்கு பயன் ஏற்படப்போவதில்லை.

www.padippakam.com



# ஜனாதிபதியின் இந்திய விஜயமும் குழப்பங்களும்

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க இந்தியாவுக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தார். அவர் தமிழக முதலமைச்சர் செல்வி ஜ. ஜெயலலிதாவையும். இந்திய பிரதமர் வாஜ்பாய். பிரதிபிரதமர் அத்வானி. வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சின்ஹா. ஜனாதிபதி அப்துல் கலாம் ஆகியோரை சந்தித்தார். அவர்களிடம் ஐ.தே.மு.-புலிகள் பேச்சுவார்த்தைகளால் புலிகள் நன்கு பலமடைந்து விட்டதாக தெரிவித்த சந்திரிகா இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வில் இந்தியாவுக்கு முக்கிய பங்கிருப்பதாக கூறியுள்ளார். இலங்கையின் சமாதானத்தை நிலைநாட்ட இந்தியா அரசியல் ரீதியான தலையீட்டையும் பங்களிப்பையும் செய்ய வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அனுசரணையாக நோர்வே இருக்க ஐ.தே.க அரசாங்கத்திற்கும் விடுதலை புலிகள் பேச்சுவார்த்தை நடக்கும் போது இந்தியா குழப்பாமல் இருப்பதே இந்தியாவின் பங்களிப்பாக இருக்க முடியும். பிராந்திய அரசியல் நலன். மேலாதிக்க அக்கறை என்பவற்றின் அடிப்படையில் இந்தியா இலங்கை மீது எப்போதும் பிடியை வைத்திருக்க விரும்பும். அதற்கு உதவி செய்யும் வகையிலான இலங்கையின் தலைவராக இருந்து அவருடைய அதிகாரத்தை மீண்டும் நிலைநாட்டிக் கொள்ள சந்திரிகா விரும்புகிறார். ஐ.தே.மு. அரசாங்கத்திற்கு இடைஞ்சல் கொடுத்து மீண்டும் ஒரு தேர்தலை நடத்தாமல் பாராளுமன்றத்தில் சில எம்.பிக்களை சேர்த்துக்கொண்டு மீண்டும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்பது அவரின் விருப்பமாகும். ஐ.தே.மு.யும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹவும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அதிகமாகவே சலுகைகளை வழங்குவதாக



உள்நாட்டிலும். வெளிநாட்டிலும் பிரசாரம் செய்து ஐ.தே.மு ஆட்சியை கவிழ்க்க வேண்டிய அவருடைய நியாயத்தை சந்திரிகா கூறிவருகிறார்.

இந்தியாவின் அழைப்பை ஏற்று அங்கு சென்றிருந்த சந்திரிகாவால் அவருடைய புலி எதிர்ப்பு நிலைப்பாட்டை இந்திய தலைவர்களும் பரிமாறிக்கொள்ள முடிந்ததேயன்றி சமாதான முன்னெடுப்புகளுக்கு எதிரான நிலைப்பாட்டை முன்வைக்க முடியவில்லை. இந்திய தலைவர்களும் புலிகள் மீதான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தபோதும் சமாதானத்திற்கு எதிராக பேசவில்லை. அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் நெருங்கிய உறவு இருப்பதால் அமெரிக்கா இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்களை ஆசீர்வதிக்கும்வரை வெளிப்படையாக இந்தியா சமாதான முயற்சிகளுக்கு எதிரான நிலைப்பாட்டை தெரிவிக்காது. ஆனால் அதன் புலி எதிர்ப்பு. மேலாதிக்கம். பிராந்திய அரசியல் நலன் என்பவற்றை விட்டுக் கொடுக்காது. அவற்றை சந்திரிகா அவரது அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறார்.

அவரின் புலி எதிர்ப்பு நிலைப்பாடும். அதிகார அசையும் ஐ.தே.மு. சமாதான முயற்சிகளை குழப்புவதற்கு அடிப்படையாக இருக்கின்றன. ஆனால் சமாதானத்தின் பக்கம் நிற்பதாக உச்சரிக்காமல் அவரின் நோக்கத்தை அடைவதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியாது என்பது யதார்த்தமாகியுள்ளது. அவரால் சமாதான முன்னெடுப்புகளை முற்றாக நிராகரிக்க முடியாது.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியை கைப்பற்றினால் தொடர்ந்து சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் அதுபற்றி விடுதலை புலிகள் இயக்கத்தின் கருத்தை அறிவதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பின் எம்.பி. ஒருவருக்கூடாக தகவலை விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அனுப்பியதாக தெரியவருகிறது. ஜனாதிபதியின் அந்த எதிர்பார்ப்பை புலிகள் நிராகரித்து விட்டதும் ஐ.தே.மு. சமாதான முன்னெடுப்புகளை குழப்புவதில் ஆர்வம் கொண்டுள்ளார் என்பது நிரூபணமாகிறது.

அதைவிட ஜே.வி.பியுடன் சேர்ந்தே பொ.ஐ.மு. ஆட்சியமைக்கப்போவதாகவும் அடிக்கடிக்கூறி வருகிறார். ஜே.வி.பி.யோ சமாதான முன்னெடுப்புகளை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. இன்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதனையும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைத்துக் கொண்டு எவ்வாறு சமாதான் முயற்சிகளை முன்னெடுக்க முடியும் என்பது கேள்வியே. சமாதான பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதை இடைநிறுத்திக் கொள்வதாக விடுதலை புலிகள் அறிவித்ததை அடுத்து 1995 ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை மீண்டும் அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி கட்டளை இட்டுள்ளார். இது ஜனாதிபதியின் இன்னொரு குழப்பமான நிலைப்பாட்டின் வெளிப்பாடாகும்.

இந்த குழப்பங்களெல்லாம் நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ வர்க்கத்தினதும் பேரினவாதத்தினதும் லட்சணங்களாகும். ஜனாதிபதி சந்திரிகாவின் வர்க்க நிலைப்பாடும் பேரினவாத அகங்காரமும் சமாதான முன்னெடுப்புகளில் முழுமனதாக ஈடுபட முடியாது தடுக்கின்றன. அவர் ஏகாதிபத்திய உலகமயமாதலுடன் சங்கமமாக வேண்டும் அல்லது எதிர்க்க வேண்டும். இரண்டும் கெட்டான் நிலைமையிலிருந்து கொண்டு நிலைமைகளை சமாளிக்க முடியாது. ஏகாதிபத்திய உலகமயமாதலுடன் நிலப்பிரபுத்துவ பேரினவாத அகங்காரங்கள் சமரசம் செய்ய வேண்டிய நிலையே ஏற்படும்.

இதனை சரியாக விளங்கிக் கொண்டே தமிழ் மக்களுக்களுடைய போராட்டங்களும் அவர்கள் சார்பான சமாதான முன்னெடுப்புகளும் தொடரப்பட வேண்டும். இரண்டு முதலாளித்துவ கட்சிகளிடையேயான முரண்பாடுகளை சரியாக கைக்கொண்டு தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமை உறுதிசெய்யப்பட வேண்டும்.

அதனை விட்டு ஐ.தே.மு. தமிழ் மக்களின் சதாகால நண்பனாக நினைத்துவிட்டால் அரசியலில் தமிழ் மக்கள் மீண்டும் தவறிழைத்தவர்களாவார்கள்.

# யாழ்ப்பாணமும் நீர்வளமும்

## யாழ் குடா நாடு பாலைவனமாகுமா?

நிலநீர் ஆய்வாளர் க. நடனசபாபதி

### குளங்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் 1000க்கு மேற்பட்ட குளங்கள் காணப்படுகிறன. இவற்றை யாருமே அமைத்து வைக்கவில்லை. இவையனைத்தும் பாறைகள் கரைவதனால் ஏற்பட்டவையே. பாறைகள் நிலத்தின் மீது தென்படும் இடங்களை மக்கள் 'கலட்டிப்பூமி' என்று அழைக்கும் மரபு நடைமுறையில் உள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் அநேக இடங்கள் 'கலட்டி' என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. இத்தகைய கலட்டி நிலங்கள் கரைவதனால் நிலத்தில் பதிவுகள் காணப்படுகின்றன. இப்பதிவு நிலங்களைக் குளங்கள் என்கிறோம். குளங்கள் தோன்றியுள்ள இடங்கள் தெளிவாக அறிந்துகொள்ள இயலாத காரணத்தால் விமானத்திலிருந்து எடுக்கப்பட்ட தரைப்படங்களில் காணப்பட்ட பதிவு நில அமைப்பைக் குளங்கள் எனக் கருதுகிறோம். இக்குளங்களில் பல சேறு மூடப்பட்டுக் காணப்படுகின்றன. சேறு-களி மண்ணால் ஆனவை. மிகவும் மிருதுவாகவுள்ள மண்ணாலானவைதான் களிமண். இது நீர் உட்புகமுடியாத அளவு மிகவும் குறுகியவை. இந்தச் சேற்றின் ஓரளவை மட்டும் அகற்றினால் நீர் இக்குளங்களில் தேங்கி நிற்கும். இந்நீர் கால்நடைகளுக்குத் தேவையான வற்றை வழங்கும். சலவைத் தொழிலாளர்களுக்கும் பயன்படும். சேற்றை முற்றாக அகற்றினால் சிறிதளவு நீர்கூட இதில் தங்காது. முழுவதும் கசிந்து நிலவடிக்கு சென்றுவிடும். நிலவடியில் நன்னீர் சென்றடைய இது ஏதுவானால் நன்னீர் மட்டம் உயரும்.

இதன் காரணமாக குளங்களில் சேற்றை அகற்றும்போது கூடிய கவனம் செலுத்த வேண்டும். முற்றாக சேற்றை அகற்றிவிட்டால் குளத்தில் நீர் தங்காது போய்விடும். ஓரளவு சேற்றை மட்டும் நீக்கினால் குளத்தில் நீர் தங்கி வெளி நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யும். குளங்கள் அல்லது நிலப்பதிவுகள் சேற்றை அகற்றுகின்ற முறையைப் பொறுத்தே நீர் சேமிப்பு நிலவடியில் கூடும். அல்லது குளங்களில் தேங்கி நிற்கும்.

## நன்னீர் கிணறுகள் பாதுகாக்கப்படவில்லை

### நீர்வளமும் உப்புவளமும்

குடாநாடு கடல்நீர் உட்புகுவதால் பாதிப்புக்குள்ளாகும் எனக்கருதி நீர்பாசனத் திணைக்களம் கடல் நீர் நிலத்திற்குள் உட்புகாவண்ணம் ஏற்பாடுகள் செய்யும் நோக்கில் ஏற்பாடுகளைச் செய்துள்ளது. 1948ம் ஆண்டு 11 இலட்சம் ரூபா செலவில் தொண்டைமானாற்றின் வடபகுதியிலும் நாவற்குழியின் தென்புறமாகள கடல்நீர் நிலத்திற்குள் புகாதிருக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப பட்டுள்ளது.

நாவற்குழி தடுப்பு முகாம் கடல் நீர் உட்புகாமல் தடுக்கிறது. ஆனால் தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் கடல்நீரை உள்ளே வரவழி செய்கிறது. கடல்நீர் நிலத்தில் தேங்கி நின்று நீர் ஆவியானால் உப்புப்பெற இயலும். கடல்நீர் நிலத்திற்குள் சென்றுவிடாமல் தடுக்க மண்வரம்புகள் அமைக்கப்பட்டன. மழை இந்த மண்வரம்புகளைக் கழுவி அகற்றி விட்டமையால் கடல்நீர் எவ்வித தங்குதடையுமின்றி விளைநிலமெங்கும் பரவத் தொடங்கியது. இதனால் கோப்பாய்த் தெற்கு உவர்நிலமாக மாறியது. விளைநிலங்கள் தரிசு நிலங்களாயின. நன்னீர்க் கிணறுகள் உவர்நீர்க் கிணறுகளாகின்றன. இருபாலை கோப்பாய்ப் பகுதி மக்கள் கிளிநொச்சிப் பகுதிக்கு இடம்பெயர நேரிட்டதுபோல் இப்பகுதி மக்கள் நன்னீரின்றித் தவிக்கலாயினர். நன்னீர் இன்மையால் தீவுப்பகுதி மக்கள் கிளிநொச்சிப் பகுதிக்கு இடம்பெயர நேரிட்டதுபோல் இப்பகுதி மக்களும் வேறிடத்திற்கு இடம்பெயர வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுவர் என்பதில் சந்தேகமில்லை.

நவாலியில் அமைந்துள்ள கல்லூண்டாய் உப்பளமும் இந்நிலையில்தான் உள்ளது. ஆணையிறவு உப்பளம் பலமான வரம்புகளைக் கொண்டிருப்பதால் கடல்நீர் உட்புக முடியாமல் போனது. இதற்கு அருகாமையில் இருந்த காவல் முகாமிற்குச் சங்கடம் ஏற்படுத்தி விடக்கூடாது என்கின்ற அச்சம் காரணமோ தெரியவில்லை.

தொண்டமானாற்றுத் தடைக் கதவுகள் பலவந்தமாகத் திறந்து விடப்பட்டமையால் வல்லை. மண்டான் பகுதிகளில் உப்பு விளைகிறது.

### குழாய்க்கிணறுகள்:

நிலவடி நீர் பற்றி முழுமையாக அறிந்து கிணறுகளை மட்டும் நம்பியிருந்தால் போதாதென்று கருதிய ஆராய்ச்சிப் பகுதியினர் குடாநாட்டின் பகுதிகளில் பல்வேறு இடங்களில் குழாய்க் கிணறுகளை அமைக்க விரும்பினர். இப்பொறுப்பு குடாநாட்டு நிலநீர் நிர்வாகிகளிடம் பொறுப் பளிக்கப் பட்டது. ஆனால் இக்குழாய் கிணறுகள் தமக்கு வேண்டியவர்களின் வளவுகளில் அமைக்கப்பட்டன. இதனால் நிலஆராய்ட்சியின் நோக்கமெதுவும் கைகூடவில்லை. இப்பணியை தலைமை நிலையத்தவரே நேரில் நிறைவேற்றியிருந்ததால் நோக்கம் நிறைவேறியிருக்குமோ தெரியவில்லை.

ஆனால் ஆராட்சியின் ஆரம்பக் கட்டங்களில் தலைமை நிலையத்திலிருந்து பளையில் நிறுவிய குழாய் கிணற்றிலிருந்து போதிய தகவல்களை பெறக்கூடியதாக இருந்தது. நிபுணர்கள் நிலத்திற்கடியில் சுமார் 700 அடிக்குக் கீழ்வரை குடைந்து குழாய்க்கிணறுகளை நிறுவினர். இக்குழாய்க்கிணறுகளிலிருந்து பல தகவல்களைப் பெறக்கூடியதாக விருந்தது. இக்குழாக்கிணறு பளை. ஏ-9 பாதையில் அமைந்துள்ளது. இக்குழாய்க்கிணற்றிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டின் பூகற்ப அமைப்பு எப்படி உள்ளது என்பதை ஓரளவு தெளிவாக அறிய முடிகிறது.

வீதி அருகே இந்தக் குழாய்க்கிணறு அமைக்கப்பட்டிருந்தமையால் நீண்டகாலமாக எவ்வித பாதிப்புக்கும் உள்ளாகாமல் பாதுகாப்பாக இருந்து வந்தது. இப்பொழுதும் அதே நிலையில் இக்குழாய்க்கிணறு உள்ளதா என்று உறுதியாகக் கூறமுடியவில்லை.

# காலம் பிந்திய ஞானத்தால் பிரயோசனமில்லை

ஈராக் மீது யுத்தத்தை நடத்திய அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும் பிரிட்டிஷ் பிரதமர் டொனி பிளேயரும் கிறிஸ்த்தவர்களாக இருக்கமுடியாது என்று பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் ஏதேச்சாதிகார நடவடிக்கைகளால் கிறிஸ்தவ தர்மம் இல்லாமல் போய்விடுமா என்று அஞ்சுகிறார்.

அவரின் வயது. அவருக்கு இருக்கும் பாக்கின்சன் நோய் போன்றவற்றினால் அவர் எல்லாவற்றையும் நிதானமாக சிந்தித்து செயற்படுத்துகிறாரோ தெரியாது. எனினும் ஈராக் மீதான அமெரிக்க-பிரிட்டிஷ் யுத்தத்தை எதிர்த்தமை முற்போக்கானதேயாகும்.

சோவியத் யூனியனின் ஆட்சிமுறை. பூகோள அரசியல் என்பன மாக்சிஸ்ட்டு - லெனினிஸ்ட்டுக்களால் விமர்சிக்கப்பட்டு வந்தபோதும் அது பலமாக இருந்த நேரத்தில் உலக நாடுகளின் பலம் சம நிலையாக காணப்பட்டது. அப்போது அணிசேரா நாடுகள் இயக்கமும் பலமாக இருந்தது.

அப்போது உலகநாடுகளின் மீது ஏகாதிபத்திய அத்துமீறல். ஆக்கிரமிப்பு. மேலாதிக்கம் என்பன வரையறுக்கப் பட்டனவாக இருந்தன.

சோவியத் யூனியனின் வல்லமை 80களின் பிற்பகுதியில் சிதைக்கப்பட்ட பிறகு பின்னடைந்திருந்த அமெரிக்கா மெல்ல மெல்ல தன்னை தனிப்பெரும் வல்லரசாக மீண்டும் தகவமைத்துக் கொண்டது.

அவ்வாறு சோவியத் யூனியன் சிதைக் கப்படவும் அமெரிக்கா தனிப்பெரும் சக்தியாக வளரவும்

தொடர்ச்சி 12ம் பக்கம்

# பொறியில் அகப்பட்ட பொன்னம்பலம்

**(பொறியில் அகப்பட்ட தேசம் . மு. பொன்னம்பலம். கொழும்பு. 2002-02-02. ப.44 +iv, ரூ.70.00)**

"பொறியில் அகப்பட்ட தேசம்". கவிதை என்ற வகையிற் படு சராசரியானது. சில சொற் தொடர்களை மு. பொன்னம்பலம் திரும்பத் திரும்பப் பயன்படுத்துவதன் மூலம் எதைச் சாதிக்கிறார் என்பது பற்றி ஆராய நான் முற்படவில்லை. ஒரு கவி அரங்கிற் கூட அலுப்புத் தட்டக் கூடியளவுக்கு 'எங்கிருந்து இக் குரல்கள்?'. 'ஈட்டிபோல் பாய்ந்தன'. 'காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள்' என்பன திரும்பத் திரும்ப வரும்போது அச் சொற்கள் ஆற்றலுங் கூர்மையும் இழக்கின்றன.

இந்த ஆக்கத்தின் மூலம் பொன்னம்பலம் உணர்த்த முயலுகிற செய்தி மேலோட்டமாகவே வாசித்துப் பழகிவிட்ட முன்னுரையாளருக்குப் பிரமிப்பை ஊட்டலாம். ஆழ்ந்து நோக்கினால். பொன்னம்பலம். பல விடயங்களைத் தவறாக விளங்கியும் விளங்கவும் முற்பட்டுள்ளதோடன்றித். தனது 'ஆன்மிக' நிலைப்பாட்டை வலியுறுத்துகிற பாவனையில் ஏகாதிபத்தியம் என்றால் என்ன என்ற தேடலையே தவற விட்டுள்ளார். அமெரிக்காவின் மீது 2001 செப்தெம்பர் 11ம் நாள் நடந்த தாக்குதலுக்கு 'வினைப் பயனைச்' சாட்சிக்கு அழைக்குமளவு அவரது உலகப் பார்வை இருப்பது பற்றி நான் வியப்படையவில்லை. ஆனால் அவரது மதிப்பீடுகளும் விளக்கங்களும் தமக்குள்ளும் யதார்த்தத்துடனும் முரண்படுவது பற்றியே இங்கு அதிகங் கூற வேண்டியுள்ளது. பல்வேறு விடயங்களை ஒருவர் தொட்டுப் பேசும் போது நாம் பிரமிப்பில் ஆழ இடமுண்டு. ஆனால் அவை எவ்வளவு கவனத்துடன் கையாளப் படுகின்றன என்பதைப் பார்த்தால் அப் பிரமிப்பு மன வெறுப்பாகிவிடும்.

ஃபன்ரம் (குளன்வும்) பொன்னம்பலத்தினதும் எனதும் இளம் பருவத்தில் ஓரிரு ஆங்கிலச் சஞ்சிகைகளிற் தொடராக வந்த ஒரு 'மாய மனிதனின்' சாகசக் கதை. அதி வலிமையுள்ள இம் மனிதன். இயற்கையை மீறிய வலிமை உடையவனல்ல. தந்திரமும் சமயோசிதமும் பூர்வகுடிகளின் ஆதரவுமே அவனது வல்லமை. அதைவிட. அம்மனிதன் உண்மையில் ஒருவனல்ல. பல ஆண் சந்ததிகள் அடுக்கடுக்காக. ஒரே மாய மனிதனாகவும் சாவை வென்றவனாகவும் வருவது தான் கதையின் முக்கியமான ஒரு அம்சம். பொன்னம்பலத்துக்கோ அவன் முஷ்டித் தகர்ப்பில் ஒரு கட்டிடத்தையே குடை சாய்ப்பவனாக வருகிறான். இக் கதைகளிற் சில தமிழாக்கப்பட்டு 1970களில் தமிழகத்தில் வெளியானதாக நினைவிருக்கிறது. வாசித்தோருக்கு நான் சொல்வது விளங்கும்.

நம்மோவை அடியொற்றி ஜேம்ஸ் மொண்ட் வந்ததாகக் கூறப்படுகிறது. நம்மோவுக்கும் ஜேம்ஸ் மொண்ட்டுக்கும் இடையிலான பாத்திர வார்ப்பின் வேறுபாடும் கால வரிசையுங் கூட இங்கே தவறவிடப்படுகின்றன. உண்மையில் இவர்களைப் பார்த்து அமெரிக்கர்கள் மயங்குவதை விட மூன்றாமுலகின் இளைய தலைமுறை




யினர் மயங்குவதுதான் வினோதம். அமெரிக்க மக்களின் சினிமாப் போதை உண்மையில் இந்தியர்களின தினுங் குறைவு. இன்று அமெரிக்காவின் தொலைக்காட்சிப் போதை பாலியல் வக்கிரம். குரூரமான வன்முறை. சமூகச் சார்போ பயனோ அற்ற சில்லரைக் களிப்பூட்டல் நிகழ்ச்சிகள் போன்றவற்றையே சார்ந்துள்ளது. உண்மையில் ஒவ்வொரு வலிய முதலாளிய நாடும் போல மூன்றாமுலக அடிமை நாடுகளும் ஒரே விதமான பொழுதுபோக்குப் போதைக்கே ஆளாகியுள்ளன. அமெரிக்காவின் சாபக்கேடு ஏதெனின். புற உலகம் பற்றிய அக்கறையற்ற ஒரு அமெரிக்க மைய வாதம் அங்கு திட்டமிட்டு உருவாக்கப் பட்டமையே. இது அமெரிக்காவின் வலதுசாரி விமர்சகர்கள் காணத் தவறுகிற ஒரு முக்கிய உண்மை.

ருடவசய (டுயணநச) கதிர்கள் பற்றியும் எழுதப்பட்டுள்ளது. அது என்னவென்று விளங்கவில்லை. புயடயஓலக்குத் தமிழ்ச் சொல் தராத படைப்பாளி. பால்வழி பற்றி எழுதுகிறார். (ஆடைமல றுயல) என்பதற்கு வேறு நல்ல தமிழ்ச் சொற்கள் உண்டென நினைக்கிறேன். பூர்வகுடிகள் "நிர்கதித்து" நின்ற "அனாதைத் தனம்" ஏனோ இன்றைய கற்றுக் குட்டிக் கவிஞர்களின் சொற் பஞ்சத்தையே நினைவூட்டுகிறது. புசயிநள ழக றுசயவா என்பது நிச்சயமாக வெஞ்சினத் திராட்சை அல்ல. "அடிமைகள் கனவு" பற்றிய கவனமற்ற குறிப்பு 'அடிமையின் கனவு' என்ற நீண்ட கவிதையைக் குறிக்கிறது என்று பின் குறிப்புக்கள் மூலமே தெளிவாகிறது.

இன்னொரு ஆபத்தான அம்சம். வரலாறு பற்றிய அவரது குழப்பம். குற்றச் செயல்கட்குத் தண்டனையாக மனிதர் இங்கிலாந்திலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பப் பட்டனரே அல்லாது அமெரிக்காவுக் கல்ல. செல்வம் பெறவும் வறுமையினின்று தப்பவும் அமெரிக்காவுக்குப் போனோரின் தொகையே அதிகம். அவர்கள் ஐரோப்பாவினின்று விரட்டப்பட்ட 'உதவாக்கரைகள்' அல்லர். கொலம்பஸ் கொலை வெறியோடு தான் அமெரிக்காவுக்குட் புகுந்தான் என்று கருத்து. கொலம்பஸ் அமெரிக்காவைத் தேடிச் சென்ற கதையையே தலை கீழாக்குகிறது. கொலம்பஸ் அமெரிக்காவை அடைந்ததைத் தொடர்ந்து நடந்தது இன்னொரு விடயம். பல இடங்களில் ஐக்கிய அமெரிக்காவும் இன்று மூன்றாமுலகின் ஒரு பகுதியாகிவிட்ட மத்திய தென் அமெரிக்கக் கண்டமும் குழப்பியடிக்கப் பட்டுள்ளன சீனா பற்றியும் ரஷ்யா பற்றியும் பொன்னம்பலத்தின் ஞானத்தை நான் சொல்லி யாரும் அறியத் தேவையில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். முதலாளியத்துக்கும் போருக்கும் உள்ள தவிர்க்க இயலாத உறவை அவர் என்றுமே விளங்கிக் கொள்ள ஆயத்தமாக இல்லை.

அமெரிக்க ஜனநாயகத்தில் காலூன்றி நின்றவராக லிங்கனுக்கு அடுத்து கெனடி வைக்கப்படுகிறார். கெனடிக்கும் மாஃபியாவுக்கும் ஊழலுக்கும் இருந்த சிக்கலான உறவு ஒருபுறமிருக்க கியூபாவிலும் வியற்நாமிலும் கெனடி தொடுத்த போர் பற்றிப் பொன்னம்பலம் அறிய மாட்டாரா? றம்போ மாயையை விடக் கெனடி மாயை ஆபத்தானது.

த்தொத்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கொள்கையின் அர்த்தம் தெரியாதவர்களே அதை மாஓவின் இடையறாத புரட்சியுடன் குழப்பிக் கொண்டனர். ரஷ்ய மொழியில் 'நிரந்தரம்' என்ற சொல் இடையீடற்ற என்ற பொருளில் பயன்பட்டதால் வந்த குழப்பத்துக்குச் சில இடதுசாரிகளே ஆளாகியுள்ள போது. மாக்ஸியம் பற்றிய ஈடுபாடே அற்று ஏதோ வசதிக்காகத் த்ரொத்ஸ்கியைத் தூக்கிப் பிடிக்கிற ஒருவரிடம் எதை எதிர்பார்ப்பது!

ஐன்ஸ்வைனுக்கும் அணுக்குண்டுக்கும் கற்பிக்கப்படும் உறவு. ஐன்ஸ்வைன் பற்றிய அறியாமையால் மட்டுமல்ல. ஒரு வகையான குரோதத்தாலும் உருவானது. அணுவிற் பொதிந்துள்ள ஆற்றலைக் கண்டறிந்ததற்கு மேலாக அதை எவ்வாறு விடுவிப்பது என்பது பற்றி ஐன்ஸ்வைன். எதுவுமே சொல்லவில்லை. ஏனெனில் அவர் அடிப்படையில் ஒரு கணித வியலாளர் செய்முறைப் பௌதிகவியலாளர் அல்ல. எனினும் அவர் கண்டறிந்த நு ஸ்ரீ அஉ' என்ற சமன்பாட்டின் முக்கியத்துவத்தின் விளைவாகவே அணுசக்தி பற்றிய ஆய்வு இயலுமாயிற்று. அணுசக்தியின் பிதாமகர்களாகக் கொள்ளப்படுவோர் என்றிகோ ஃபேர்மி போன்ற முதலாளிய நிறுவன விஞ்ஞானிகளே. காள் மாக்ஸுக்கு எதிராக ஐன்ஸ்வைனை நிறுத்தி அவரை அசுரகுரு என வருணிப்பது ஒரு இருளடைந்த ஆன்மிகப் பார்வையிலேயே இயலமாகும்.

தொடர்ச்சி 11ம் பக்கம்

## முடிந்தொழிந்த கதை பற்றிப் பேசாதிருப்பதற்கு

*முடிந்தொழிந்த கதைகளினிப் பேசாதீர் என்றெமக்கு*
*அடக்குமுறைச் சட்டம் ஆக்க வந்த ஐயன்மீர்,*
*'சாதிப் பகை ஒழிந்து சரி அடுக்குகளிற்*
*சமத்துவமும் வந்ததன்பின், சாதிக் கதையெதற்கும்,*
*போதுமினி' என்றெமக்கு ஆணையிட வந்து பல*
*போதனைகள் சொல்வோரே பொறுத்தருள்க, ஒரு வார்த்தை.*

*சாதி ஒழிந்ததென நீர் சொல்லுங் காரணத்தாற்*
*சாதிப் பழங்கதைகள் பிறர் பேசல் தவறென்றால்,*
*தமிழுக்கும் ஆட்சிமொழி என்றின்றோர் தரமுண்டு*
*ஆதலினால், ஐம்பத்து ஆறினிலே சிங்களத்தை*
*ஆட்சிமொழியாகச் செய்தவரின் ஆக்கினையை*
*மீள நினைவூட்டல் கூடத் தவறன்றோ!*
*மலையகத்து வாக்குரிமைப் பிரச்சனையின் பெரும்பகுதி*
*தீர்ந்துவிட்ட பின்னணியில், நாற்பத்து ஏழினிலே*
*நாடற்றோர் ஆக்கியதோர் நீசத்தனம் பற்றி*
*நாமின்றி பேசுவதும் நல்லதொரு செயலாமோ!*
*ஐம்பத்து எட்டு முதல் அடுக்கடுக்காய்த் தமிழரினம்*
*அனுபவித்த வன்முறையின் அல்லல்களை நாம் இந்த*
*அமைதி மிகு சூழலிலே எண்ணுவதும் சரியாமோ!*
*போர் துறந்து அமைதிவழித் தீர்வொன்றைக் கண்டறிய*
*அலுராய்ப் போயலைந்து போராளித் தலைவர்களும்*
*பேசிவரும் போதினிலே, ஓயாத அலைகளையும்*
*மாவீரர் நினைவினையும் பேசுவதும் முறையாமோ!*
*பழங் கொடுமை தமைப் பேசிற் போராடி வென்றவரின்*
*பெருமைகளை நாம் பேசிற், போயொழியும் அமைதியெனின்*
*போயொழிக அவ்வமைதி சுடுகாட்டிற் போயமர.*

*முடிந்தொழிந்த எப்பொருளும் மறுபடியும் பேசுவதால்*
*உயிர்பெறுதல் ஆகுமெனின், முடிந்தொழிந்ததென நினைந்த*
*கொடுமைகளின் வேர்களெலாம் அறுந்தும் அழியாமற்*
*தரைக்குட் கிடப்பதனை நீரறிவீர், நாமறிவோம்.*
*களைப் பூண்டை ஒழிப்பதெனின், மண்ணைக் கிளறாமல்,*
*மறைவாய்க் கிடந்ததன்மேல் வெய்யில் ஒளி பாயாமல்,*
*என்று முடிந்ததென எவர் சொன்னார்! நீர் சொல்லும்.*
*மடியிற் கனமிருந்தால் வழியிற் பயமிருக்கும்.*
*துணிந்துரைக்கும் மொழிகளிலே தவறொன்று தானிருப்பின்,*
*எடுத்துரையும். உண்மையெனில் ஏற்போம் நாம். ஏனென்றால்*
*எந்தவொரு கொடுமையதும் இல்லாதொழிந்த தெனில்,*
*உண்மையிலே வேரோடு மாய்ந்து மடிந்ததெனின்,*
*உம்மை விட, அதையறிய எங்களுக்கே பெருமகிழ்ச்சி*
*என்பதால், அஞ்சற்க. எல்லாமே நாங்கள்*
*எடுத்துரைப்போம் வெளிவெளியாய்.*

~ **புவனம்** ~

## மூன்றாம் உலகப் பண்பாடுகள் எங்கே செல்கின்றன?

மேற்கத்தைய வளர்ச்சியின் அளவுகோலைப் பயன்படுத்தும் மூன்றாம் உலக நாடுகளில் உள்நாட்டுப் பண்பாடு ஊடுருவப்பட்டு. அழிக்கப்பட்டு அதனிடத்தில் ஒரு முகப்படுத்தப்பட்ட மேற்கத்தைய நுகர்வுப் பண்பாடு இடம்பிடித்துள்ளது. இதன் விளைவால் உள்ளூர் தனித்துவம். திறமை. சுய ஆற்றல் என்பன இழக்கப்படுகின்றன. வேடிக்கை என்னவெனில் மூன்றாம் உலக மக்கள் தமது சொந்தப் பண்பாட்டுப் பாரம்பரியத்தை மறந்து அல்லது அதை ஏற்றுக் கொள்ளாமல் பாரம்பரிய புலமையை மறந்துள்ள நிலையில் அந்தப் புலமையை களவாடிய மேற்குலகம் அதைத் தமக்குள்ளே பங்கீடு செய்து வருகிறது.

பண்பாடு என்பது ஒரு சமூகத்தின் சிந்தனை முறை. செயற்படும் முறை என்று வரைவிலக்கணம் கூறலாம். இந்த வரைவிலக்கணத்தைப் பயன்படுத்தினால் மேற்குலக நுகர்வுப் பண்பாடு என்பது மக்களின் வாழ்வில் ஊடுருவி இரண்டறக் கலந்துள்ளதை அவதானிக்கலாம்.

வளர்ச்சி பற்றிய எமது எண்ணங்கள் பெருமளவில் மேற்கத்தைய வளர்ச்சியின் மாதிரியையே அளவுகோலாகக் கொண்டுள்ளது.

இந்த நிலையானது மேற்கத்தைய நுகர்வுப் பண்பாட்டின் உந்துதலால் ஏற்பட்டது. நாம் ஒரே மாதிரியான கட்டிடங்களை. ஒரே மாதிரியான கடைத்தொகுதிகளை. ஒரே மாதிரியானஉடன் உணவுகளை. ஒரே மாதிரியான ஆடை அலங்காரம். ஒரே மாதிரியான கல்வி முறை. ஒரே மாதிரியான விளையாட்டுக்கள். ஒரே மாதிரியான பாடல்கள்-சங்கீதம் அத்துடன் மேற்கில் காணப்படும் பண்டங்களையே தினமும் பயன்படுத்துகிறோம்.

மனித இயல்பைப் பற்றி ஆராயும் சுவீடன் நாட்டு அறிஞர் ஆசிய. ஆபிரிக்க நாடுகளில் பல்வேறு பகுதிகளில் ஆய்வுகள் மேற்கொண்டார். அவரின் கூற்றுப்படி நாம் மேற்கத்தவர்களைப் போல முக பாவனை செய்ய ஆரம்பித்துள்ளோம்.

நாம் எமது பண்பாட்டு நம்பிக்கையை. பண்பாட்டு சுய கௌரவத்தை இழந்துள்ளோம். எமது பாரம்பரிய உடை சௌகரியமாய் உள்ள போதும் அதை அணிவதற்கு வெட்கப் படுகிறோம். சுப்பர்மார்க்கட்டில் அடுக்கியிருக்கும் உணவு வகைகளையே நாம் விரும்புகிறோம். நாம் விரும்பும் வாழ்க்கை முறையானது 2020ம் ஆண்டளவில் எம்மில் அரைவாசிப் பேருக்கு புற்று நோயைத் தோற்றுவிக்கும்.

நாம் எமது பாரம்பரிய உடையை. உணவை. சங்கீதத்தை. உறைவிடத்தை என்னும் எத்தனையோ இழந்துவிட்டோம். நாம் சுற்றாடல். மருத்துவம். உயிரியல். வேட்டையாடல். மீன்பிடித்தல் போன்ற இன்னோரன்ன விடயங்கள் தரம் குறைந்ததாக நினைத்து அதை இழந்துவிட்டோம். நாம் நவீனமானதும். மேற்குலகத்தினதும் சகலதும் திறமானது என நம்புகிறோம்.

நுகர்வுப் பண்பாட்டின் மேலாதிக்கம் எவ்வளவு தாக்கமானது என்பது எமது பண்பாடு எது அன்னியப் பண்பாடு எது என்பதை வேறுபடுத்திப் பார்க்க இயலாதுள்ளது.

மேற்குலக ஆய்வுகூடங்களில் உருவாக்கப்பட்ட அறிவு என்பது சீன. இந்தியா ஏனையவற்றிடமிருந்து பொக்கிசமாகப் பெறப்பட்ட அறிவில்லாமல் எதுவுமேயில்லை. பாரம்பரிய அறிவை பொழிந்தெடுத்து. ஒழுங்குபடுத்தி அதை மேற்குலகு விஞ்ஞானம். தொழிற்சாலை. துப்பாக்கி. நவீன உடுபுடவை. மருத்துவ ஆக்க உரிமை. விவசாய தொழில்நுட்பம் என்றவாறு உரிமை கோரி அதையே எமக்கு விற்கிறது.

நாம் எமது வாழ்க்கை முறையை. சிந்தனையை மாற்ற வேண்டும் அல்லாவிடில் மனித சமுதாயமே சீரழிந்து போய்விடும்.

- சிறீ -

www.padippakam.com



# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும் [3]

"இருபது வருடங்களுக்கு மேலாக நாம் ஆயுதந் தாங்கி போராடியது இவர்களுக்காகத்தானா?" என்று தமிழ்த் தேசிய அரசியல் ஆய்வாளர் முதல் அன்றாடம் தமிழ்ப் புதினப் பத்திரிகைகளில் அரசியல் வாய் அலம்பும் தமிழ்ச் சாமானியர்வரை உரத்துக் கேட்பது எமது நெஞ்சை உறுத்துகிறது.

இந்தக் கூற்றுக்குப் பின்னால் உள்ள 'இவர்கள்' யார்? 'நாம்' யார்? 'இந்த இவர்களும் நாமும்' இணைய முடியாத இரு துருவங்களா? இவர்களும் நாமும் என்று பிரித்துப் பேசுபவர்களின் உள்ளத்தினுள்ளே ஒழிந்திருக்கும் தேசியத்தின் அடையாளம் என்ன? 'நாம்' என்று பேசுவோர் தம்முள்ளே இணை பிரியாத தன்னடையாளம் உடையோர்தானா? சாதி. சமயம். பிரதேசம். வர்க்கம். குடும்பம். பால் வேறுபாடுகளும் இரத்த உறவின் மீதான ஊடாட்டமும் ஒற்றுமையும் நுண்ணாய்வுகளில் இவ்வடையாளங்களைச் சிதைப்பதில்லையா? மிஞ்சியிருக்கும் 'நாம்' இல் எத்தனைபேர் தேறமுடியும்? பிரத்தியேகமாக கட்டமைக்கப்பட்ட 'நாம்' இல் எத்தனை பேர் சத்தியத்தின் அடிப்படையில் கட்டுண்டுள்ளனர் என்ற கணிப்பையாவது அறுதியிட்டுக் கூறுதல் என்ன அத்துணை சாத்தியமானதா?

ஆதிக்கக் கருத்தியலில் இந்த 'நாம்' என்பதற்கு அர்த்தம் தேடுதல் இயலாது. அவ்வாறு அர்த்தப்படுத்துதல் என்பது அடக்குவோரின் அதிகார மொழியில் புரியப்பட வேண்டியதாகும்.

'இவர்கள்' என்று பிரித்து வகைப் படுத்தல்-தன்மைப் பன்மையிலிருந்து பட்ர்க்கையில் பாகுபடுத்தல் என்பது ஒடுக்குமுறையாளரின் ஆதிக்கக் குரலேயன்றி ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக் குரலாக மாட்டாது.

'இதுவரை நாம் போராடியது இவர்களுக்காகத்தானா' என்ற குரலில் தொனிக்கும் தனிச் சொத்துடைமைச் சிந்தனையின் விபரீதத்தை விளங்கிக் கொள்வதில் எவருக்கும் அதிக சிரமமிருக்காது என நம்புகிறேன்.

சமூக முன்னேற்றத்துக்காக மனித குலத்தில் தோன்றிய விஞ்ஞானிகள் முதல் பல்வேறு அரசியல் ஞானிகள் வரை கண்டறிந்த முடிவுகள் - உண்மைகள் - கண்டுபிடிப்புகளை அவ்வவ் அறிஞர்களின் குடும்பத்தினருக்கோ. மதத்தினருக்கோ. பிரதேசத்தினருக்கோ அல்லது அவ்வத் தேசத்தினருக்கோ என்று மட்டும் நாம் தனியுடமை செய்ய முடியுமா? அவ்வறிஞர்களின் வாழ்வும் அர்ப்பணிப்பும் தியாகமும் தனிப்பட்ட ஒரு குழுமத்தினருக்கென்ற தனிச் சொத்தாக்கப் படக் கூடியதா? அவர்கள் கண்டிருந்த உண்மையும். நன்மையும் மனுக்குலம் முழுமைக்கும் மட்டுமன்றி இயற்கைக்கும் இப்பிரபஞ்சம் முழுமைக்குமே பொதுமையானது.

இருபத்தைந்து வருடங்களின் முன்னர் தமிழ் மக்கள் ஆயுதம் தாங்கி இன விடுதலைக்காகப் போராட வில்லை என்ற காரணத்தால் சிங்கள பேரினவாத அரசு தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தையோ. இனத் தன்னடையாளத்தையோ அங்கீகரிக்க மறுத்தமையை சரியாதென நியாயப்படுத்த முடியுமா? 1972 தேர்தலில் பௌத்தத்துக்கு முதன்மை கொடுத்தமை சரியாகுமா? போராடியவருக்கு மட்டுமா அல்லது போராடும் சமூகத்துக்கு மட்டுமா தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என அதன் பிரயோகம் குறுக்கப்படக் கூடியதா?

**முஸ்லீம்களுக்கு தேசிய அபிலாஷைகள் இல்லையா? இன்று ஈராக், நாளை ஈழம்?**

மாக்சிசும் - லெனினும் மனுக் குலத்துக்கு வழங்கிய சுயநிர்ணயம் பற்றிய கோட்பாட்டுக்கு தமிழ்த் தேசியவாதிகள் தமக்கு மட்டும் என்று உரிமை கோருவது எந்த இரத்த உரித்து வகையைச் சார்ந்தது? முடியுடை மூவேந்தர்கள் சுயநிர்ணய கோட்பாட்டை தமிழர்களுக்கு மட்டுமென்று தமது பொற்கால மனுநீதிகளில் போற்றிப் பாதுகாத்தனரா?

சுயநிர்ணயமும் தேசிய இனத் தனித்துவமும் இலங்கைத் தமிழர்கள் மட்டுமன்றி சிங்களவர்கள். மலையக மக்கள். முஸ்லீம் மக்கள் அனைவருக்கும் பொதுவான தீர்ப்பாகும். வேடர்கள். பறங்கியர்களுக்கும்கூட விரிவுபடுத்தப்பட வேண்டியதாகும்.

'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பது தனியே சைவ சமயத்தவருக்கு மட்டுமுரியதன்று. உலகப் பொதுவுடமையானது. உலகத்து மனிதர் அனைவருக்கும் பொருந்தக்கூடியது.

பொதுமக்கள். போராளிகள் என தமிழ்-முஸ்லிம்-சிங்கள மக்கள் தமது இன்னுயிரை பல்லாயிரக்கணக்கில் பலியிட்டு தியாகத்தீயில் ஏற்படுத்தப்பட்ட இன்றைய 'இரத்தம் சிந்தாத யுத்தம் என்ற அரசியல்' பேச்சுவார்த்தையும் அதன் பயன்களும் இந்த நாட்டின் மக்கள் அனைவருக்கும் சொந்தமானது என்பதில் இரண்டாம் பேச்சுக்கு இடமிருக்க முடியாது.

மலையக மக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டபோது தமிழ்த் தேசியவாதிகளின் தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம். 'இன்று இவர்களுக்கு. நாளை நமக்கு' என்று தீர்க்கதரிசனம் உதிர்த்தவராவார். இவ்வாறு தமிழ் பேசும் இலங்கைத் தமிழரை ஆரம்பத்திலேயே பாரபட்சமாய்ப் பார்த்த பழக்கம் ஆதிக்க சிந்தனை சார்பாய் அமைந்ததில் வியப்பில்லை.

தமிழரசுக்கட்சி முதல் தமிழர் விடுதலைக் கூட்டணி வரை தமிழ் பேசும் மக்கள் என்பதில் உள்ளடக்கப்பட்ட இலங்கை முஸ்லிம் மக்களை புறம் போக்காக்கி தமிழ் விடுதலை இயக்கங்கள் தம்மைத் தாழ்த்திக் கொண்ட குறுகிய தேசியத்தின் கோளாறுகள் களையப்பட வேண்டியது விடுதலையை நேசிக்கும் தமிழ் மக்களின் தலையாய பணியாகும்.

இன்று சதாம் ஹுசைன் அமெரிக்காவினால் ஈராக்கிலிருந்து அகற்றும் முயற்சியை வெறுமனே இஸ்லாமிய நாடென்ற கண்ணோட்டத்தில் தமிழ் தேசிய இயக்கங்கள் கணிப்பதும்-பாராபட்சமாக அமெரிக்க ஒடுக்குமுறையைக் கண்டிப்பதற்கோ அல்லது வருத்தம் தெரிவிப்பதற்கோ தயங்கியதும் வரலாற்றுத் தவறாகும்.

இன்று ஈராக்குக்கு நடந்தது நாளை ஈழத்துக்கு நடக்காது என யாரும் ஆரூடம் கூற இயலாது. இன்று பாக்தாத் நாளை யாழ்ப்பாணம் என்று நாம் எதிர்பார்க்காமல் இருக்க முடியாது.

தமிழ்த் தேசியவாதிகளின் உலகக் கண்ணோட்டம் அமெரிக்க வல்லரசின் பக்கமா? ஒடுக்கப்பட்டிருக்கும் தேசங்களின்-மக்களின் பக்கமா என்பதைத் தெளிவுபடுத்தவும் குரல் கொடுக்கவும் போராடத் தயார் செய்யவும் இன்னும் காலம் கடந்து விடவில்லை.

வானம் நோக்கி முகத்தை உயர்த்தாமல் நிலத்தை நோக்கி நெஞ்சை நிமிர்த்த தேசியவாதிகள் தயாராவரா?

ஒடுக்கப்பட்ட உலக மக்களோடு தம்மை இணைத்துக்கொள்ள தேசியவாதிகள் எப்போது முன்வருவர்!?

---

## சமாதானத்தின்...

1ம் பக்க தொடர்ச்சி..

தாக்கப்பட்டமை ஆகிய சம்பவங்களுக்கு அடுத்து கடற்பரப்பில் யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிப்பது பற்றிய சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இந்நிலையில் இலங்கையின் கடற்பரப்பில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டு பிரதேசத்தை அங்கீகரித்து யுத்த நிறுத்தத்தை முன்னெடுக்க வேண்டும் என்று யுத்த நிறுத்த சர்வதேச கண்காணிப்புக்குழு சிபாரிசு செய்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க தற்போது வழங்கியுள்ள கரையோர பாதுகாப்பிற்கான யுத்தக் கப்பல் போன்று இலங்கை அரசாங்கம் ஏற்கனவே இந்தியாவிடமிருந்து கொள்வனவு செய்துள்ளது. அதே போன்று இன்னும் இரண்டு கப்பல்கள் இருந்தால் இலங்கையின் கரையோர பாதுகாப்பை முழுமையாக உறுதி செய்ய முடியும் என்று அமெரிக்க கடற்படையினர் கூறியுள்ளதாக தெரிகிறது.

அத்துடன் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் முக்கியமானவராக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் விடுதலைப் புலிகளுக்கு விடுத்துள்ள எச்சரிக்கையும் அசட்டை செய்யக் கூடியதல்ல. மீண்டும் புலிகள் யுத்தத்தை தொடங்கினால் அமெரிக்காவும். இந்தியாவும் இலங்கை அரசாங்கத்திற்கு உதவும் என்று அண்மையில் அவர் கூறியுள்ளார்.

சமாதான பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும்போது மேற்படி நடவடிக்கைகளையும் இலங்கை அரசாங்கம் எடுத்து வருகிறது. அதிலும் இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்களை அமெரிக்காவிடம் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருபவர் மிலிந்த மொரகொட. இவர் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு மிகவும் விசுவாசமானவர் என்பது இவர் ஒரு அமெரிக்க உற்பத்தியுமாவார். அடுத்த ஒரு தசாப்தகால உலகத் தலைவர்கள் பட்டியலில் மிலிந்த மொரகொடவின் பெயரையும் அமெரிக்கா சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் நிரந்தரமான சமாதானம் ஏற்பட வேண்டு மென்பதோ. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை உறுதிசெய்யப்பட வேண்டும் என்பதே அமெரிக்காவின் அக்கறையாக இருக்க முடியாது. அதன் ஏகாதிபத்திய அக்கறைகளை பாதுகாக்கவும் உறுதிசெய்யவுமே இச்சூழ்நிலையை அது பயன்படுத்திக் கொள்கிறது அதற்கு துணைபோகும் மிலிந்த மொரகொட பற்றி சமாதானத்தில் உண்மையான அக்கறை கொள்பவர் கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

---




## மாக்ஸியமும் மனிதனின் சுற்றுச் சூழலும்

மாக்ஸ் முக்காலமும் உணர்ந்த முனிவரல்ல. அப்படிப்பட்ட முனிவர் எவரும் இருந்ததும் இல்லை. ஆனால் தனது காலத்தின் அறிவை வைத்து அவர் கண்டறிந்தவையும் எதிர்வு கூறியவையும் எவரையும் வியக்க வைக்கும். இந்த ஆற்றலை அவருக்கு வழங்கியது அவரது விஞ்ஞான ரீதியான ஆய்வு முறையும் மனித சமுதாய நலன் அவரது உலக நோக்குமே.

மாக்ஸயத்தை ஒரு வகையான வரட்டுப் பொருள் முல்வாதமாகக் குறுக்கிக் காட்ட விரும்புவோர் மாக்ஸின் காலத்திலிருந்தே இருந்து வந்துள்ளனர். இதனாலேயே மாக்ஸியத்துக்கு ஒரு 'ஆன்மிகப்' பரிமாணம் இல்லை என்றும் வெறும் பொருளாதாரமாகவே மனித சமுதாயத்தை ஆராய்கிறது என்றும் வாய்க்கு வந்ததை எல்லாம் கூறுவது ஒரு சடங்காக நடந்து வருகிறது.

மாக்ஸின் சுற்றுச் சூழல் பற்றிய அக்கறையும் ஏங்கல்ஸ் சிறப்பாகக் கவனஞ் செலுத்திய மனிதனுக்கும் இயற்கைக்குமுள்ள உறவு பற்றிய ஆய்வுகளும் இன்று அதிகம் வற்புறுத்தப்படாமை மாக்ஸியத்தைக் கொச்சைப்படுத்தும் முயற்சிகட்கு வலுவூட்டுகிறது.

மாக்ஸியம் மனிதரின் சுற்றுச் சூழல் பற்றிக் காட்டும் அக்கறை எனும் போது மாக்ஸியத்தின் மூலவர்களான மாக்ஸும் ஏங்கல்ஸும் காட்டிய அக்கறையையும் மாக்ஸியச் சிந்தனைக்குள் சுற்றுச் சூழல் பற்றிய அக்கறைக்குள் இடமும் முக்கியத்துவமும் பற்றி நாம் பேச வேண்டும். முதாவது விடயம் மறைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது விடயம் திரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாகச் சுற்றுச் சூழல் . பெண்கள் நலன். குழந்தைகள் நலன். பிற்படுத்தப்பட்டோர் நலன் என்ற பேர்களில் பிழைப்பு நடத்திப் பொருள் குவிக்கும் என்.ஜீ.ஓ.க்கள் இவ்வாறான விடயங்களில் தமக்கே முன்னுரிமை கோர விரும்புவதால். மற்ற எவரதும். குறிப்பாக. மாக்ஸியர்களது. பங்கை ஏற்க விரும்புவதில்லை.

சுற்றுச் சூழலின் பிரச்சினை ஒரு அரசியற் பிரச்சினை என்பதில் நமக்கு ஐயம் வேண்டாம். மனித நலன்கள் பற்றிய அக்கறை அடிப்படையில் சமுதாயம் பற்றிய அக்கறையாகும். எனவே. சமுதாயத்தைப் பாதிக்கும் எவ் விடயத்தையும் பற்றிப் பேசும் போது அரசியல் தவிர்க்க முடியாதபடி அங்கே இடம்பெறுகிறது. இன்று சுற்றுச் சூழல் பிரச்சினையை அரசியல் சாராத பிரச்சினையாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக தனியே சுற்றுச் சூழலியலாளர் என்று தம்மைக் கூறிக் கொள்ளும் சிலர் மாக்ஸியத்தை நிராகரிப்பதில் உள்ளனர்.

முதலில் மாக்ஸும் ஏங்கல்ஸும் சுற்றுச் சூழல் பற்றிக் கொண்டிருந்த பார்வையைக் கவனிப்போம். சுற்றுச் சூழல் பற்றி அவர்களது பார்வையை வெறுமனே அவர்கள் பயன்படுத்திய உவமைகளையும் படிமங்களையும் வைத்து நோக்கினால் இயற்கையை வெல்வது. இயற்கையை ஆள்வது என்பனவற்றை இயற்கையை மனிதனுக்குக் கீழ்ப்படுத்துவது என்ற கருத்திலேயே அவர்கள் பயன்படுத்தினர் என்ற மிகையாக எளிமைப்படுத்தப்பட்டுக் கொச்சைப்படுத்தப்பட்ட முடிவுக்கு வரலாம். மாறாக மனிதனுக்கும் இயற்கைக்குமிடையிலான உறவு பற்றிய தெளிவான பார்வையை மாக்ஸ் கொண்டிருந்ததையும் இயற்கையைச் சார்ந்தே மனிதன் இயற்கையின் ஒரு பகுதியே என்பதை அவர் வற்புறுத்தியதையும் அறியலாம்.

மாக்ஸும் ஏங்கல்ஸும் உற்பத்தியின் பெருக்கத்தைப் பற்றிய விமர்சனப்பாங்கான கண்ணோட்டத்தையே கொண்டிருந்தனர் என்பதுடன் மனிதன் இயற்கையுடன் கொண்டிருக்கும் பொருள் சார்ந்த உறவு கட்டுப்பாட்டிலிருக்க வேண்டியதையும் மாக்ஸ் தனது புகழ் பெற்ற 'மூலதனத்தில்' கூறியிருக்கிறார். அதே நூலில் அடுத்தடுத்து வரும் பரம்பரையினருக்காக இவ்வுலகைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய தேவையையும் மாக்ஸ் கூறியுள்ளார்.

முதலாளியம் பற்றிய தனது விமர்சனத்தில் சுற்றுச் சூழலுக்கு முதலாளியத்தால் நேரும் தீங்கு பற்றி அவர் அழுத்தம் வைக்காததற்கு முதலாளியம் சுற்றுச் சூழலை சீரழிக்கு முன்னமே பாட்டாளி வர்க்கத்தால் இல்லாதொழிக்கப்படும் என்ற அவரது எதிர்பார்ப்பு ஒரு முக்கிய காரணமாயிருந்திருக்கலாம். ஆனாலும் முதலாளிய விவசாயம் தொழிலாளியை மட்டுமன்றி மண்ணையும் சூறையாடுவது பற்றியும் அது மண்ணின் நிலைக்கக் கூடிய வளத்தைச் சிதைக்கும் என்பது பற்றியும் அவர் கூறியிருக்கிறார்.அவர் இக் கருத்துக்களை ஜேர்மனிய மண் இரசாயனவியலின் தந்தை எனப்படும் யூஸ்ற்றுஸ் ஃபொன் லீபிக் என்பவரது ஆய்வுகளை முன்வைத்தே கூறியிருந்ததும் கவனிக்கத்தக்கது என ஜோன் பெலமி ஃபொஸ்ற்றர் எனும் மாக்ஸியத் திறனாய்வாளர் தனது கட்டுரையொன்றில் விளக்கியிருக்கிறார்.

மாக்ஸ் பூமியை மனித இனத்தின் கணக்கற்ற பரம்பரையினது சமூக உடமையாகக் கருதியதால் பொருள் விரயத்தையும் கழிவுப் பொருள்களின் பெருக்கத்தையும் பற்றி எச்சரித்திருந்தார். இயற்கையின் இயங்கியல் என்ற நூலில். ஏங்கல்ஸ். மனிதர் இயற்கையை தமது ஆதிக்கத்துக்குட்படுத்துவதன் விளைவுகளைக் குறிப்பிடும் போது மனிதர் அயல் ஆக்கிரமிப்பாளர் போல நடந்து கொள்வதன் விளைவுகளை அழகாக விளக்கியுள்ளார்.

எப்படியாயினும். எவ்வாறு மாக்ஸோ ஏங்கல்ஸோ முதலாளியம் ஏகாதிபத்தியமாகி நவகொலனியமாகும் என்பதை நுணுக்கமாக ஆராய்ந்து எதிர்வு கூறியிருக்க முடியாதோ அவ்வாறே முதலாளியம் சுற்றுச் சூழலுக்கு இழைக்கும் அழிவுகளின் பரிமாணத்தை அன்று ஊகித்திருக்கவும் இடம் இல்லை. ஆனால் அவர்களது காலத்தின் சிந்தனையாளர்களுடன் ஒப்பிடுகையில் மனிதனுக்கும் இயற்கைக்குமுள்ள முரண்பாடு பற்றிய ஒரு தெளிவான பார்வையும் அம் முரண்பாடு ஒரு சினேக முரண்பாடாகக் கையாளப்பட்டிருக்க வேண்டிய தேவை பற்றியும் அவர்களே மிகவும் தீர்க்கமான பார்வையைக் கொண்டிருந்தனர் என்பதில் ஐயமில்லை.

ரஷ்யாவின் துரிதமான பொருளாதார விருத்தியின் விளைவாகச் சுற்றாடலில் பாதிப்புகள் ஏற்பட்டது உண்மை. ஆனால் தமது பொருளாதார விருத்திக்காகப் பிற நாடுகளைச் சூறையாடுகிற ஏகாதிபத்திய

நாடுகள் தமது சுற்றுச் சூழலின் மாசடைதல் பற்றிக் கவனங்காட்டத் தொடங்கிய அதேவேளை தமது ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகளில் சுற்றுச் சூழலின் சீரழிவுக்கு பெரும்பங்கு அளித்துள்ளனர். அதேவேளை.

தொடர்ச்சி மறுபக்கம்...

# ஐக்கிய நாடுகள் சபையா, ஐக்கிய அமெரிக்க சபையா?

ஐ.நா. சபையைப் பற்றி உலக நாடுகளின் தலைவர்கள் என்ன சொன்னாலும் உலக மக்கள் ஐ.நா.சபை மீது நம்பிக்கை இழந்து வெகுகாலமாகிவிட்டது. இன்னொரு விதமாகச் சொல்வதானால் ஐ.நா.சபை என்பது பாராளுமன்றங்களின் பாராளுமன்றம். வெட்டிப் பேச்சுக் காரர்களுக்கும் வீண்பொழுது கழியும் இடம்.

ஐ.நா.சபை மூலம் நியாயமான பிரகடனங்கள் பல வந்திருக்கின்றன. அங்கே நியாயமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் எந்த ஒரு உபயோகமான காரியமும் நடந்திருந்தால் அது அமெரிக்காவுடைய நன்மைக்காக மட்டுமே நடந்திருக்கின்றது.

எந்த விதமாகப் பாராளுமன்றங்களில் எவர் பதவியில் இருந்தாலும் அதிகாரம் ஆளும் வர்க்கத்திடம் இருக்கிறதோ அதே விதமாக. ஐ.நா. சபையில் யாரிடம் பெரும்பான்மை இருந்தாலும் அதன் பாதுகாப்புச் சபை எனப்படும் அதிகாரம் மிக்க அமைப்பில் யாரிடம் பெரும்பான்மை இருந்தாலும் அமெரிக்காவின் நலன்களை மறுத்து எதையும் செய்யமுடியாது.

என்னதான் சர்வதேச அமைப்பு என்ற தோற்றம் ஐ.நா. சபைக்கு வழங்கப் பட்டாலும் அது உண்மையில் பெரு முதலாளிய நாடுகளின். மேலும் சரியாகச் சொன்னால் ஏகாதிபத்திய நாடுகளின் நடுவே உள்ள முரண் பாடுகள் போராக வெடித்தெழாமல் உலகைத் தமக்குள் பங்கிடும் ஒரு வசதியாக உருவாக்கப்பட்ட லீக் ஒவ் நேஷன்ஸ் (தேசங்களின் அணி) என்ற அமைப்பின் தொடர்ச்சியே. முதலாம் உலகப் போரின் பின் உருவாக்கப் பட்ட இந்த அமைப்பு பயனற்றுப் போன பின்பே இரண்டாம் உலகப் போரின் பின்பு ஐ.நா.சபை உருவானது.

ஐ.நா.சபைக் கட்டிடம் நியூயோர்க்கில் அமெரிக்க மண்ணில் உள்ளது. இது அமெரிக்காவுக்கு ஒரு வாய்ப்பாக இருக்கிறது. அதைவிட ஐ.நா.சபையின் நிதியில் அமெரிக்காவின் பங்கு பிற நாடுகளை விடச் சிறிது அதிகம். அமெரிக்கா தான் வழங்க ஒப்புக் கொண்ட நிதியை வழங்குவதை வேண்டுமென்றே தாமதப்படுத்தி ஐ.நா. சபையை நிதி நெருக்கடியில் வைத்திருப்பதன் மூலம் அதன் மீது நெருக்குவாரத்தைச் செலுத்துகிறது.

அதைவிட. ஐ.நா.சபையோடு ஒட்டி உருவாக்கப்பட்ட பலவேறு சமூக சேவை நிறுவனங்களும் ஐ.நா.சபையின் பெரிய நிர்வாக இயந்திரமும் அதை நம்பியே பிழைப்பு நடத்தும் ஒரு வசதிபடைத்த நிருவாக வர்க்கத்தை உருவாக்கியுள்ளது. இவர்களில் ஒவ்வொரு நாட்டிலுமிருந்து வந்தவர்கள் இருந்தாலும் ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் மேலை நாடுகளிலிருந்து வந்தோரே உயர் பதவிகளில் பெரும்பான்மையினராவர். இந்த விதமான ஊழியம் பல சலுகைகளையுடையதும் வசதியானதும் குறுகிய காலச்சேவையின் பின் பெரிய ஓய்வூதியம் வழங்குவதுமாகும். எனவே ஐ.நா.நிருவாக வர்க்கத்தின் நலன்கள் பிற நிருவாக வர்க்கங்களை விட நெருக்கமாக ஏகாதிபத்திய நலன்களுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட தேசிய நலன்களை வலியுறுத்தியும் மூன்றாமுலக நாடுகளது நலன் சார்ந்தும் வாதிக்கப்பட்டாலும் மிகக் குறைந்த அளவிலேயே சலுகைகள் பெறப்படுகின்றன. எந்த விதமாக என்.ஜி.ஓக்கள் மூலம் மூன்றாமுலக நாடுகளில் தரும காரியங்களின் பேரில் ஒரு புல்லுருவிக் கூட்டம் பேணி வளர்க்கப்படுகிறதோ அவ்வாறே ஐ.நா. சபையும் ஒரு சர்வதேசப் புல்லுருவிக் கூட்டத்தைப் பேணி வளர்க்கிறது.

இனி ஐ.நா.சபை மூலம் சாதிக்கபட்ட வரலாற்று முக்கியம் வாய்ந்தவிடயங்களைக் கவனிப்போம். மக்கள் சீனக் குடியரசுதான் சீனாவின் ஏகப்பெரும்பாலான மக்களின் அரசாங்கம். அமெரிக்கா அதை அங்கீகரிக்க மறுத்து தாய்வானில் நிறுவப்பட்ட தனது அதிகாரத்துக்குட்பட்ட ஆட்சியையே சீனாவின் அரசாங்கமாக ஏற்றது. அது மட்டுமன்றி 1945ல் ஐ.நா. சபை நிறுவப்பட்ட நாள் முதலாக 1972வரை சீனாவுக்கு ஐ.நா. சபையில் அதற்குரிய இடத்தை மறுக்க அமெரிக்காவுக்கு இயலுமாயிருந்தது. 1976 அளவில் வியட்நாம் போர் காரணமாக அமெரிக்கா சர்வதேச ரீதியாகத் தனிமைப்பட்டிருந்ததும் மூன்றாமுலக நாடுகளின் விடுதலைப் போராட்டமும் அணிசேரா நாடுகளின் எழுச்சியுங் காரணமாக சீனாவின் ஐ.நா. அங்கத்துவம் சிறிது துரிதமடைந்தது. அதைவிட அமெரிக்க-சோவியத் கெடுபிடி யுத்த நடுவே சீன-சோவியத் முரண்பாடு முற்றிச் சோவியத் யூனியன் சீனாவை ராணுவ மிரட்டலுக்கு உட்படுத்தியதும் அமெரிக்காவுக்கும் சீனாவுக்குமிடையிலான உறவிற் சிறு நெகிழ்வை ஏற்படுத்தியது. இக்காலகட்டத்திலேயே மூன்றாம் உலக நாடுகள் தமது கடற் பிரதேசங்களின் எல்லைகளைத் தம் பொருளாதார வலயங்களாகப் பிரகடனம் செய்யவும் முடிந்தது. இந்த நிலை 1970களின் பிற்பகுதியில் தலைகீழாக மாறியது இன்னொரு விடயம்.

1950 அளவில் சோவியத் யூனியன் ஐ.நா. சபையைச் சில காலமாகப் பகிஷ்கரித்தது. அதைத் தனக்கு வசதியாகப் பாவித்த அமெரிக்கா. கொரியாவின் உள்நாட்டுப் போரில் தலையிட ஐ.நா. சபையைப் பாவித்து ஐ.நா. படைகள் என்ற பேரில் தனது படைகளை அனுப்பி வடகொரியாவில் ஆட்சியிலிருந்த கம்யூனிஸ்ட் அரசாங்கத்துக்கெதிராகப் போர் தொடுத்தது. இப்போரின் தொடர்ச்சியாக சீனா மீதும் மிரட்டல் விடுக்கப்பட்டது. இந்த நிலையில் சீனாவின் செஞ்சேனை வட கொரியாவின் படைகளுடன் இணைந்து போரிட்டு அமெரிக்க படைகளுக்கு நல்ல பதிலடி கொடுத்தது. அதன் பின்னரே அமைதிப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. எனினும் இன்னமும் தென் கொரியாவில் அமெரிக்கப் படைகள் நிலை கொண்டுள்ளன. பேரளவில் இன்னமும் வடகொரியாவுக்கும் தென் கொரியாவுக்கும் போர் முடியவில்லை.

காஷ்மீரப் பிரச்சினையில் ஐ.நா.சபையில் காஷ்மீரில் சர்வசன வாக்கெடுப்பில் காஷ்மீரின் எதிர்காலம் தீர்மானிக்கப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் பாதுகாப்புச் சபையில் 'வீற்றோ' அதிகாரம் இருந்த சோவியத்ஙள யூனியனின் ஆதரவு இருந்ததாலும் ஒரு பெரிய நாடானதாலும் இந்தியா இன்று வரை அந்தத் தீர்மானத்தை அலட்சியம் செய்துள்ளது.

கொங்கோவில் கொலனிய ஆட்சிக்கு எதிரான வெகுசன இயக்கத்தின் வெற்றியின் விளைவாக அதிகாரத்துக்கு வந்த பற்றிஸ் லுமும்பாவைப் பதவி நீக்குவதில் ஐ.நா.சபையின் பொதுச்செயலாளர் டாக் ஹமர்ஷீல்டும் அமெரிக்க சனாதிபதி ட்வைற் ஐஸன்ஹவரும் ஒத்துழைத்தனர். லுமும்பாவின் கொலை ஐஸன்ஹரின் ஆணையின் பேரிலேயே நிறைவேற்றப்பட்டது. ஆபிரிக்காவில் மிகவும் வலிய தொழிலாளி வர்க்க இயக்கத்தைக் கொண்டிருந்த நாடுகளில் தென்னாபிரிக்காவுக்கு அடுத்ததான கொங்கோ அதன் பின்பு முப்பத்தைந்து ஆண்டுகட்கும் மேலாக சர்வாதிகார ஆட்சியை அனுபவித்தது. அச் சர்வாதிகாரம் அமெரிக்க ஆட்சியுடனும் தென்னாபிரிக்க வெள்ளை நிறவெறி ஆட்சியுடனும் இணைந்து அங்கோலாவின் அமைதியைக் குலைத்து உள்நாட்டுப் போரை ஊக்குவித்தது முக்கியமான விடயம்.

ஐ.நா. சபையிலிருந்து தென் ஆபிரிக்கா வெளியேற்றப்பட்டதும் 1970களில்ள மூன்றாமுலக நாடுகள் பெற்ற ஒரு வெற்றியாகும். ஆயினும் தென்னாபிரிக்க நிறவெறி ஆட்சிக்கு எதிராக ஐ.நா. ச்பை எந்தவொரு ராணுவ

தொடர்ச்சி 11ம் பக்கம்

---

10ம் பக்க தொடர்ச்சி.....

சோஷலிஸ நாடுகளில் சுற்றுச் சூழலின் மாசடைதல் பற்றிய பிரச்சனை சமுதாயத்தின் பொதுவான நலனை முன்வைத்தே கவனிக்கப்படுகிறது. மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்கிற போக்கில் சுற்றுச் சூழல் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் பாதிப்புக்குட்பட்டாலும். முதலாளிய நாடுகளிற் போல அதைச் சரி செய்வதற்குத் தடையாக லாப நோக்கம் குறுக்கிடுவதில்லை. சோவியத் யூனியன் பல்வேறு அயல் நெருக்குவாரங்கட்குபட்டே சோஷலிஸத்தைப் பேண வேண்டியிருந்ததையும் அது 1945 வரை நேரடியான அயல் மிரட்டலுக்கும் போருக்கும் முகங்கொடுத்தது என்பதையும் மறக்கலாகாது ஸ்தாலினின் மறைவுக்குப் பின் நடந்தவற்றுக்கும் சோஷலிஸத்துக்கும் இருந்த உறவு பலவீனமாகத் தொடங்கிவிட்டது. சீனாவில் சுற்றுச் சூழல் பற்றி மாஓவின் தலைமை இருந்த காலம் வரை காட்டப்பட்டு வந்த அக்கறையை இப்போது முதலாளியம் தலை தூக்கிய பிறகு தான் பலரும் மெச்சத் தொடங்கியுள்ளனர்.

சில வரலாற்றுச் சூழல்களில் சுற்றுச் சூழலைப் பேணுவதற்குத் தடையாக மனித சமுதாய நெருக்கடிகள் அமையலாம். ஆயினும் சோஷலிஸ இயற்கையை மனிதனுடைய நேச சக்தியாகக் கருதுவது. எனவே இயற்கையைச் சிதைத்து சமுதாயம் விருத்தி பெறுவது என்பது சோஷலிஸ விரோதமானது. விருத்திக்கும் சுற்றுச் சூழலின் பேணலுக்கும் இடையே முரண்பாடுகள் உளளன. அவை பகை முரண்பாடாகுவது விருத்தி என்பதைக் கட்டுப்பாடற்ற நுகர்வுப் பெருக்கமாக்கும் போதுதான். முதலாளியம் தனது இருப்புக்காக நுகர்வைப் பெருக்கிக் கொண்டே போகிறது. எனவே சுற்றுச் சூழலின் மாசடைதல் முதலாளிய வளர்ச்சியினின்று பிரிக்க இயலாததாக உள்ளது.

இங்கேதான் சுற்றுச் சூழலியளாளர்கள் என்று தம்மைக் கூறிக் கொண்டு சமுதாய மாற்றத்துக்கும் சுற்றுச் சூழலின் ஆரோக்கியத்துக்கும் உள்ள உறவை மறுப்போர் தவறு செய்கின்றனர். இவர்களில் ஒரு பகுதியினர் என்.ஜி.ஓ.க்கள். இவர்களுக்குச் சமூகப் பிரச்சனைகள் எல்லாமே பணம் சம்பாதிக்கும் வழிகள்தாம். சமூக மாற்றத்துக்கான போராட்டத்தை மறுப்பதற்காகவே இவர்கள் சுற்றுச் சூழற் பிரச்சனையை அரசியல் கடந்த பிரச்சனையாகக் காட்டிச் சமுதாய மாற்றம் இல்லாமலேயே முற்றாகத் தீர்க்கக் கூடிய ஒன்றாகக் காட்டுகின்றனர்.

வேறொரு பகுதியினருக்கு சுற்றுச் சூழலே அடிப்படையான சமூக முரண்பாடாகத் தெரிகிறது. இதன் விளைவாகப் பசுமைக் கட்சிகள் எனப்படும் அரசியற் கட்சிகள் ஐரோப்பிய நாடுகளிற் தோன்றின. சீரழிந்த பாராளுமன்றக் கட்சிகளையும் வலதுசாரி அரசியலையும் பார்த்து அலுத்த மக்களுக்கு இப் பசுமைக் கட்சிகள் ஒரு வலிய மாற்றாகத் தெரிந்த போதும். இக் கட்சிகளால் சமுதாயத்தின் அடிப்படையான பிரச்சனைகள் பற்றிய ஒரு தெளிவான பார்வையை முன்வைக்க இயலவில்லை. ஜேர்மனியில் மட்டுமே பசுமைக் கட்சியினர் பல்வேறு இடதுசாரிக் குழுக்களைக் கொண்டிருந்த காரணத்தால் ஒரு மாற்றுச் சக்தியாகத் தோன்ற முடிந்தது. பிற பசுமைக் கட்சிகளை விட முற்போக்கானவையாகவும் முதலாளிய முறைக்கு எதிரான சில சிந்தனைகளைக் கொண்டிருந்ததாலும் மக்களிடையே குறிப்பிடத்தக்க ஆதரவை வென்ற ஜேர்மன் பசுமைவாதிகளால் சமுதாய மாற்றம் பற்றிய ஒரு வேலைத்திட்டத்தை வகுக்க இயலவில்லை.

சில மாநிலங்களில் யார் அதிகாரத்தில் இருக்கலாம் என்பதைத் தீர்மானிக்கும் வலிமையை பசுமைக் கட்சியின் பாராளுமன்ற ஆசனங்கள் அக் கட்சிக்கு வழங்கினாலும் பசுமைவாதிகள் பாராளுமன்றத்தின் மூலம் என்ன செய்ய முடியும் என்று இன்னமும் தெளிவாக இல்லை. பாராளுமன்றப் பாதையில் சோஷலிஸத்தை அடைய முடியாது என்பது உலக வரலாற்றில் பலமுறை நிறுவப்பட்டுவிட்டது. முதலாளியத்தினின்று பிரிக்க முடியாத ஒரு பகுதியான சுற்றுச் சூழல் மாசடைதலை எப்படி இல்லை. முதலாளியப் பாராளுமன்ற மூலம் செய்யலாம் என்பது பற்றி நான் மேலும் வினா எழுப்பத் தேவையில்லை.

சுற்றுச் சூழல் பிரச்சனைக்கும் முதலாளியத்துக்கும் உள்ள பிரச்சனையை உணர்கிற பசுமைவாதிகள் முதலாளியத்தை ஒழிக்காமல் சுற்றுச் சூழலைப் பேண முடியாது என்பதை ஏற்கிறார்களா? அப்படியானால் முதலாளியத்தை எவ்வாறு முடிவுக்குக் கொண்டு வருவது என்பதில் அவர்கள் கவனஞ் செலுத்துவார்களா? அப்போது. சுற்றுச் சூழலின் இன்றைய நெருக்கடி ஏகபோக முதலாளியத்தின் நெருக்கடி என்பதனையும் இரண்டுமே ஒரு பொதுவான புரட்சிகரத் தீர்வை நம்பியுள்ளன என்பது அவர்கட்கு விளங்கும்.

சோஷலிஸம் என்பதை வெறுமனே உற்பத்தி உறவுகளுடனும் விநியோகத்துடனும் யாந்திரிகமாக உறவுபடுத்துகிறவர்கள் சோஷலிஸத்தின் உண்மையான நோக்கங்களை விளங்கிக் கொள்ளாதவர்களே. வரட்டுத்தனமான மாக்ஸியத்திலிருந்து விடுபட்டு மாக்ஸியத்தை ஆக்கமான முறையில் பயன்படுத்தி விருத்தி செய்வதிலேயே மாக்ஸியத்தின் செழுமை இன்றுவரை தங்கி வந்துள்ளது. சுற்றுச் சூழல் மனித இனத்தின் நலனுடன் பல வேறு வகைகளில் நெருக்கமாக இருப்பதைப் புரிந்து கொண்டுள்ள மாக்ஸியவாதிகள் சுற்றுச் சூழற் பிரச்சனையை வர்க்கப் போராட்டத்தின் ஒரு பகுதியாக. சாதியம். ஆணாதிக்கம். தேசிய ஒடுக்குமுறை என்பன போன்று இன்னொரு பிரிக்க முடியாத கூறாகவே கருத முடியும்.

மாக்ஸியத்துக்குச் சுற்றுச் சூழல் பற்றிய அக்கறை இல்லை என்று கூறுகிறவர்களது நோக்கம் முதலாளியப் பெண்ணியவாதிகளதும் தலித்தியவாதிகளதும் குறுகிய தேசியவாதிகளினதும் நோக்கங்களிலிருந்து வித்தியாசமானதல்ல.

~ இமயவரம்பன் ~

---

# சிரியாவுக்கு எதிரான மிரட்டலா?

## ஈராக்கிலிருந்து கவனத்தைத் திசைதிருப்பும் முயற்சியா?



ஈராக்கில் இன்னமும் ஒழுங்கை நிறுவமுடியாதுள்ள அமெரிக்க-பிரித்தானிய ஆக்கிரமிப்பாளர்கள் அந்தச் சூடு தணிய முன்னமே சிரியாவை மிரட்டத் தொடங்கி யுள்ளனர்.

சிரியா ஈராக்கின் பேரழிவு ஆயுதங்களை ஒளித்து வைத்திருப்பதாகவும் ஈராக்கின் படையினருக்கும் சதாம் ஹுஸேனுக்கும் புகலிடங் கொடுத்திருப்பதாகக் குற்றஞ்சாட்டி அடுத்த நடவடிக்கை சிரியாவுக்கு எதிரானது என்று எச்சரித்துள்ளனர்.

இது இஸ்ரேலுக்கு எதிராக இஸ்ரேலின் அயலில் உள்ள ஒரே ஒரு வலிய அரசையும் கவிழ்க்கிற திட்டமா அல்லது இன்று ஈராக்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடி பற்றிய கவனத்தைத் திசை திருப்பும் முயற்சியா என்று சொல்வது கடினம்.

ஈராக்கில் ஏகாதிபத்தியவாதிகளின் பிரச்சினை உண்மையில் இப்போது தான் தொடங்கியுள்ளது. ஏனெனில் சதாமை முறியடிப்பது ஒன்றும் பெரிய காரியமில்லை. இப்போது புதிதாக உருவாகியுள்ள முரண்பாடுகளை அமெரிக்கா எப்படிச் சமாளிக்கும் என்பது பற்றி அமெரிக்க ஆதரவு சக்திகளுக்குள்ளேயே கவலை எழுந்துள்ளது.

வடக்கில் அமெரிக்க சார்பு குர்தியர்கட்குச் சாதகமான சுயாட்சி அமைந்தால் துருக்கியின் தெற்கில் உள்ள குர்தியர்கட்கு அத்தகைய உரிமை வலுக்கும். இது அமெரிக்காவின் கூட்டாளியான துருக்கியின் பிரச்சினை. ஷியா முஸ்லிம் பெரும்பான்மைச் சமூகத்துக்கு ஈரானுடன் நல்லுறவு உண்டு. ஷியா சமூகத்தைச் சேர்ந்த அமெரிக்க எடுபிடிகளை அதிகாரத்தில் அமர்த்தினால் ஷியா முஸ்லிம்களிடையே முரண்பாடுகள் வலுக்கும்.

ஏற்கெனவே சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட சதாமின் அடக்குமுறைப் பொலிஸின் உதவியை அமெரிக்கப் படைகள் நாடுகின்றன. இது சதாமுக்கு எதிரானவர்களை மகிழ்விக்காது.

அமெரிக்கா ஈராக்கின் எண்ணெய் வளத்தைச் சூறையாடத் தொடங்கும் போது அமெரிக்காவின் நண்பர்கள் என ஈராக்கில் அநேகர் மிஞ்சியிருக்க இடமில்லை.

அதுபோக. வியற்நாம் போர் தமக்குச் சாதகமாகப் போகவில்லை என்று 1969ல் அமெரிக்கப் படைகள் காம்போஜத்துக்குள் அனுப்பப்பட்டன. சிஹானுக் ஆட்சி தூக்கி எறியப் பட்டது. முடிவில் அமெரிக்கா காம்போஜத்திலும் வியற்னாமிலும் அவமான மிக்க தோல்வியையே அடைந்தது. எனவே சிரியா மீதான ஆக்கிரமிப்பு உண்மையில் அமெரிக்காவை மேலும் பலவீனப்படுத்தும் என்பது உறுதி.

ஆனால் தீயவர்கள் வரலாற்றிலிருந்து நல்ல எதையும் கற்பதில்லை

www.padippakam.com



# வடபுலத்து பொதுவுடமை இயக்கமும் தோழர் கார்த்திகேசனும்



இந்நூல் புதிய பூமி வெளியீட்டகத்தின் இன்னொரு பிரசவமாகும். புதிய-ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா.செந்திவேலின் இன்னொரு உருவாக்கமாகும். வட இலங்கையின் கம்யூனிஸ்ட் முன்னோடி தோழர் கார்த்திகேசனின் தனிப்பட்ட துதிப்பாடுவதாகவன்றி அவருடைய பங்களிப்பு அவருடன் இணைந்திருந்த. அவர் இணைந்திருந்த கூட்டு அரசியல். பண்பாட்டு இயக்கம் பற்றியதாக. கம்யூனிஸ்ட்டுகள் இலங்கைத் தமிழர் சமூகத்தின் வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள போராட்டப் பங்களிப்பு பற்றிய தகவல்களுடன் வெளி வந்திருக்கிறது.

இடதுசாரிகள்தான் எல்லாப் பிரச்சினைகளுக்கும் காரணம் என்று கூறிக் கொண்டு பாரிய இடதுசாரி எதிர்ப்பியக்கமொன்று தமிழ் மக்கள் மத்தியில் தொடர்ந்து முன்னெடுக்கப் பட்டு வருகிறது.' ஒரு சில இடதுசாரிகள் விட்ட தவறுகள். பாராளுமன்ற இடதுசாரிகள் என்று கூறிக் கொண்டு சிலர் செய்த தவறுகள் போன்றவற்றை எல்லாம் பெரிய அளவில் இடதுசாரிகளுக்கு எதிரான பிரசாரமாகக் கொண்டு உண்மையான இடதுசாரிகளும் கம்யூனிஸ்ட்டுகளும் செய்த சேவைகள். தியாகங்கள். அர்ப்பணிப்புகள் என்பவற்றை ஒரேயடியாக மூடிமறைத்து இருட்டடிப்புச் செய்யும் சதிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது. அவற்றுக்கெல்லாம் கம்யூனிஸ்ட்டுகள் தொடர்ந்து பதிலிறுத்து வந்திருக்கிறார்கள்.

இடதுசாரிகள். கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிராக செய்யப்பட்டு வந்த பொய் பிரசாரங்களுக்கும் மோசடியான குற்றச்சாட்டுக்களுக்கும் எதிராக பெறுமதியான ஆவணமாக 'வடபுலத்து பொதுவுடமை இயக்கமும் தோழர் கார்த்திகேசனும்' எனும் நூல் வெளி வந்துள்ளது.

தோழர் செந்திவேலோ. அவர் சார்ந்த கட்சியோ கடந்த காலத்தில் இடதுசாரிகள் என்போர் செய்த தவறுகள் எனப்படுவனவற்றை விமர்சன ரீதியாகப் பார்க்கத் தவறியதில்லை. அதேவேளை பொய்யான. மோசடியான குற்றச்சாட்டுக்களை அம்பலப்படுத்துவதற்கும் தயக்கம் காட்டியதில்லை.

இந்நூல் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலிறுப்பதாக மட்டுமன்றி மறைக்கப் பட்ட. மறுக்கப்பட்ட பல உண்மைகளை வெளிக் கொண்டு வந்திருக்கிறது. இதில் தமிழ் மக்களுக்கு எதிரான இன ரீதியான. சமூக ரீதியான அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுப்பதில் இடதுசாரிகளின் பங்கு எத்தகையதாக இருந்தது என்பதை விமர்சன ரீதியாகவும் நோக்கப்பட்டுள்ளது.

வடபுலத்தில் தொழிலாளர்களின் போராட்டங்கள். விவசாயிகளின் போராட்டங்கள் அடக்கப்பட்ட மக்களின் போராட்டங்களில் தமிழ் (தேசிய) தலைமைகள் எப்பக்கத்தில் இருந்தன என்பதை வரலாற்று சான்றுகளுடன் தோலுரித்து காட்டுவதில் இந்நூல் மேலும் ஒரு படி உயரத்தில் வைத்துப் பார்க்கப்பட வேண்டியதாகும். மேற்படி' போராட்டங்களில் இடதுசாரிகள் வகித்த காத்திரமான பங்கு பற்றியும். அவர்களின் தலைமை வழிகாட்டல் பற்றியும் அறிந்து கொள்வதற்கு இந்நூல் வழிகாட்டியாக இருக்கும்.

பொதுவாக இடதுசாரிகள் என்ற பதத்துள் அடக்கப்படும் சக்திகளில் உண்மையான மாக்சிஸ்ட் லெனினிஸ்டுகளை பிரித்தறிவதற்கும் இந்நூல் துணை புரியும்.

## சமாதான முன்னெ..

1ம் பக்க தொடர்ச்சி..

நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடி கூட்டத்திற்கு புலிகள் இயக்கத்திற்கு அழைப்பு விடுக்கப்பட வில்லை என புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஐ.தே.மு. அரசாங்கம் சமாதான முயற்சிகளில் பற்றுறுதியுடன் இருப்பதாக தொடர்ந்து அறிவித்து வந்த போதும் சமாதான நடவடிக்கைகளாக மேற்கொள்ளப்பட வேண்டிய மீளமைப்பு. மீள்குடியேற்றம் போன்றவை நடைபெறவே இல்லை. ஜீ.எல்.பீரிஸ். மிலிந்த மொரகொட போன்ற அமைச்சர்கள் பேரினவாத நிலைப்பாட்டிலும் ஏகாதிபத்திய சார்பான பெரு முதலாளித்துவ நிலைப்பாட்டிலும் நின்றே பேசியும் செயற்பட்டும் வந்தனர் என்பது வெளிப்படையானதாகும். மீண்டும் யுத்தம் ஏற்பட்டால் அமெரிக்காவும். இந்தியாவும் அரசாங்கத்துக்கு உதவுமென்று அடிக்கடி பீரிஸ் கூறி வந்தார். அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு ஏற்ற வகையில் இங்கு பாதுகாப்பை பலப்படுத்துவதிலும் ஏகாதிபத்திய அக்கறைகளை பாதுகாப்பதிலும் மிலிந்த மொரகொட செயற்பட்டு வருவதுடன் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

சிஹல உறுமய ஜே.வி.பி. மட்டுமன்றி பொதுஜன ஐக்கிய முன்னணியும் தற்போதைய சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராகவே கருத்துக்களைத் தெரிவித்து வருகிறது. மேலும் குழப்பமான பிரசாரத்தை ஏற்படுத்தி புலிகளின் அறிவிப்பு தொடர்பாக பாராளுமன்ற விவாதத்தை நடத்தும்படி கோரிக்கை விடுத்துள்ளன.

எனவே ஐ.தே.மு. அரசாங்கத்தின் உள்ளும் புறமும் இருக்கின்ற பேரினவாத. ஏகாதிபத்திய நலன்சார் சக்திகளின் இறுக்கமான போக்கே விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக விலகியிருப்பதாக அறிவிக்க நிர்ப்பந்திக்கப்பட்டது என்பதை விளங்கிக் கொள்வது கடினமன்று. பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக விலகியிருப்பதற்காக புலிகள் இயக்கம் எடுத்துரைத்துள்ள காரணங்களை ஏற்று அம்முட்டுக்கட்டைகளை அகற்ற வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

புலிகள் இயக்கத்தின் அதிருப்தியின் நியாயப்பாடுகளை விளங்கிக் கொண்டு மீண்டும் யுத்தத்தை செய்வதை விட வேகமாகவும் ஆழமாகவும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க அரசாங்கம் இணங்கிக் கொண்டவற்றை செய்வதே சரியானதாகும். அவற்றை செய்து முடிக்க தடையாக இருப்பவற்றை அகற்ற வேண்டும். அப்பேரினவாத. ஏகாதிபத்திய. பெரு முதலாளித்துவ தடைகளை அகற்றாமல் சமாதான நடவடிக்கைகளை அர்த்தமுள்ளதாக முன்னெடுக்க முடியாது.

சமாதானத்துக்கு எதிரான சக்திகளையும். சமாதான சூழ்நிலையை குறுகிய நோக்கங்களுக்கு பயன்படுத்தும் சக்திகளையும் நிராகரிக்காமல் ஐ.தே.மு. அரசாங்கம் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது. அரசாங்கம் அவ்வாறு செயற்படுமா அல்லது பேரினவாதிகளிடம் சரணடைந்து விடுமா?

## பொறியில்.....

8ம் பக்க தொடர்ச்சி..

இன்னொரு வரலாற்றுத் திரிப்பு யூதர்கள் பற்றியது. ஐரோப்பியக் கிறிஸ்துவ நிறுவனங்கள். பல நூற்றாண்டுக் காலமாகவே யூதர்கள் பற்றிய மோசமான படிமங்களை ஊக்குவித்து வந்துள்ளன. கிறிஸ்துவ சமூகத்துக்குள் ஏற்கப்படாது சேரிகளில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட யூதர்கள் நடுவிலிருந்தே மூலதனத்துக்கு தேவையான பண புழக்கத்தை இயலுமாக்கும் வட்டிக்குக் கடன் வழங்கும் முறை உருவானது. யூதர்கள் சிலராலேயே வட்டிக்குக் கடன் கொடுக்க முடிந்தது. ஆனால் ஷைலக் போன்ற பாத்திரம் (உண்மையில் வெனிஸ் நகர வணிகன் யூதனல்ல) யூத விரோத உணர்வின் ஒரு விளைவே. பொன்னம்பலத்துக்கு மட்டுமல்ல. சிவத்தம்பிக்கும். 'வெனிஸ் நகர வணிகன்' யூதனல்ல என்பது விளங்கவில்லை.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சி யூதர்களது வருகையால் ஏற்பட்ட ஒன்று என்பது இன்னொரு மயக்கம். முதலாம் உலகப் போருக்கும் இரண்டாம் உலகப் போருக்கும் இடைப்பட்ட காலமே அமெரிக்காவின் எழுச்சிக்கான காலம். முதலாம் உலகப் போரின் விளைவான ஐரோப்பிய நெருக்கடியை அமெரிக்கா எவ்வாறு பயன்படுத்தியது என்பது பற்றி நிறைய எழுதப்பட்டுள்ளது. யூதர்கள் பெருமளவில் அமெரிக்காவுக்குப் போனது. தேசியவாதத்தின் சிகரமான ஹிட்லரின் எழுச்சியின் பின்னாலேயே நிகழ்ந்த விடயம்.

புஷ். கிளின்டன். மொனிக்கா என்று அடுக்கும் போதும் மிலொஷெவிச்சை சி.ஐ.ஏ. ஏவலர்களுடன் வரிசைப் படுத்தும் போதும் தெரிவது அரசியல் நுனிப்புல் மேய்தல் என்றால். பனாமாவின் முன்னாள் சனாதிபதியும் சி.ஐ.ஏ. எடுபிடியுமான நொறியேகாவை மாஃபியா கூட்டத்தவன் எனும் போது தெரிவது. தகவல்கள் பற்றிய அசட்டையே. மாஃபியா என்பது இத்தாலிய-அமெரிக்க நிறுவனம். கெனடிக்கு இருந்த மாஃபியா உறவு கூட. நொறியேகாவுக்கு இருக்கவில்லை.

எழுதுகிற வேகத்தில் தான் ஏதோ பிழைகள் நேரலாம் என்றால். டொன் கிஹோவே (Dox Quixote) என்கிற காவியத்தின் ஆழமான தன்மையை உணராமல். அதை 'விகடச் சித்திர நாவல்' என்கிற போது. செர்வான்டீஸ் அதை விகடத்துக்காக எழுதவில்லை என்பதும் நாவலின் தோற்றம் காலத்தாற் பிற்பட்டது என்பதும் தெரியாமையே புலனாகிறது. (ராமாயணமும் சிலப்பதிகாரமும் நாவல்கள் என்று யாரும் சொன்னாலொழிய).

ட்ரோஜன் என்று ஒரு நகரே இல்லை. ட்ரோய் என்று ஒன்று இருந்தது. அதனின்று பெறப்பட்ட எழுவாய் விசேடனமே ட்ரோஜன்.

வேற்றுலக வாசிகள் வந்து போகும் விமானத்தின் விடிவில் u2 விமானம் அமைக்கப்பட்டதாகவுங் கூறப்படுகிறது. வேற்றுலக வாசிகளையோ அவர்களது விமானங்களையோ கண்ட யாராவது எனக்கு இதைத் தெளிவுபடுத்துவார்களா?

படைப்பின் பலமாக சிவத்தம்பி காணுகிற விடயமே. அதன் பலவீனம். தனது விரிந்த வாசிப்பையும் வேறுபட்ட விடயங்களை இணைத்துக் காட்டும் ஆற்றலையும் வெளிக்காட்டும் முயற்சியின் போக்கிலே படைப்பாளி தனது ஆழமின்மையை வெளிப்படுத்தி விடுகிறார்.

அமெரிக்காவின் இன்றைய அவலத்தை விளங்கிக் கொள்வதனால். ஏகாதிபத்தியத்தை விளங்கிக் கொள்ளாமல். அதைச் செய்ய இயலாது. பொன்னம்பலம் அதற்கு ஆயத்தமாக இல்லை.

தமிழில் எதையும் துணிந்து தவறாக எழுதலாம். இன்றைய இளைய தலைமுறையின் வாசிப்பின் போதாமையும் மூத்த தலைமுறையொன்றின் விமர்சனக் கண்ணோட்டமின்மையும் அதற்கு உடந்தையாக நிற்கின்றன. எனவே. தவறுகள். கண்டிக்கப்படுவதில்லை என்பதோடு. மெச்சவும் படுகின்றன. இதுவே ஈழத் தமிழ்ப் படைப்புலகின் இன்றைய அவலம்.

- சி.சிவசேகரம் -

## ஐக்கிய நாடுகள்....

10ம் பக்க தொடர்ச்சி..

நடவடிக்கையையும் எடுக்க முடியவில்லை. தென்னாபிரிக்கா மீது எந்த வணிகத்தடையும் நடைமுறைப் படுத்தப்பட இயலாததாக்குவதில் அமெரிக்காவும் பிரித்தானியாவும் தமது பங்கைச் செலுத்தி வந்தன.

இஸ்ரேல் அமெரிக்காவினது ஆதரவுடனே பலஸ்தீன மண்ணை ஆக்கிரமித்துள்ளது என்பது நாமறிந்தது. ஆனால் இந்த இஸ்ரேல் என்ற தேச அரசு ஐ.நா. சபையாலேயே 1948ல் பலஸ்தீன மண்மீது சுமத்தப்பட்டது. அதன் விளைவை இன்று வரை முழு மத்திய கிழக்கும் அனுபவிக்கிறது. இஸ்ரேலின் பல்வேறு ஆக்கிரமிப்புக்களும் கொடுமைகளும் பற்றி ஐ.நா. பொதுச்சபை நிறை வேற்றுகிற தீர்மானங்களில் எதுவுமே இதுவரை நிறைவேற்றப்பட்டதில்லை. இன்று வரை இஸ்ரேல் மீதான கண்டனத் தீர்மானங்கள் பலவற்றை நிறை வேறாமல் தடுப்பதிலும் அமெரிக்கா வெற்றி கண்டுள்ளது.

ஐ.நா.சபையின் எத்தனையோ தீர்மானங்களை மீறிய நாடான இஸ்ரேல் இன்று அணுஆயுதங்கள் உட்பட்ட பேரழிவு ஆயுதங்களைக் கொண்ட நாடு. ஆனால் இஸ்ரேல் ஆயுதப் பரிசோதனைகட்கோ ஆயுதத் தடைகட்கோ உட்படுத்தப்படவில்லை. ஏனெனில் ஐ.நா.சபையின் எசமானன்னான அமெரிக்கா இஸ்ரேலின் பாதுகாவலன்.

அமெரிக்காவால் நேரடியாகத் தலையிடுவதற்கு இடைஞ்சலாக உள்ள இடங்களில் அமெரிக்க நலன்களைப் பேண அல்லது புதிதாக நிலை நிறுவ ஐ.நா.படைகள் என்ற முகத்திரை தேவைப்படுகிறது. எங்கேயாவது அமெரிக்க ஆதிக்கத்துக்கு விரோதமாக ஐ.நா.படைகளின் நடவடிக்கை அமையுமானால் அமெரிக்கா அதை எப்படியும் குழப்பியே தீரும் என்பதை ஆபிரிக்காவின் பல்வேறு பகுதிகளிலும் நாம் கண்டுள்ளோம். சோவியத் யூனியனின் சரிவை அடுத்து அமெரிக்கா ஐ.நா. சபையைத் தன் பூரண அடிமையாகவே நடத்தி வருகிறது.

அமெரிக்காவை பொறுத்தவரை ஐ.நா. சபை அமெரிக்காவின் போர்களை அமெரிக்காவுக்காக நடத்த வேண்டுமானால் நடத்தலாம். நடத்த விரும்பாவிட்டால். அமெரிக்கா அப்போரை நடத்துவதற்கு வழி விடவேண்டும். 1991ம் ஆண்டு ஈராக் மீது தொடுத்த போரை ஐ.நா. அனுமதித்தது. ஆயினும் அப்போருக்குப் பின்னரும் ஈராக் மீதான பலவேறு நிர்ப்பந்தங்களை ஐ.நா. தீர்மானங்களை மீறியும் அமெரிக்கா நடைமுறைப்படுத்தி வந்துள்ளது. இது பற்றி ஐ.நா. சபையோ பாதுகாப்புச் சபையோ ஏதுமே செய்யவில்லை.

யூகோஸ்லாவியாவைப் பிளவுபடுத்துவதில் அமெரிக்க-ஐரோப்பிய நலன்கள் இணைந்தும் முரண்பட்டும் செயற்பட்டன. அங்கேயும் ஐ.நா.சபை என்ற பேரில் பேணப்பட்டவை அமெரிக்க நலன்களாகும்.

இன்று ஐ.நா.சபை அமெரிக்காவின் அடாவடித்தனத்துக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு மட்டுமே அதிகாரம் கொண்டது. ஐ.நா.பொதுச் சபையோ அதன் பாதுகாப்புச் சபையோ செயலாளர் நாயகமோ அமெரிக்க நலன்களை மறுத்து ஏதேன் செய்ய முற்பட்டால் அது முர்க்கத்தனமாகத் தடுக்கப்படும்.

ஐ.நா.சபையின் செயலாளர் நாயகமாக வருவதற்கு வலிய முக்கிய தகுதி அமெரிக்க அடிவருடியாக இருப்பதே. பூரணமான அடிவருடியாகவும் பிற நாடுகளது மரியாதைக்குரியவராயும் ஒருவர் இருப்பது கடினம். எனவே அமெரிக்காவுக்குச் சில வேளைகளில் தகுந்த அடிமை ஒருவர் அகப்படுவதில்லை. ஆனாலும் எந்தச் செயலாளர் நாயகத்தையும் வழிக்குக் கொண்டுவர அமெரிக்காவுக்கு இயலும். ஐ.நா.சபையின் நிதி மீது அமெரிக்காவுக்குள்ள கட்டுப்பாடு அதற்கு உதவுகிறது. தவறி ஒருவர் சிறிது சுயாதீனமாக நடக்க முற்பட்டால் அவரது சேவைக் காலம் நீடிக்கப்படமாட்டாது. இது தான் பூட்ரஸ் பூட்ரஸ் காலிக்கு நடந்தது. பூட்ரஸ் பூட்ரஸ் காலிக்கு நீடிப்பு மறுக்கப்பட்டதால் பதவிக்கு வந்த கோஃபி அனான் ஒரு நல்ல தொண்டராக அமெரிக்காவின் காரியங்களுக்குத் தடையில்லாமல் இங்கே ஒரு முகமும் அங்கே ஒரு முகமும் காட்டி நடித்துச் சமாளித்து வருகிறார்.

இதுதான் ஐ.நா.சபை. ஐ.நா.சபை மூலம் நாடுகளிடையிலான முரண்பாடுகள் தீர்வதில்லை. மாறாக அமெரிக்காவின் நலன்கட்கு ஏற்றவிதமாக அவை திசை திருப்பப் படுகின்றன. அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அம்பலப்படுத்தும்ஒரு மேடையாகக் கூட ஐ.நா.சபையின் பயன் ஒரு சராசரிப் பாராளுமன்றத்தையும் விடப் பலவீனமானது.

மூன்றாமுலக நாடுகளின் தலைவர்கள் அமெரிக்காவின் அடிமைகளாக உள்ளவரை ஐ.நா.சபையால் அமெரிக்க நாடுகளுக்கு எதுவிதமான மிரட்டலும் இல்லை. அதே போல ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் நியாயத்துக்கான போராட்டங்களுக்கும் ஐ.நா.சபையால் ஒரு பயனும் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



புதிய பூமி
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA PUTHIYA POOMI
சுற்று 10 மே 2003 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 58



யாழ்ப்பாணத்தி இராணுவ தளம் அமைக்கப்படும் பகுதியையே படத்தில் காண்கிறீர்கள்

# யாழ்ப்பாணத்திலும் அட்டனிலும் புரட்சிகர மேதினக் கூட்டங்கள்!

## புதிய ஜனநாயக கட்சியின் மேதின அறைகூவல்

உலகத் தொழிலாளர்கள் அனைவரும் இன மொழி மத நிற வேறுபாடுகளுக்கு அப்பால் ஐக்கியப்பட்டு ஒடுக்கு முறைகளை எதிர்த்து தமது உரிமைகளுக்காகப் போர்க்குரல் கொடுக்கும் சர்வதேச நாள் தான் மேதினமாகும். நூற்றிப்பதினேழு ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவின் தொழிலாளர்கள் எட்டு மணி நேர வேலை கோரி நடாத்திய வீரம் மிக்க தியாகம் நிறைந்த போராட்டங்களின் வாயிலாகவே மேதினம் பிறந்தது. அன்று உரிமை கேட்ட தொழிலாளர்களுக்கு அமெரிக்க முதலாளித்துவம் துப்பாக்கிக் குண்டுகளையே வழங்கியது. இரத்த வெள்ளத்தை ஏற்படுத்தி உயிர்களைப் பறித்தது. ஆனால் அமெரிக்கத் தொழிலாளர்களுக்கும் உலகத் தொழிலாளர்களும் இரத்தத்தால் சிவந்த செங்கொடிகளை உயர்த்தி முதலாளித்துவ ஒடுக்கு முறைகளுக்கு எதிராகப் போராட்ட உறுதி பூண்டு போராடி எட்டு மணி நேர வேலை என்பதை வென்றெடுத்தனர். அதன் தொடர்ச்சியே இன்று வரையான மேதின நிகழ்வுகளாக உலகம் பூராவும் வருடாவருடம் மே முதலாம் திகதி நினைவு கூரப்பட்டு வருகின்றது.

எமது மண்ணிலும் தொழிலாளர்கள். விவசாயிகள். ஒடுக்கப்பட்ட மக்கள் தமது உரிமைகளுக்காகப் போராடி வந்த வரலாறு உண்டு. அவர்கள் செங்கொடியின் கீழ் அணி திரண்டு போராடிப் பெற்ற உரிமைகளே இன்று வரை அனுபவிக்கப்பட்டும் வருகின்றன. இருப்பினும் கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் இடம் பெற்று வந்த பேரினவாத ஒடுக்குமுறை யுத்தம் காரணமாகத் தொழிலாளர்கள். விவசாயிகள். மீனவர்கள். பெண்கள் மற்றும் உழைக்கும் மக்களது வாழ்வு சிதைக்கப்பட்டு அழிவுகளைக் கண்டு கொண்டது.

இன்றும் கூட யுத்த நிறுத்தமும் சமாதான சூழலும் ஒரு தற்காலிக நிலையிலேயே இருந்து வருகின்றன. தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான நியாயபூர்வத் தீர்வு காணப்படாது விட்டால் யுத்த அபாயம் மீண்டும் ஏற்படவே செய்யும். ஆதலால் அரசியல் தீர்வின் அவசியத்தை மக்கள் சார்பாக நின்று வலியுறுத்த வேண்டியுள்ளது. ஒரு புறத்தில் சமாதான முன்னெடுப்புக்கள் இடம்பெறும் அதேவேளை மறுபுறம் அதனைக் குழப்பும் உள்நாட்டு வெளிநாட்டு சக்திகளின் முயற்சிகள் நடைபெறுகின்றன.

இன்றைய சமாதான சூழலைப் பயன்படுத்தி உள்நாட்டு பெரு முதலாளித்துவ சக்திகளும் அந்நிய ஏகாதிபத்தியவாதிகளும் தாராளமயம் தனியார் மயத்தின் மூலம் உலகமயமாதலை முன்தள்ளி வருகின்றன. இதனால் பொருளாதார. அரசியல். சமூக. கல்வி பண்பாட்டுத் துறைகள் அனைத்தும் சீரழிக்கப்பட்டு சின்னாபின்னப்படுத்தப்பட்டும் வருகின்றன.

மேலும் அமெரிக்கா தனது உலக மேலாதிக்கத்திற்காக இலங்கையைப் பல வழிகளிலும் பயன்படுத்தும் திட்டங்களுடன் செயற்படுகிறது. அதற்கு ரணில் தலைமையிலான ஆட்சி செங்கம்பளம் விரித்து வரவேற்பு வழங்கி வருகின்றது. இதில் மேற்குலகமும் யப்பானும் பங்குகொண்டு தமது பொருளாதார வர்த்தக முதலீட்டு நலன்களை நிலைப்படுத்திப் பாதுகாத்து வருகின்றன.

இதற்கு போட்டியாக இந்தியா இப்பிராந்தியத்தில் தனது மேலாதிக்கத்தை இறுக்கிக்கொள்ள இலங்கையை ஒரு முக்கியமையமாகக் கொண்டு செயற் படுவதைக் காணலாம். தற்போதைய பேச்சு வார்த்தையைக் குழப்புவதில் இந்தியா பேரினவாதிகளின் பக்கம் நின்று செயற்படுவதையும் காண முடிகின்றது.

நேரடியாகவும் மறைமுகமாகவும் அமெரிக்க இந்திய ஆதிக்கப் போட்டிகள் இலங்கையில் வலுவடைந்து வருகின்றன. இதற்கு இலங்கை தன்னையே பலியாக்க வேண்டிய நிலைக்கு வந்துள்ளது. சிங்கள மக்கள் தமது சுதந்திரம சுயாதிபத்தியத்தை இழக்கும் அபாயத்தை எதிர்நோக்குகின்றன. தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தைக் கை கழுவிக் கொள்வதற்கான நிர்பந்தத்தையும் எதிர்நோக்கி நிற்கின்றனர். இத்தகைய அரசியல் சூழல் ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டியதாகும்.

எனவே அரசியல் ரீதியில் சிந்தித்து தூர நோக்குடன் முடிவுகளை எடுத்து செயற்பட வேண்டிய ஒரு முக்கிய தருணத்திலேயே நாம் அனைவரும் இருக்கின்றோம். தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான அரசியல் தீர்வை வற்புறுத்தி. அமெரிக்க இந்திய மேலாதிக்க சக்திகளின் நோக்கங்களை எதிர்த்து தொழிலாளர்கள். விவசாயிகள். மீனவர்கள் மற்றும் உழைக்கும் மக்களின் உரிமைகளை வற்புறுத்தி இம் மேதினத்தில் அனைத்து நேர்மையான புரட்சிகர. இடதுசாரி. ஜனநாயக சக்திகளும் ஐக்கியப்பட்டு அணிதிரண்டு போராட்ட உறுதியினை எடுத்துக் கொள்வது அவசியமாகின்றது.

பேரினவாதத்தை எதிர்த்து தமிழ் முஸ்லிம் மலையகத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான அரசியல் தீர்வை வற்புறுத்துவோம்.

தொழிலாளர்கள் விவசாயிகள் மீனவர்கள். பெண்கள். அரசாங்க. தனியார்துறை ஊழியர்கள் என்போரது ஜனநாயக. தொழிற்சங்க. அடிப்படை வாழ்வுரிமைகளை வலியுறுத்துவோம்.

சொந்த இடங்களில் மீள் குடியேறுவதை. தொழில் புரிவதை. புனர்வாழ்வு. புனரமைப்பு முன்னெடுக்கப்படுவதை வற்புறுத்துவோம்.

பெருந்தோட்டங்களை மீள் குத்தகைக்கு விடும் நடவடிக்கைகளை கைவிட வேண்டும்.

அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவுக் கேற்ப தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வு உறுதிசெய்யப்பட வேண்டும்.

ஏகாதிபத்திய உலகமயமாதலையும் அந்நிய பல்தேசியக் கம்பனிகளின் ராட்சத ஊடுருவல்களையும் எதிர்ப்போம்.

அமெரிக்க ஏகாதிபத்திய உலக மேலாதிக்கப் போர் வெறியை அம்பலமாக்கி எதிர்ப்போம்.

இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க நோக்கங்களை எதிர்த்து நிற்போம்.

மேற்படி கோரிக்கைகளை முன்வைத்து புதிய ஜனநாயகக் கட்சி யாழ்ப்பாணத்திலும் அட்டனிலும் மேதினக் கூட்டங்களை நடத்துகிறது.

## தொண்டமான்....

2ம் பக்க தொடர்ச்சி..

அமைச்சர் சந்திரசேகரமும் மௌனம் காக்கிறார். அவரது அமைச்சருக்கு கீழ் கொண்டு வரப்பட அந்த தொழிற் பயிற்சி நிலையத்தில் புரியப்பட்ட ஏதேச்சாதிகார. ஜனநாயக விரோத. சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அச்சம்பவத்திற்கு பிறகு பயிலுநர் மாணவர்கள் அங்கு செல்வதில்லை. பயிற்சி வகுப்புகள் நடைபெறுவதில்லை. அதில் தொழில் புரிந்தவர்களின் எதிர்காலம் என்னவென்பதும். அவர்களது ஊதியத்தை யார் வழங்குவது என்பதும் தீர்க்கப்படாத பிரச்சினைகளாகி விட்டன. தற்போது அந்நிலையம் முற்றாகவே இயங்குவதில்லை.

ஜெகதீஸ்வரன் என்ற இ.தொ.கா. பிரமுகரின் தலைமையிலான இ.தொ.கா.வின் அந்நிலையத்தை ஆளுகின்றனர். சட்டபூர்வமாக அந்நிலையம் எவ்வமைச்சின் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பது தெரியவில்லை. தெரிந்து கொள்ளவோ. தெரிபப்படுத்தவோ யாரும் அக்கறைப்படுவதாக இல்லை.

மீளத்திறக்கப்படுமா என்பதும் சந்தேகமே! இந்நிலையில் அதனை திறந்து சீராக நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்யும்படி வலியுறுத்தி மக்கள் இயக்கங்களை முன்னெடுப்பதை தவிர வழியிருக்க முடியாது.

## காலம் பிந்திய...

7ம் பக்க தொடர்ச்சி

பன்முகப்பட்ட சதிகள் நடந்தன. சோவியத் யூனியனை வீழ்த்தும் சதியில் பாப்பரசர் முக்கிய பங்கை வகித்ததாக அவரே ஒத்துக்கொண்டுள்ளதாக செய்திகள் ஏற்கனவே வெளியாகியிருந்தன.

அவ்வாறான நிலைமையை ஏற்படுத்த காரணமாக இருந்துவிட்டு தற்போது அமெரிக்காவின் எதேச்சதிகாரம் பற்றிப் பேசுவதில் பயனில்லை.

உலகின் பெரும்பான்மையான மக்கள் இறைவனின் தூதுவராக மதிக்கும் பாப்பரசர் சோவியத் யூனியனை சிதைப்பதில் ஈடுபட்டிருந்தார் என்பதும். அதனால் தற்போது ஏற்பட்டுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியவாதத்தின் அத்துமீறல்கள் பற்றி தற்போது கவலைப் படுகிறார் என்பதும் சிந்திக்கப்பட வேண்டியதாகும்.

உலக நாடுகளின் பலத்தின் சமநிலை பேணப்படாவிட்டால் தற்போதைய நிலை அமெரிக்க ஏகோபித்த நிலை ஏற்படும் என்பது சர்வதேச அரசியலின் அடிப்படை ஆகும். இந்நிலை ஏற்படுவதற்கு துணைப் போனவர்கள் தீர்க்கதரிசிகளாக இருக்க முடியாது. இன்றைய நிலை ஏற்படுவதற்கு பாப்பரசர் துணை போயிருக்கிறார். ஆனால் தற்போது நிலவும் அமெரிக்காவின் ஏகபோக நிலையையும் எதேச்சாதிகாரத்தையும் பாப்பரசர் ஏற்றுக் கொள்பவராக இல்லை. இந்நிலைமை கிறிஸ்த்தவத்திற்கும் பாதிப்பு ஏற்படுத்தக் கூடியதென அச்சம் தெரிவித்துள்ளார்.

பட்ட பின்னால் வருகின்ற ஞானத்தால் பலனேதும் இல்லை என்று கூறுவார்கள்.

பாப்பரசர் சோவியத் யூனியனுக்கு எதிராக செயற்பட்டதற்கு காரணம் அவர் சோஷலிசத்திற்கு எதிரான போலந்து அரசியலில் முக்கிய பங்காற்றினார். அவர் கம்யூனிஸ்ட் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். அதன் வளர்ச்சியே அவர் சோவியத் யூனியனுக்கு எதிராக செயற்பட்டதற்கான காரணமாகும்.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு சமாதான போதனைகளால் மட்டும் பயன் ஏற்படாது. உலக சக்திகளின் நமநிலை பேணப்படவும் வேண்டும். அதை தற்போது பாப்பரசர் உணர்ந்து கொண்டுள்ளார். அதன்படி பார்க்கும் போது நேர்மையான கிறிஸ்த்தவர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை ஆதரிக்கமாட்டார்கள் என்ற முடிவிற்கு வரமுடியும்.




ஈராக்கிற்கு எதிரான அமெரிக்க நடத்திவரும் யுத்தத்தை எதிர்த்து யாழ் நகரில் புதிய ஜனநாயக கட்சி நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை படத்தில் காணலாம்.

வெளியிடுபவர் : இ. தம்பையா. இல. 47. 3ம் மாடி. கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட். கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட். 334A, K. சிறில் சி. பெரேரா மாவத்தை. கொழும்பு 13.

படிப்பகம்